Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.
30°C 28°C

பக்கம் 24 சுடர்: 28 கதிர்: 218 வள்ளுவர் ஆண்டு: 2044 ஆனி 18, செவ்வாய் 02.07.2013

இந்தியா

பக். 06
காஷ்மீரில் மீண்டும் பதற்றம்

உலகம்

பக். 07
அமெ. கண்காணிப்பில் ஐரோப்பா


விளையாட்டு

பக். 23
ஸ்பெயினை வீழ்த்தியது பிரேஸில்

# 2014 முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல்

## தீவிர ஆலோசனையில் மஹிந்த அரசு

கொழும்பு, ஜூலை 2
ஜனாதிபதித் தேர்தலை அடுத்த வருட முற்பகுதியில் நடத்துவது தொடர்பில் அரசு தீவிர ஆலோசனை நடத்திவருகின்றது என நம்பகரமாகத் தெரிய வருகின்றது.
இவ்விவகாரம் சம்பந்தமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது ஆலோசகர்களுடன் அண்மையில் மந்திராலோசனையில் ஈடுபட்டார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இதன் பிரகாரம் வடக்கு, வடமத்திய, மத்திய மாகாணங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் அடுத்ததாக அரசு ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



அதேவேளை, 2014இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என முன்னதாக உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் வெளியாகியிருந்தாலும், தற்போது அதை உறுதிப்படுத்தும் வகையிலான முக்கிய சில தகவல்கள் அரச உயர் மட்டத்திலிருந்து கசிந்துள்ளன.

இரண்டாவது பதவிக் காலம் முடிவடைவதற்கு ஜனாதிபதிக்கு இன்னும் காலமிருக்கின்றபோதிலும், அரசியல் நெருக்கடிகள், மக்கள் போராட்டங்கள், அரசுக்குள் ஏற்பட்டுள்ள முறுகல்நிலை உட்பட சில காரணிகளைக் கருத்திற்கொண்டே முன்கூட்டியே தேர்தலுக்கு அரசு செல்லவுள்ளது எனக் கூறப்படுகின்றது.
'13' ஆவது திருத்தச் சர்ச்சை, பொருளாதார நெருக்கடி உட்பட சில காரணிகளால் அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் எனக் கூறப்படும் நிலையில், மக்களை நாடிபிடித்துப் பார்க்கும் நோக்கிலும் இந்தத் தேர்தல் அமையலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
குறிப்பாக, அரசமைப்பில் மாற்றங்களை மேற்கொண்ட பின்னர், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான அறிவிப்பை அரசு உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் எனவும் தெரியவருகிறது. (த)

## '13' ஒழிப்பை கண்டித்து தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 2
13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கும் அரசின் நடவடிக்கையைக் கண்டித்து வலி.கிழக்குப் பிரதேச சபை தீர்மானம் 2 நிறைவேற்றியுள்ளது.
மாகாணசபை முறைமையை இல்லாதொழிப்பதற்கு அரசு எடுத்துவரும் நடவடிக்கைளைக் கண்டித்தே வலி. கிழக்குப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் ச.உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது.
இதன்போது 13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளைக் கண்டித்துச் சபையின் ஆளும்கட்சி உறுப்பினரான நவரட்ணம் ரூபதாஸ் தீர்மானம் கொண்டுவந்தார்.
இதனை ஆளும்கட்சி உறுப்பினரான கணபதிப்பிள்ளை துரைசிங்கம் முன்மொழிய, தம்பு ரவீந்திரன் வழிமொழிந்தார். இறுதியில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (த-5)

## புலிகள் மீதான தடைக்கு எதிரான மனு தள்ளுபடி

கொழும்பு,ஜூலை 02
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் விதிக்கப்பட்ட தடை நீடிப்பை எதிர்த்துத் தாக்கல் செய்திருந்த மனுவை சென்னை உயர் நீதிமன்றம் நேற்று திங்கள் கிழமை தள்ளுபடி செய்தது.
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ மற்றும் வழக்கறிஞர் புகழேந்தி ஆகியோரே இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை மத்திய உள்துறை அமைச்சகம் 2010 ஆம் ஆண்டு மே மாதம் நீடித்தது. இந்தத் தடை நீடிப்புச் சரி தானா என்பது குறித்து ஆராய்வதற்காக டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது.
அந்தத் தீர்ப்பாயம் விசாரணை நடத்தித் தடை நீடிப்புச் சரி தான் என்று 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தீர்ப்பளித்தது.
இந்தத் தீர்ப்பை ரத்துச் செய்யக் கோரி வைகோ மற்றும் வழக்கறிஞர் புகழேந்தி ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.
இந்த வழக்கின் தீர்ப்பை நீதிபதி எலிபி தர்மராவ் மற்றும் எம்.வேணுகோபால் ஆகியோர் நேற்றுத் திங்கட்கிழமை வழங்கினர்.
''புலிகள் மீதான தடையை நீடித்துப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு சரி தான் என்று வழங்கப்பட்டுள்ள தீர்ப்பில் தவறு இல்லை.அதனால், வைகோ மற்றும் வழக்கறிஞர் புகழேந்தி ஆகியோர் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது'' என்று அந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## கூட்டமைப்பின் முதல்வர் வேட்பாளர் இன்னும் தெரிவாகவில்லை: சம்பந்தன்

### மாவையைப் பரிந்துரைத்தது தமிழரசு யாழ். கிளை

யாழ்ப்பாணம், ஜூலை 2
வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மாவை. சேனாதிராசாவை நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டதாக வெளியான செய்திகளை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மறுத்துள்ளார்.
எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாவை. சேனாதிராசாவை முதன்மை வேட்பாளராகக் களமிறக்குவதென தமிழரசுக் கட்சியின் யாழ். கிளை தீர்மானித்துள்ளது' என்று இணையத் தளங்கள் மற்றும் மின்னியல் ஊடகங்கள் நேற்றுச் செய்தி வெளியிட்டன. ஆனால், அப்படி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.
''வடமாகாண சபைத் தேர்தல் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே, அதில் கூட்டமைப்புப் போட்டியிடுவதா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும்.

தொடர்ச்சி: பக்கம் 21

## மீற்றர் வட்டி, சீட்டுகளில் யாழ். மக்களே அவதானம்

### எச்சரிக்கிறார் மத்திய வங்கி அதிகாரி



யாழ்ப்பாணம்,ஜூலை 2
மீற்றர் வட்டி, பெருந்தொகைப் பணச்சீட்டுக்கள் போன்ற பாதுகாப்பற்ற நிதியியல் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் இருந்து விலகியிருப்பது மக்களுக்கு பாதுகாப்பானது என்று இலங்கை மத்திய வங் கியின் வட பிராந்திய முகாமையாளர் சண்.குறிஞ்சிதரன் தெரிவித்தார்.
வர்த்தகர் சங்கங்களின்

தொடர்ச்சி: பக்கம் 21

## தனியாரின் காணியில் பிக்குகளின் மடாலயம்

### கொக்கிளாயில் பணிகள் மும்முரம்

முல்லைத்தீவு, ஜூலை 2
கொக்கிளாயில் தனியார் காணியில் புத்தர் சிலை அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது விகாராதிபதிகளின் மடாலயம் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
தனியார் ஒருவரது உறுதிக் காணியிலேயே அடாத்தாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
கொக்கிளாய் பாடசாலைக்கு அருகில் உள்ள பொது மக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்த பிக்கு ஒருவர் புத்தர் சிலை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.
தற்போது அங்கு புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இதனை இந்த மாத இறுதியில் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் திறந்து வைக்கவுள்ளார்.
இவ்வாறானதொரு நிலையில் அங்கு பிக்குகள் தங்குவதற்குரிய மடாலயம் அமைக்கும் பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இடம்பெற்று வருகின்றன.
இதேவேளை, கொக்கிளாய் பகுதியில் 250 சிங்களக் குடும்பங்கள் உள்ளபோதும் அவற்றில் 4 குடும்பங்களே பௌத்த மதத்தைச் சேர்ந்தவை ஏனையவர்கள் கிறிஸ்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## எமக்கு இன்னும் நேரம் தேவை –ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை 02
தேசிய ஒருமைப்பாடு மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்றோம். மோதல்க

தொடர்ச்சி: பக்கம் 21

## மயிலிட்டி ஆலயங்களில் வழிபட ஒரு நாள் அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூலை 2
மயிலிட்டியிலுள்ள இந்து ஆலயங்களில் எதிர்வரும் 5 ஆம் திகதி மாத்திரம் சென்று வழிபடுவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. இதற்குரிய போக்குவரத்து ஒழுங்குகளை மயிலிட்டித்துறைக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் செய்துள்ளது.
1990 ஆம் ஆண்டு இடப்


தொடர்ச்சி: பக்கம் 21

## படையினர் பறிக்கும் ஆதனங்களின் விவரங்கள் திரட்டுகிறது நகர சபை

யாழ்ப்பாணம், ஜூலை 2
வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொது மக்களின் வீடுகள் தொடர்பான தகவல்களையும் ஆதனம் தொடர்பான விவரங்களையும் அனுப்பி வைக்குமாறு வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளர் ந.அனந்தராஜ் கோரியுள்ளார்.
வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் இராணுவம் மற்றும் பொலிஸார் கையகப்படுத்தியுள்ள வீடுகளை விடுவிப்பதுடன் அவற்றை உரிமையாளர்களிடம் கையளிப்பதன் மூலம் மீள்

தொடர்ச்சி: பக்கம் 21

# ‘நெற் கபே’களில் மூடிய அறை தடை



யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்.மாவட்டத்தில் செயற்படுகின்ற ‘நெற் கபே’ (Net cafe) களில் மூடிய அறைக்குள் வைத்து கணினிகள் பாவிப்பதைத் தடை செய்வது என்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பருத்தித்துறை பிரதேச சபையின் எதிரணித் தலைவர், யாழ்.மாவட்டத்தில் இயங்கி வருகின்ற பெரும்பாலான இணையச் சேவை நிறுவனங்களர் (‘நெற் கபே’க்கள்) மூடிய அறைக்குள்ளேயே கணினிகள் பாவிக்க அனுமதிக்கின்றனர்.

இதுவும் எமது பிரதேசத்தின் கலாசாரச் சீரழிவு நடவடிக்கைக்கு காரணமாகின்றது. எனவே அதனைத் தடை செய்து திறந்த வெளியில் கணினிகள் பாவிப்பதற்குரிய ஒழுங்கு முறைகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். (த-5)

# வடக்கில் தேர்தலை நடத்தினால் துண்டாடப்பட்டுவிடும் இலங்கை

## அத்துரலிய ரத்ன தேரர் அச்சம்

கொழும்பு,ஜூலை 02

வடக்கில் மாகாண சபை செயற்பட அனுமதித்தால் அது தனி நாடொன்றை உருவாக்கி, இலங்கையைத் துண்டாடிவிடும் என்று ஜாதிக ஹெல உறுமய அச்சம் தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் காலியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

> “மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநாட்டில் தமிழ் ஈழம் தான் தமது இலக்கு என்று தீர் மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள்.



தமிழ் மக்களுக்கு மாகாண சபை கிடைப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநாட்டில் தமிழ் ஈழம் தான் தமது இலக்கு என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். அவ்வாறான நிலையில் அவர்களின் கையில் மாகாண சபை அதிகாரம் கிடைத்தால் அதனைக் கொண்டு தனிநாட்டுக்கான வழியைத் தேடிக் கொள்வார்கள். அதனைத் தான் நாம் எதிர்க்கின்றோம் என்றும் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

மாகாண சபையை ஆதரிக்கும் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித, மாகாண சபைகளின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப் படாவிட்டால், பேரழிவாவியில் மட்டும் தான் மீன்பிடிக்க வேண்டியிருக்கும் என்றும் அத்துரலிய ரத்ன தேரர் கூறினார். (த)

# கருத்தடை மாத்திரைகளை சிங்களவரே பயன்படுத்தாதீர்

## பொதுபல சேனா கோரிக்கை

கொழும்பு,ஜூலை 02

சிங்களவர்கள் கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்த வேண்டாம் என பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கட்டுநாயக்காவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்கள் தற்போது அவர்களின் இனத்தைக் கட்டியெழுப்பி, வர்த்தகம் உட்பட அனைத்துத் துறைகளிலும் மிகவும் சூட்சுமமான முறையில் தமது விரிவுபடுத்தலை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஊடாக உலக இஸ்லாமிய அடிப்படைவாத்துக்கு நாட்டைக் கொண்டு செல்ல அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.



> “முஸ்லிம் வர்த்தகத்தைப் பகிஸ்கரிக்குமாறும் முஸ்லிம் மருந்துவர்களை நிராகரிக்குமாறும் ஞானசார தேரர் இதன்போது கூறியுள்ளார்.

எனவே சிங்களவர்கள் கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்த வேண்டாம் எனத் தேரர் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன், முஸ்லிம் வர்த்தகத்தைப் பகிஷ்கரிக்குமாறும் முஸ்லிம் மருந்துவர்களை நிராகரிக்குமாறும் ஞானசார தேரர் இதன்போது கூறியுள்ளார். (த)

# சிப்பாயின் 500 கிலோ மீற்றர் நடைபயணம்

யாழ்ப்பாணம், ஜூலை 02

தெல்லிப்பழையில் அமைக்கப்பட்டு வரும் புற்றுநோய் வைத்தியசாலை மற்றும் மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு உதவும் முகமாக 500 கிலோ மீற்றர் நடைப்பயணத்தை தென்பகுதி இளைஞர் ஒருவர் மேற்கொண்டு வருகின்றார்.

கடந்த மே மாதம் 30 ஆம் திகதி தொந்தற என்ற இடத்திலிருந்த மேஜர் ரூவான் ரணதுங்க என்ற இராணுவச் சிப்பாய் இந்த நடைப்பயணத்தை ஆரம்பித்துள்ளார். 45 நாள்களில் 500 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து பருத்தித்துறையை அடையவுள்ளார்.

இந்த நடைப்பயணத்தின் மூலம் திரட்டப்படும் நிதி, தெல்லிப்பழையில் அமைக்கப்பட்டு வரும் புற்றுநோய் வைத்தியசாலைக்கும்,மகரகம தேசிய புற்று நோய் வைத்தியசாலைக்கும் வழங்கப்படவுள்ளது.

தற்போது அனுராதபுரத்தைக் கடந்து மதவாச்சியை கடந்துள்ள அந்தச் சிப்பாய் துணுக்காய், பூநகரி, மன்னார் ஊடாக பருத்தித்துறையைச் சென்றடையவுள்ளார். (ஓ-5)

# மூன்று தடவை கோரியும் கிடைக்கவில்லை மன்னிப்பு

## வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 2

வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் தனது தவறுக்காகச் சபையில் மூன்று தடவைகள் பகிரங்க மன்னிப்புக் கோரிய போதும் அதை ஏற்றுக் கொள்ள மறுத்த சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள், செயலாளர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுச் சபைக்கு முன்பாகவே, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் காட்டுமிராண்டித் தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் ஏப்ரல் மாதத்துக்கான கூட்டம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

கடந்த இரு மாதங்களுக்கு முன்பு சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சபைச் செயலாளரால் வாசிக்கப்பட்ட அநாமதேயக் கடிதம் தொடர்பில் ஆளுங்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சபை உறுப்பினர்களால் சர்ச்சை கிளப்பப்பட்டது.

வழமை போன்று சர்ச்சைகளைக் கிளப்பும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பீடத்தால் நியமிக்கப்பட்ட ஒழுங்காற்றுச் சபை உறுப்பினர்கள் முன்பாகவும் சர்ச்சைகளைக் கிளப்பி சபையின் கூட்டத்தைக் குழப்பினர்.

சபையின் செயலாளர் இரு மாதங்களுக்கு முன்னர் வாசித்த அநாமதேயக் கடிதத்தை தம்மிடம் தருமாறு ஆளுங்கட்சி உறுப்பினரான சு.பரமகுரு கோரினார்.

இதன்போது செயலாளர் தான் குறித்த கடிதத்தைத் தொலைத்து விட்டதாகத் தெரிவித்ததுடன் அதற்காகப் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார்.

இதனைப் பொருட்படுத்தாத ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சபைச் செயலாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதன்போது மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினரான சி.கனேசவேல் தவறு செய்யாதவர்கள் என்று எவரும் கிடையாது எனவே தான் செய்த தவறு தொடர்பில் செயலாளர் பகிரங்க மன்னிப்புக் கோரியிருப்பதால் ‘மன்னிபோம் மறப்போம்’ என்ப தற்கமைய அவரை மன்னிப்போம் என்றார்.

இதனை ஏற்றுக் கொள்ள மறுத்த ஆளுங்கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் சபை செயலாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாதாடினர்.

இதையடுத்து செயலாளரின் செயற்பாடு குறித்து உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுச் செயலாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. (த-5-115)

# இராமேஸ்வரம் மீனவர்கள் இந்தியாவிடம் ஒப்படைப்பு

கொழும்பு,ஜூலை 02

இராமேஸ்வரம் மீனவர்கள் நால்வர் இந்தியக் கடற்படையினரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் 4 பேர் சென்ற படகில் பழுது ஏற்பட்டதால் அவர்கள் நடுக்கடலில் தத்தளித்து வந்தனர். அவர்களை இலங்கைக் கடற்படையினர் மீட்டு முகாமில் தங்க வைத்தனர். இந்நிலையில், அந்த 4 மீனவர்களையும் நேற்று இலங்கைக் கடற்படைசர்வதேச எல்லையில் இந்தியக் கடற்படையிடம் ஒப்படைத்தது. (த)

# வீதி மூடப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

தென்மராட்சி, ஜூலை 02

மீசாலைப் பகுதியில் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வந்த வீதியினை ரயில் பாதை அமைப்பதற்காக மூடப்படுவதை எதிர்த்து அதன் பகுதிமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மீசாலை ரயில் நிலையத்துக்கு மேடை அமைப்பதை விஸ்தரிப்பதற்கு நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த மில் வீதியை மூடுவதற்கான பணிகள் நடைபெற்ற வேளையில் மக்கள் அங்கு திரண்டு வீதியை மூடவேண்டாம் எனத் எதிர்ப்பை தெரிவித்தனர்.

நூற்றுக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார். ஆர்ப்பாட்டம் குறித்து அறிந்த அமைச்சர்டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோர் அங்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் உரையாடி வேலையை இடைநிறுத்தியது டன் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தனர். அதனையடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

தென்மராட்சி பிரதேச செயலர், சாவகச்சேரி நகரசபை பிரதித் தலைவர் ஆகியோரும் அங்கு வந்திருந்தனர். (த-9)

# கனடாத் தமிழ் விழாவில் மோதல் தவிர்ப்பு வலயம்

## அதன் இயக்குநர் கெலும் மக்றேயும் உரை

ரொறன்ரோ,ஜூலை 02

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும் தனடியத் தமிழர் பேரவையும் இணைந்து வழங்கும் 26 ஆவது தமிழ் விழா எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை ரொறன்ரோ சொனி நடுவத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்த நிகழ்வில் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சனல்-4 தொலைக்காட்சியின் ‘மோதல் தவிர்ப்பு வலயம்’ ஆவணப் படம் காண்பிக்கப்படுவதோடு அதன் இயக்குநர் கெலும் மக்றேயும் நேரடியாகப் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

இலங்கை அரசினால் 2009 இல் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகளை ஆவணப்படுத்துவதோடு அதை உலகுக்கு ஆதாரங்களோடு எடுத்துரைக்கும் ஆவணப்படமே ‘மோதல் தவிர்ப்பு வலயம்’ ஆகும். பல நாடுகளிலும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்திலும் இப்படம் ஏற்கனவே திரையிடப்பட்டது.

ஈழத்தமிழரையும் தமிழ் நாட்டுத் தமிழரையும் அவர்கள் புலம்பெயர்ந்த தேசமொன்றில் இணைக்கும் பாலமாக அமையும் பெற்னா தமிழ் விழாவில் அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்றவகையில் இயல் இசை நாடக நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (த)

# கிணற்றில் தவறி விழுந்து வயோதிப் பெண் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 02

வீட்டுக் கிணற்றில் அதிகாலை வேளை தண்ணீர் அள்ளச் சென்ற வயோதிபப் பெண் தவறிக் கிணற்றுக்குள் விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

மூளாய் ஆஸ்பத்திரி வீதியில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த ஜெமினி சுரேந்திரா பேபி சறோஜா (வயது-78) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸார் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4-78)

## வர்த்தக நிலையங்களுக்கு 'சீல்' சுகாதாரத்தை பேணாததால்

கிளிநொச்சியில் சுகாதார நடைமுறைகளை மீறி இயங்கி வந்த இரு உணவகங்களுக்கு கடந்த 27 ஆம் திகதி' சீல் ' வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு ஏ-35 வீதியின் முரசுமோட்டையில் இயங்கி வந்த உணவகம் ஒன்றும், ஏ-9 வீதி கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அருகில்இயங்கிவந்த உணவகம் ஒன்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத தால் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

குறித்த உணவகங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீர் உரிய முறையில் பாதுகாப்பான குழியில் விடப்படாமல் தொடர்ந்தும் வெளியில் தேங்கவிடப்பட்டமையால் தொற்று நோய்கள் பரவும் ஏதுவான சூழல் காணப்பட்டதையடுத்து, இரு வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது. (வ-6)

## சாவகச்சேரி கடையில் ஞாயிறு இரவு திருட்டு

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள கைத்தொலைபேசி விற்பனை நிலையம் நேற்று முன்தினம் ஞாயிறு இரவு திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளது.

இரவு கூரைத் தகட்டைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்த கையடக்கத் தொலைபேசிகள் உட்பட பெறுமதி மிக்க பொருள்களைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து மோப்ப நாய்களுடன் வந்த பொலிஸார் பார்வையிட்டனர்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிக்கு அருகில் டச்சு வீதியில் உள்ள கடையிலேயே திருட்டு இடம்பெற்றுள்ளது. சுமார் 10 லட்சம் பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-9)

## சாவகச்சேரி டச்சு வீதியில் கூடும் கும்பலின் அடாவடி

சாவகச்சேரி, ஜூலை 2

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள வர்த்தக நிலையத் துக்கு முன்பாக இரவு வேளையில் கூடும் இளைஞர் கும்பலினால் சிரமங்களை எதிர்நோக்குவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பொது மக்களுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தும் வகையில் கூக்குரலிடுவதும் , வீதியில் செல்வோருடன் அநாகரிகமான முறையிலும் இந்தப் பேர்வழிகள் நடந்து கொள்வதாகவும் தெரிவித்தனர்.

இவர்களின் அட்டகாசங் களைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள மண்டபத்துக்கு முன்னால் உள்ள மூடப்பட்ட வர்த்தக நிலையத்தில் கூடும் கும்பலே அடாவடித்தனமாக நடந்து கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)

# 'பவ்ரல்' நடமாடும் சேவையில் பயனடைந்த 5,428 பேர்



தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சேவையில் பங்குபற்றிய ஒருபகுதி மக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்.மாவட்டத்தில் கடந்த மாதம் 3 பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட 'பவ்ரல்' அமைப்பின் நடமாடும் சேவையில் 5 ஆயிரத்து 428 பேர் பயன்பெற்றுள்ளதாக அந்த அமைப்பின் நிகழ்சித் திட்டப் பணிப்பாளர் சபாநாயகம் சிறீதரன் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் தேசிய அடையாள அட்டை இல்லாத, தொலைத்தவர்கள் அதிகளவானோர் இருப்பது இனங்காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து வடமாகாணத்தில் நடமாடும் சேவையின் ஊடாக தேசிய அடையாள அட்டையைப் பெற் றுக் கொடுக்கும் நடவடிக்கை கள் 'பவ்ரல்' அமைப்பால் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த மாதம் யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 3 தினங்கள் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் 2 ஆயிரத்து422 பேரும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 601 பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 405 பேரும் பயன்பெற்றுள்ளனர்.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் நடந்த நடமாடும் சேவையில் 280 பேரும், ஜெயபுரத்தில் 440 பேரும், மன்னார் மாவட்டத்தில் அடம்பன் பிரதேசத் தில் ஆயிரத்து 617 பேருமாக, 2 ஆயிரத்து 337 பேர் பயன் பெற்றுள்ளனர்.

வடமாகாணம் முழுவதுமாக 7 ஆயிரத்து 765 பேர் பயன் பெற்றுள்ள னர்.

இதன் தொடர்ச்சியாக இந்த மாதம் எதிர்வரும் 9ஆம் திகதி வரையில் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் நேற்று ஆரம்பமான நடமாடும் சேவையில் 800 பேர் வரையில் பயன் பெற்றுள்ளனர். இன்றைய தினமும் தெல் லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் நடமாடும்சேவை இடம்பெறவுள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள், தொலைத்தவர்கள் இதன்மூலம் பயன் பெற முடியும் என்று தெரிவித்தார். (வ-5)

# 'உள்ளூராட்சி சபைகளின் பிரதம நிர்வாகி அவற்றின் தவிசாளர்கள் மட்டுமே'

## சட்ட வல்லுநர் ஹெட்டியாராச்சி கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 2

'' இலங்கையில் செயற்படும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகச் செயற்படுவரும், பொறுப்பும் வகையும் கூறவேண்டியவர்களும் அந்தந்தச் சபைகளின் தவிசாளர்களே அன்றி வேறு எவருக்கும் சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அதே வேளை அந்தந்தச் சபைகளின் செயலாளர்கள், தவிசாளர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதுடன், சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு செயலாளர்களிடம் உள்ளது''

அண்மையில் கொழும்பு திம்பிரிகஸ்யாயவில் அமைந்துள்ள ஜானகி ஹொட்டலில் உள்ளூராட்சி மன்றங்களின் சில தெரிவு செய்யப்பட்ட தலைவர்களுக்காக மனித உரிமை இல்லத்தினால் நடத்தப்பட்ட இரண்டு நாள் கருத்தரங்கில் வளவாளராகக் கலந்து கொண்ட பிரபல சட்டவாளரான டி. பி.ஹெட்டியாராச்சி உள்ளூராட்சி அதிகார சபைக ளின் வகிபாகம், அதிகாரங் கள், கடமைகள், செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாகக் கருத்துரை வழங்கும் பொழுது தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட கருத்தரங்கில் பல்வேறு வினாக்களுக்குமான தெளிவான விளக்கங்கள் அவரால் வழங்கப்பட்டன. வடமாகாணத்தில் இருந்து கலந்து கொண்ட தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களைச் சிறப்பாக நடத்துவதில் உள்ள தடைகள் மற்றும் தலையீடுகள் பற்றியும்,அரசாங்க சுற்றறிக்கையில் குறிப்பிட்டதற்கு மாறாக உள்ளூராட்சி ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் பல சபைகளில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளமை பற்றியும் தெரிவித்தனர். அண்மையில் உள்ளூராட்சிச் சட்டத்தின் 21 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பாக காசோலைகளில் கையொப்பமிடுவதற்காக எவரேனும் இரண்டு அலுவலர்களைச் சபை தெரிவுசெய்து அனுப்ப வேண்டுமென்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டதற்கு மாறாக செயலாளரும், கணக்காளரும் கையொப்பமிடுவதற்கேற்ப சபை அத்தகையவர்களின் பெயர்களைப் பரிந்துரை செய்து அனுப்புமாறு விடுக்கப்பட்ட பணிப்புரை தொடர்பாகவும் கருத்துத் தெரிவித்தார்.

'' அரசாங்க சட்டத்திற்கு மாறாக அதில் மாற்றம் செய்யும் வகையில் வேறொரு சுற்றறிக் கையை அனுப்பும் அதிகாரம் ஆணையாளருக்கு இல்லை. அதே வேளை இந்தத் திருத்தச் சட்டத்தில் காசோலை தொடர்பான திருத்தம் தவிர்ந்த ஏனைய திருத்தச் சட்டங்கள் யாவும் எதிர்காலத்தில் நடைபெறப் போகும் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட சபைக்கே செல்லுபடியாகும் என்றும், 2011 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை 2012 ஆம் ஆண்டின் திருத்தச்சட்டம் கட்டுப்படுத்தாது'' என்றார் ஹெட்டியாராச்சி.

இரண்டு நாள்கள் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகப் பிரச்சினைகள் தொடர்பாகப் பல்வேறு தலைப்புக்களில் விரிவுரைகளும் செயல மர்வுகளும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-8)

# டெங்கு ஒழிப்பு வார நிகழ்வுகள் மன்னாரில் நேற்று ஆரம்பம்





மன்னார், ஜூலை 2

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மன்னார் சுகாதாரத் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஞானசீலன் குணசீலன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை மன்னாரில் ஆரம்பமானது.

சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து மன்னார் பிரதேச செயலகம், பொலிஸார், மாவட்ட பொது சுகாதார பரிசோதகர்கள், உலக தரிசன நிறுவனம்(வேள்விசன்),கிராம சேவையாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் இணைந்து குறித்த டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று இடம் பெற்ற ஆரம்ப நிகழ்வில் மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஞானசீலன் குணசீலன், மன்னார் பிரதேச செயலகத்தின் கிராம அலுவலர்களுக்கான நிர்வாக அலுவலர் எஸ்.ஏ.ராதா பெனாண்டோ,மன்னார் பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோர் இணைந்து டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

குறித்த வேலைத்திட்டம் நேற்று தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை இடம் பெறவுள் ளது.

நேற்று சாந்திபுரம்,தோட்டக்காடு,செல்வ நகர் ஆகிய கிராமங்களில் குறித்த டெங்கு நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டம் இடம் பெற்றது.

குறித்த கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் செல்லும் மன்னார் பொலிஸார் மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் வீடுகளைப் பரிசோதனை செய்து கொள்வதோடு டெங்கு நுளம்பு பரவ சாத்தியக்கூறுகள் உள்ள பகுதிகளை சிரமதானம் செய்ய அறிவுரைகள் வழங்கி வந்தனர்.

இன்று எழில் நகர், நாளை மூர்வீதி நாளை மறுதினம் உப்புக்குளம், எதிர்வரும் 5ஆம் திகதி பேசாலை 4 ஆம் வட்டாரத்திலும், எதிர்வரும் 6ஆம் திகதி ஜோசப் வாஸ் நகரிலும், 7 ஆம் திகதி மன்னார் சுகாதார பணிமனையிலும் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் இடம்பெறவுள்ளதாக மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

குறித்த தினங்களில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அடையாளம் காணுதல், அதனை அழித்தல்,மக்களுக்கு விழிர்ப்புணர்வு வழங்குதல், தேவைப்படும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் இடம் பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-12)

# துப்பாக்கி காட்டி கொள்ளை! இருவர் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜீலை, 02

துப்பாக்கியைக் காட்டி நகைகள் உட்பட சுமார் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட மூன்று பேரில் இரண்டு பேர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இருவர் தொடர்பான பிணை விண்ணப்பம் யாழ். மேல் நீதிமன்றினால் தாக்கல் செய்யப்பட்டது. அவற்றைப் பரிசீலித்த மேல் நீதிமன்ற ஆணையாளர் எஸ்.பரமராஜா பிணை அனுமதி வழங்கினார்.

அல்லாரை தெற்கு, கொடிகாமத்தில் கடந்த வருடம் மே மாதம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் முல்லைத்தீவு, செல்வபுரம், துர்க்கை அம்மன் வீதியைச் சேர்ந்த மனோகரன் வரதாஸ், தேவிபுரம், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிரதீபன் ஆகியோர் உட்பட மூன்று பேர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். சாவகச்சேரி நீதிமன்றினால் மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந் நிலையிலேயே முதல் இரண்டு சந்தேக நபர்களும் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் தலா 20 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். (த-4)

# கஞ்சாவுடன் கைதானவருக்குப் பிணை

கஞ்சா போதைப் பொருளை தன்வசம் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்த குற்றச்சாட்டில் விள்க்கமறியலில் வைக்கப்பட்டிருந்த புத்தளம் வாசி யாழ். மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ். மேல் நிதிமன்றின் ஆணையாளர் எஸ். பரமராஜா சந்தேகநபர் தொடர்பான பிணை விண்ணப்பத்தைப் பரிசீலித்துப் பிணை அனுமதி வழங்கினார்.

புத்தளம் தில்லையடி இரண்டாவது ஒழுங்கையைச் சேர்ந்த மெஹமட் அனுஸ் என்பவரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டவர்.

யாழ்ப்பாணத்தில் 56.68 கிராம் கஞ்சா போதைப்பொருளைப் தன்வசம் வைத்திருந்தமை மட்டுமன்றி 1.7கிராம் கஞ்சாவை விற்பனை செய்த குற்றச் சாட்டில் கடந்த ஜனவரியில் கைது செய்யப்பட்டு 14 நாள்களின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டு மீண்டும் மார்ச்சில் அவர் விளக்க மறியலில் இதனடிப்படையில் சந்தேகநபர் 25ஆயிரம்ரூபா ரொக்கப்பிணையிலும், இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டார். (த-4)

# குஞ்சர் கடையடியில் கோஷ்டி மோதல்

யாழ்ப்பாணம் ஜுலை, 02.

வடமராட்சி குஞ்சர் கடைச் சந்தியை அண்மித்து விளையாட்டு நிகழ்வைத் தொடர்ந்து இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. நெல்லியடிப் பொலிஸார் குழப்பத்தில் ஈடுபட்டவர்களை விரட்டி நிலைமையைச் சீர்படுத்தினர் இதன்போது பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் கையில் சிறு காயத்துக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார்.

நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. நேற்றுமுன்தினம் ஞயிற்றுக்கிழமை இரவு கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நடந்தது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும், வதிரி டயமன்ஸ் அணியும் மோதிக் கொண்டன. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி தோல்வியடைந்தது. அதனைத் தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வு இடம் பெற்றது.இதன்போது சிலர் குஞ்சர் கடையடிச் சந்தியில் கற்களைப் போட்டுள்ளனர். இதனை மற்றைய தரப்பினர் அகற்ற முற்பட்ட போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது.

அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிஸார் குழப்பத்தில் ஈடுபட்டவர்களை அடித்துக் கலைத்து நிலைமையை சீர் செய்தனர்.

## வர்த்தகர்களுக்கு அபராதம்

கிளிநொச்சி, ஜூலை 2

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் சூழலை அசுத்தப் படுத்தும் வகையில் குப்பைகளை போட்டிருந்த இரு வர்த்தகர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த டிப்போச் சந்தி கனகபுரம் பகுதியில் வர்த்தக நிலையத்தின் முன்பாக குப்பைகளை கொட்டிச் சுற்றாடலை, அசுத்தப்படுத்தும் வகையில் வைத்திருந்த 2 வர்த்தகர்களுக்கு எதிராக கடந்த 19 ஆம் திகதி வழக்குகளைப் பதிவு செய்த கிளிநொச்சி பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் அவர்களை முன்னிலைப்படுத்தியபோது இருவருக்கும் தலா ஆயிரத்து 500ரூபாதண்டப்பணம் விதித்து நீதிவான் உத்தரவிட்டார். (வ-,6)

# மரண அறிவித்தல்கள்

## வைரவி மாரிமுத்து



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை, மாம்பிராயை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவில், நந்தாவிலில் வசித்தவருமாகிய வைரவி மாரிமுத்து நேற்று (01.07.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவியின் அன்பு மனைவியும் கமலராசா, காலஞ்சென்ற தங்கராசா மற்றும் சண்முகராசா (ராசன்- உரிமையாளர் -30-4563), ராஜவேல் (ரவி- உரிமையாளர், சிந்துஜா ரவல்ஸ், 60-5320, வழி-769 தெல்லிப்பழை), ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2013) செவ்வாய்க்கிழமை (பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில், கோண்டாவில். (38788)

தகவல்: குடும்பத்தினர்.

## சந்திரகுமார் வசந்தகுமாரி



மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரகுமார் வசந்தகுமாரி நேற்றுமுன்தினம் (30.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகராசா-இராசமலர் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற செல்லப்பா -செல்வபாக்கியம் தம்பதியரின் மருமகளும், சந்திரகுமாரின் அன்பு மனைவியும், வினுஜா, விக்னன், ஜனோயன் ஆகியோரின் பாசமிகு தாயும், குசலகுமாரி, காலஞ்சென்ற கோமளகுமாரி, யோகராசா, மகேந்திரகுமாரி, உதயகுமர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், குணசீலன், சுமதி, அசோக்குமார், தமயந்தி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோவிலடி, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.
004796821259(நோர்வே) 0772055811(மட்டுவில்)
0777 388026 (மாகியப்பிட்டி)

தகவல்: குடும்பத்தினர்.

## சந்திரசேகரம் சூரியகுமார்



பங்களா வீதி, கொத்தாராவத்தை மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் சூரியகுமார் நேற்று (01.07.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம்- ரோசினி தம்பதியரின் மூத்த புதல்வனும், சந்திரகுமார், சத்தியகுமார் (கனடா), சத்தியதேவி ஆகியோரின் மூத்த சகோதரனும், நளினலோஜியின் மைத் துனரும், சயந்தன் சாய்சங்கரின் பெரிய தந்தையும், காலஞ் சென்ற கனகசிங்கம் நடராஜாவின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பங்களா வீதி, கொத்தாராவத்தை, மல்லாகம் (38784) (10,18,14)

தகவல்: குடும்பத்தினர். 021 224 2171

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்பலம் பரமேஸ்வரி



வீமன்காமம், மாவிட்ட புரத்தை பிறப்பிடமாகவும், சிறுவிளான், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பரமேஸ்வரி நேற்று (01.07.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்-கற்பகப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை- பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், இந்திரலிங்கம், இந்திராணி, செல்வநாயகி, மனோகரன், ரஞ்சினி, வசந்தகுமாரி, சிறிகுமாரன், உதயகுமார், ஜெயக்குமாரி ஆகியோரின் அன்புத் தாயும், விமலாதேவி, வாமதேவன், சிவசுப்பிரமணியம், மனோராணி, தவராசா, இராசேந்திரம், ஜெகதீஸ்வரி, விஜயராகினி, தவலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியும், ஐயாத்துரை, நாரயணசாமி, காலஞ்சென்ற சரஸ்வதி, இராசதுரை, விசாகப்பெருமாள் (இரத்தினம்), கமலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சஞ்சீவி, றேணுகா, விதுஷா, கோகிலன், இந்துஷன், சிந்துஜா, யாழிஷா, யதுர்ஷா யாதவன், விதுஷன், பிரசாளினி, விஜெஷாந் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், யோகேஸ்வரன், பகீதரன், சுரேஸ்குமார், துஸ்யந்தினி, விஜயராஜ், பாலகுமார், ஜெயபவானி, பிரதீபா, மனோரஞ்சன், சுதர்சினி, பிருந்தா, ஜினேசன், கலைவாணி, முரளிதரன், பகீரதன், ஜனார்த்தனன், கார்த்திகா, மதுஷா, சிவதாஸ், சங்கவி ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் முள்ளானை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொ.மனோகரன் (ரஞ்சன்)
நஞ்சிரடி, அளவெட்டி வடக்கு,
0212059723 (38789) (10,18,14)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## பிரம்ம ஸ்ரீ கெங்காதரக்குருக்கள் சிவசுப்பிரமணியக் குருகள்

(அராலி மத்தி வெண்ணைப்புரம் விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வர தேவஸ்தான பிரதம குரு)



அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட கெங்காதரக் குருக்கள் சிவசுப்பிரமணியக்குருக்கள் நேற்று (01.07. 2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரம்மஸ்ரீ கெங்காதரக் குருக்கள்-தையல் நாயகி அம்மா தம்பதியரின் புதல்வனும், பிரம்மஸ்ரீ கிருஷ்ண ஐயர்-அம்மினி அம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவ காம சௌந்தரி அம்மா மற்றும் மீனாட்சி அம்மா வின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி நாகரத்தினம்மாவின் அன்புச் சகோதரரும்,பிரம்மஸ்ரீ சிவகணேச குருக்கள், பிரம்மஸ்ரீ ஸ்ரீகோபால குருக்கள் ஆகியோரின் அன்புத் தந்தையும், அமிர்தாம்பாள், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாம னாரும், திருமதி சுதர்சன சர்மா சியாமளாதேவி, செல்வி சியாமள வதனா, காலஞ்சென்றவர்களான பிரம்ம ஸ்ரீ கணேசராஜ சர்மா, பிரம்ம ஸ்ரீ ஸ்கந்த சிவரூப சர்மா மற்றும் திருமதி முரளிதர சர்மா சியாமள ரூபி, செல்வி சியாமள ஜெனனி(யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை (A/L) 2013, வர்த்தகப் பிரிவு), செல்வி பத்ம லோஜினி ஆகியோரின் அன்புப் பேரனும், சகானா, ஹம்சத்வனி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2013) செவ்வாய்க்கிழமை முற் பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூணாவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டை. (38849) (10,8)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பேபி சரோஜா சுரேந்திரா

(ஓய்வு பெற்ற உபதபாலதிபர் -வியாவில்)

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பேபி சரோஜா சுரேந்திரா நேற்று (01.07.2013) திங்கட்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமசாமி-பரிமளம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுரேந்திராவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருளானந்தசிவம், சறோஜினிதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலகிரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கருங்காலி, காரைநகர். (38848) (3.6.11)

தகவல்: பெறாமக்கள்.

## அப்பாத்துரை இராமலிங்கம்



யாழ்ப்பாணம் பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும், நோர்வேயினை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை இராமலிங்கம் நேற்று (01.07.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரிய சிரோன்மணி அப்பாத்துரை -அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆசிரியர் சரவணமுத்து- பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் (நோர்வே) அன்புக் கணவரும், லக்ஸ்மிதுரை (நோர்வே), மாதுமை (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், புனிதவதி, ஞானசோதி (கனடா), சிவக்கொழுந்து (ஓய்வு நிலை தாதிய உத்தியோகத்தர்), கிருஸ்ணமூர்த்தி, காலஞ்சென்ற மணிவாசகர், கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நமசிவாயம், ஜெயரட்ணராஜா, சிவரஞ்சினி, ரேணுகாதேவி ஆகியோரின் மைத்துனரும், ரமணனின் (கனடா) அன்பு மாமாவும், மணிவாசகரின் பெரியப்பாவும், கனகராசன் (ஓய்வு பெற்ற நில அளவையாளர் நாயகம்), காலஞ் சென்றவர்களான சரஸ்வதி, தண்டியன் ஆச்சி, அருளம்பலம் மற்றும் தபேந்திராதேவி (ஓய்வுநிலை தாதி உத்தியோகத்தர்), ஞானேஸ்வரி (கனடா), வேலாயுதர் (கனடா), கேதீஸ்வரன் (கனடா), நடேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பண்ணாகத்திலுள்ள அவரது இல்லத்தில் இன்று (02.07.2013) செவ்வாய்க்கிழமை மு:ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்.

## 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர் விவரங்கள் திரட்டப்படவுள்ளன



யாழ்ப்பாணம், ஜூலை 2

வடக்கில் கடும் பாதிப்புக்குட்பட்ட எழுபது வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் விவரம் திரட்டப்படவுள்ளன.

வடக்கு மாகாண சமூக சேவைகள் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகளின் அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

வடமாகாணத்தில் கடும் பாதிப்புக்குட்பட்ட எழுந்து நடக்க முடியாத, நோயாளி மற்றும் வறுமையில் கஷ்டப்படும் முதியவர்கள் பெருமளவில் உள்ளனர்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஊடாக முதியவர்களின் முழுமையான விவரங்களைத் திரட்டி எவ்வகையான உதவிகள், நலச் சேவைகள் வழங்கலாம் என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

முதற்கட்டமாக வடமாகாணத்தில் உள்ள பிரதேச செயலாளர் ஊடாக விவரங்களைப் பெற்று 70 வயதுக்கு மேற்பட்ட கடும் பாதிப்புக்குட்பட்டவர்களுக்கு உதவவுள்ளனர்.

இதேவேளை, 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட 70 வயதுக்கும் மேற்பட்ட முதியவர்கள் கைவிடப்பட்ட நிலையில் எதுவித உதவிகளும் இன்றி கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 70 வயதுக்கு மேற்பட்ட குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே 1000 ரூபா வழங்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-50)

# சர்வதேச கூட்டுறவு தினம் குடாவில் இம்முறை சிறப்பாக

## கொண்டாடப்படும் என்கிறார் உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 2

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் கொண்டாடப்படவுள்ள 91 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை யாழ்.குடாநாட்டில் இம்முறை சிறந்த முறையில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை குடாநாட்டில் உள்ள அனைத்துக் கூட்டுறவு அமைப்புகளும் ஒன்று சேர்ந்து கொண்டாடுவதன் மூலம் கூட்டுறவு தொடர்பில் மக்கள் மத்தியில் மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**இதற்கென விசேட போட்டிகள் நடத்தப்பட்டு மாவட்ட மற்றும் வலய ரீதியாகத் தெரிவு செய்யப்படும் விற்பனை நிலையங்களுக்கு சிறப்பு பரிசில்கள் வழங்கப்படும்.**

கூட்டுறவு தினத்தின் போது சங்கங்கள் யாவும் நுகர்வோரைக் கவரும் வகையில் கிளை விற்பனை நிலையங்களை அலங்கரிக்க வேண்டும்.


அத்துடன் விற்பனை நிலையங்கள் அதனை அண்டிய சுற்றாடல் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு அழகுபடுத்த வேண்டும்.

இதற்கென விசேட போட்டிகள் நடத்தப்பட்டு மாவட்ட மற்றும் வலய ரீதியாகத் தெரிவு செய்யப்படும் விற்பனை நிலையங்களுக்கு சிறப்பு பரிசில்கள் வழங்கப்படும்.

அதனைவிட மாவட்டத்தில் கூடுதலான ரொக்க வியாபாரத்தில் ஈடுபடும் சங்கங்கள் மற்றும் சிறந்த பணியாளர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

இதேவேளை சர்வதேச கூட்டுறவு தினத்தில் கூட்டுறவாளர்கள் இரத்ததானம் வழங்குதல், பொது இடங்களை சிரமதானம் செய்தல் போன்ற வேலைத் திட்டத்திலும் ஈடுபடவுள்ளனர் - என்றார். (வ-17)

## பருத்தித்துறை நகரில் கட்டாக்காலிகள் தொல்லை



வடமராட்சி, ஜூலை 2

பருத்தித்துறை நகரில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் பொதுமக்கள், வாகனச் சாரதிகள், வர்த்தகர்கள் பெரும் சிரமங்களையும் இடையூறுகளையும் எதிர்கொள்கின்றனர்.

நகரில் வீதி அகலிப்பு துரித கதியில் இடம்பெற்று வரும் நிலையில் வீதியில் நடந்து செல்லும் பாதசாரிகளான பொதுமக்களுக்கும், வாகனச் சாரதிகளுக்கும் கட்டாக்காலிமாடுகள் சிரமங்களை ஏற்படுத்துகின்றன.

வர்த்தகர்கள் தமது பொருள்களைக் காட்சிப்படுத்த கடைக்கு வெளியே வைக்கும் பொருள்களையும் கட்டாக்காலி மாடுகள் உண்பதால் நட்டங்களை ஏற்படுத்தி வருகின்றது. சில தினங்களுக்கு முன்னர் நுகர்வோர் ஒருவர் பாண் வாங்கி அதனை கடை ஒன்றில் வெளியே வைத்துவிட்டு ஏனைய நுகர்வுப் பொருள்களைக் கொள்வனவு செய்து கொண்டிருந்தார். அந்த வேளை கட்டாக்காலி மாடு ஒன்று பாணை முழுமையாகச் சாப்பிட்டுவிட்டது. பாணைப் பறிகொடுத்த நுகர்வோரான பொதுமகன் மீண்டும் பாணை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினார். (வ-8)

# பாடசாலை மாணவருக்கான மலசலகூடம் பற்றாக்குறை

### 5 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்

**ஒரு சில சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் படி தேவைக்கு அதிகமாக மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.**

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்.மாவட்டத்தில் ஐந்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பாடசாலைகளில் மலசல கூடங்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒரு சில சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் படி தேவைக்கு அதிகமாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு ஏற்ப 30 மலகூடங்களுக்கும், 13 சலகூடங்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களது எண்ணிக்கைக்கு ஏற்ப 10 மலகூடங்களுக்கும், 24 சலகூடங்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியினுள் பாடசாலை மாணவர்களது எண்ணிக்கைக்கு ஏற்ப 34 மலகூடங்களுக்கும், 18 சலகூடங்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது.


உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியினுள் பாடசாலை மாணவர்களது எண்ணிக்கைக்கு ஏற்ப 28 மலகூடங்களுக்கும், 2 சலகூடங்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியினுள் பாடசாலை மாணவர்களுக்கு 4 மலகூடங்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

நல்லூர் மற்றும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தேவையானளவு மலகூடங்கள், சலகூடங்கள் காணப்படுகின்றன என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

## வேவிலந்தை முத்துமாரி அம்மன் திருவிழா

### ஜூலை 8இல்



யாழ்ப்பாணம், ஜூலை 2

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் ஜூலை 8 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறும்.

திருவிழாக் காலத்தில் காலை 5.30 மணிக்கு உதயகாலப் பூசை ஆரம்பமாகி மாலை 7மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் நிறைவுபெறும்.

எதிர்வரும் ஜூலை மாதம் 21 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

அத்துடன் திருவிழாக்காலத்தில் தொடர் சொற்பொழிவும் இடம்பெறும். (ந-14-8)

## டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழைக்கவும்

### நல்லூர் பிரதேச செயலர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 2

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று நல்லூர் பிரதேச செயலாளரான பா.செந்தில்நந்தனன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்று முதலாம் திகதி தொடக்கம் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 7 ஆம் திகதிவரை செயற்படுத்தப்பட்டு வருகிறது. நல்லூர் பிரதேச செயலக பிரிவு உட்பட பல பிரிவுகளிலும் நாளாந்தம் குறிக்கப்பட்ட இடங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பொது நிறுவனங்கள், பாடசாலைகள், வணக்க ஸ்தலங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள், பராமரிப்புக் காணிகள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. இதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-4)

## டெங்கு ஒழிப்பு வாரம் சாவகச்சேரியில் ஆரம்பம்



தென்மராட்சி, ஜூலை 2

சாவகச்சேரி நகரசபையின் தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் நேற்று நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளையால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. டெங்கு ஒழிப்பு வாரத்தின் முதல் நாளான நேற்று நகரசபை தொழிலாளர் விடுதி வளாகத்தில் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

நகரசபைத் தலைவர், உறுப்பினர்கள், பொது சுகாதார பரிசோதகர் பி.தளிர்ராஜ், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அந்தப் பகுதி மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு துப்புரவுப் பணிகளை மேற்கொண்டனர்.

வாரத்தின் 2 ஆம் நாளான இன்று நுணாவில் மேற்கு காந்தாளம்பிட்டி இந்து மயானம், நாளை சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானம், நாளைமறுதினம் நகரசபை வளாகம் ஆகியவற்றில் சிரமதானம் இடம்பெறும்.

நகரசபை வளாகத்தில் இடம்பெறும் சிரமதானத்தின் பின்னர் இலைக் கஞ்சி வழங்கல் மற்றும் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கும் இடம்பெறும். 5 ஆம் நாளான எதிர்வரும் வெள்ளிக்கிழமை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பிரதேச செயலகம், சுகாதாரத் திணைக்களம், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொண்டர்கள் ஆகியோருடன் இணைந்து வீட்டுச் சுற்றாடல் பரிசோதனைகளும், 6 ஆம் நாள் நுணாவில் மேற்கு அல்லிக்கரை வீதி, ஆனைக்கோட்டை விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் சிரமதானமும், இறுதி நாளான 7 ஆம் திகதி நகர்ப்புற வடிகால்கள் துப்புரவு செய்தல் போன்றவை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## மீள் புனரமைக்கப்பட்ட அல்லைப்பிட்டி றோ.க. இன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

தீவக வலயத்தில் ஐயாயிரம் பாடசாலைத் திட்டத்தில் மீள் புனரமைப்புச் செய்யப்பட்ட அல்லைப்பிட்டி றோ.க.பாடசாலை இன்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டீன், வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ், வேலணை பிரதேச சபை தவிசாளர் எஸ்.சிவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-7)

# காஷ்மீரில் மீண்டும் பதற்றம்

## துப்பாக்கிச் சூட்டில் பொலிஸார் உட்பட மூவர் சாவு

ஸ்ரீநகர், ஜூலை 2
இந்திய-நிர்வாகக் காஷ்மீரில் ஏற்பட்ட மோதல்களில் பொலிஸார் ஒருவரும் இரண்டு ஆயுததாரிகளும் உயிரிழந்துள்ளனர்.

சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காக கிராமம் ஒன்றுக்குள் பொலிஸார் சென்றபோதே மோதல் ஏற்பட்டது என்று தெரியவருகின்றது.

அதேவேளை, நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொதுமக்கள் இருவர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப்



காஷ்மீரில் இந்திய எதிர்ப்பு போராட்டங்கள் அண்மைக்காலமாக தீவிரமடைந்துவருகின்றன


பிரதேசத்திலுள்ள பாடசாலைகளும் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து அங்கு எதிர்ப்புப் போராட்டங்கள் வலுவடைந்துள்ளதுடன், போராட்டங்களின் போது வன்முறைகளும் வெடித்துள்ளன. அதையடுத்து ஸ்ரீநகரில் ஆயிரக்கணக்கான பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குப் பொலிஸார், இராணுவத்தினர் மீதே குற்றஞ்சாட்டியுள்ளதுடன், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் கூறுகின்றனர். (ற)

# காங்கிரஸுடன் கூட்டணி இனி அமைக்காது தி.மு.க.

## ஸ்டாலின் திட்டவட்டம்



சென்னை, ஜூலை 2
பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க. கூட்டணி சேர்வதற்குத் தயாராக இல்லை என்று தி.மு.க. பொருளாளர் ஸ்டாலின் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கடந்த 27ஆம் திகதி பாராளுமன்ற மேல்சபைக்காக தமிழகத்தை சார்ந்த 6 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் சென்னையில் நடைபெற்றது. அதில் அ.தி.மு.கவைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும், இந்தியன் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டி.ராஜாவும், தி.மு.க. சார்பில் போட்டியிட்ட கனிமொழியும் வெற்றி பெற்றுள்ளனர்.

அந்தத் தேர்தலில் தி.மு.க. மேல்சபை உறுப்பினராகக் கனிமொழி வெற்றி பெறுவதற்கு காங்கிரஸ் கட்சி பெரிதும் உதவியது. அதனால் மீண்டும் தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி ஒன்று சேரும் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில் மதுரை பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க., காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து போட்டியிடப் போவதில்லை என்று கூறியுள்ளார்.

சட்டசபை தேர்தலிலும் அவர்களுடன் கூட்டணி வைக்கப் போவதில்லை என்று குறிப்பிட்ட ஸ்டாலின், பாராளுமன்ற மேல்சபைக்கான தேர்தலில் கனிமொழி வெற்றி பெற்றது தலைவர் கலைஞரின் ராஜதந்திரம் எனவும் தெரிவித்தார். (ற)

# ஒரு வருடத்தில் 7 இலட்சம் சிறுமிகள் துஷ்பிரயோகம்

புதுடில்லி, ஜூலை 2
இந்தியாவில் ஒரு வருடத்திற்கு சுமார் 7 லட்சம் சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்ற அதிர்ச்சி தகவலை புள்ளியில் விவரகருந்தாய்வு ஒன்று தெரிவித்துள்ளது.


2007ஆம் ஆண்டு இந்திய அரசின் குழந்தைகள் நலத்துறையானது குழந்தைகள் மீதான பல்வேறு வன்முறைகள் குறித்த விரிவான கருத்துக் கணிப்பை மேற்கொண்டது. பதிமூன்று மாநிலங்களில் 12 ஆயிரத்து 447 குழந்தைகளிடம் ஆய்வு மேற்கொண்டதில் 53 சதவீதமான குழந்தைகள் ஏதோ ஒரு வகையில் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் என்றும், 21.9 சதவீதமான குழந்தைகள் மோசமான பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் ஒரு வருடத்திற்கு சுமார் 7 இலட்சம் சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். இந்தத் தொலையில் 15 சதவீதமானவர்கள் விலைமாதர்கள் என்றும், அவர்கள் பெரும்பாலும் 15 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் கருத்தாய்வுத் தரவுகள் குறிப்பிடுகின்றன.

2006ஆம் ஆண்டு துளிர் எனும் அமைப்பு 2 ஆயிரத்து 211 சென்னைக் குழந்தைகளிடம் ஆய்வு செய்ததில் 42 சதவீதமானோர் பாலியல் கொடுமைகளுக்கு ஆளானமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. டில்லியில் சாக்சி எனும் தொண்டு நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் 350 குழந்தைகளில் 63 சதவீதமானோர் குடும்ப உறுப்பினர்களால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை தெரிய வந்துள்ளது.(ற)



# தயார் நிலையில் இந்திய ரொக்கெற்



இந்தியப் பிராந்தியத்தில் போக்குவரத்து நடவடிக்கைகளை இலகு படுத்தும் நோக்கில், கப்பல், விமானப் போக்குவரத்து கண்காணிப்புக்குப் பயன்படும் ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்.-1ஏ என்ற செயற்கைக்கோளுடன் பி.எஸ்.எல்.வி. சி-22 ரொக்கெற் நேற்று பின்னிரவு விண்ணில் செலுத்தப்படுவதற்குத் தயார் நிலையில் காணப்படுகின்றது. போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக இந்தியா சார்பில் விண்ணில் செலுத்தப்படும் முதலாவது செயற்கைக் கோள் இதுவாகும். (ற)

# பிருத்விக்குப் பதிலாக இனி பிரஹார்

புதுடில்லி, ஜூலை 2
தற்போது இந்திய பாதுகாப்புப் படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பிருத்வி ஏவுகணைக்கு பதிலாக பிரஹார் ஏவுகணைகளை ஈடுபடுத்த இந்திய பாதுகாப்புத் துறை ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் முடிவு செய்திருக்கிறது.

150 கி.மீ. தூரம் சென்று தாக்கும் திறன் கொண்ட ஏவுகணையான பிருத்வி இப்போது பாதுகாப்பு படையினரிடம் உள்ளது. எனினும் அதனைப் பயன்பாட்டிலிருந்து நீக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று பாதுகாப்புத் துறை ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் அவிநாஷ் சந்தர் கூறியிருக்கிறார்.

''தாக்குதலுக்குத் தயாராக இருக்கும் நிலையில் உள்ள பிருத்வி ஏவுகணைகளை திரும்பப் பெற முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அவற்றுக்கு பதிலாக 'பிரஹார்' ஏவுகணைகள் ஈடுபடுத்தப்படும். திரும்பப் பெறப்படும் பிருத்வி ஏவுகணைகள் மேம்படுத்தப்பட்டு, மேலும் அதிக தொலைவில் இருக்கும் இலக்குகளை தாக்கும் திறன் கொண்டதாக மாற்றப்படும். நூறு கி.மீ. முதல் 150 கி.மீ. தொலைவில் இருக்கும் இலக்குகளை தாக்கும் திறன் கொண்ட ஏவுகணையாக பிரஹார் பயன்படுத்தப்படும்.'' என்று அவர் தெரிவித்துள்ளார் (ற)

# கப்டனுக்கு பிடியாணை

சென்னை, ஜூலை 2
தமிழக அரசு தொடர்ந்த அவதூறு வழக்கில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்திற்கு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

தே.மு.தி.க. நிறுவுநர் விஜயகாந்த், பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது மக்கள் வரிப்பணத்தை தமிழக அரசு விளம்பரம் மூலம் வீணடிக்கிறது என்று கூறியிருந்தார். அதனை அடுத்து விஜயகாந்த் மீது தமிழக அரசு சார்பில் அவதூறு வழக்கு தொடரப்பட்டது.

அந்த வழக்கில் அவர் முன்னிலையாகாததால், சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கினை விசாரித்த நீதிபதி சொக்கலிங்கம், எதிர்வரும் 29ஆம் திகதிக்குள் விஜயகாந் கண்டிப்பாக முன்னிலையாக வேண்டும் என்று பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டார். (ற)



# ரோந்தின்போது இனிமேல் கவச வாகனங்கள் இல்லை



புதுடில்லி, ஜூலை 2
நக்சல்கள் நடமாட்டம் மிக்க பகுதிகளில் கவச வாகனங்களைப் பயன்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது என்று இந்திய மத்திய பொலிஸ் படை தெரிவித்துள்ளது.

இது குறித்து மத்திய பொலிஸ் படை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

''வனப் பகுதிகளில் நடைபெறும் நக்சல்கள் தேடுதல் வேட்டையின்போது, ரோந்து பணியில் ஈடுபடும் வீரர்களை ஏற்றிச் செல்ல கண்ணிவெடித் தாக்குதலை சமாளிக்கக் கூடிய கவச வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. திடீர் தாக்குதல் அல்லது கண்ணி வெடிகளால் உயிரிழப்பை குறைப்பதற்காக இந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.


எனினும் இந்த வாகனங்களைப் பயன்படுத்திய போதிலும் வீரர்கள் கண்ணி வெடிகுண்டு தாக்குததால் உயிரிழந்தனர். இதையடுத்து இந்த வாகனங்களைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையை அடுத்து கடந்த 6 மாதங்களில் கண்ணி வெடிகுண்டு தாக்குதலுக்கு ஒரு வீரர் கூட உயிரிழக்கவில்லை. எனவே எதிர்காலத்தில் கவச வாகனங்கள் வனப் பகுதிகளில் பயன்படுத்தப்படமாட்டா.

வனப் பகுதிகளில் ரோந்து செல்லும் வீரர்களை நடந்து செல்லுமாறு அறிவுறுத்தும்படி படைத் தளபதிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# அமெ. கண்காணிப்பில் ஐரோப்பா

## ஸ்நோடன் வெளியிட்ட தகவல்; விளக்கம் கேட்கிறது ஐரோப்பிய யூனியன்



பிரஸ்ஸல்ஸ், ஜூலை 2

அமெரிக்காவில் உள்ள ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தூதரங்களின் தரவுகளை அமெரிக்க உளவு அமைப்பு இரகசியமாகக் கண்காணித்து வந்துள்ளது என்று ஜேர்மனியில் இருந்து வெளியாகும் நாளிதழான 'டெர் ஸ்பீகல்' தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்க உளவு அமைப்பின் முன்னாள் பணியாளரான எட்வேர்ட் ஸ்நோடனை மேற்கோள் காட்டியே அந்த நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

அதையடுத்து அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள ஐரோப்பிய யூனியன் தலைவர்கள், ''அமெரிக்காவிடம் இருந்து இதுகுறித்து உடனடியான விளக்கத்தை எதிர்பார்த்துள்ளோம்'' என்று தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க உளவு அமைப்பான தேசிய பாதுகாப்பு முகாமையால் (என்.எஸ்.ஏ.) 'மிக ரகசியம்' என்று வகைப்படுத்தப்பட்ட, 2010ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாத ஆவணங்கள் சிலவற்றை என்.எஸ்.ஏ. முன்னாள் பணியாளர் எட்வேர்ட் ஸ்நோடன் ஒரு வாரத்துக்கு முன்னர் வெளியிட்டிருந்தார்.

வொஷிங்டன், நியூயோர்க் ஆகிய நகரங்களில் உள்ள ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தூதரகங்கள் மற்றும் அலுவலகங்களில் உள்ள கணினிகளில் உள்ள தகவல்கள் மற்றும் தொலைபேசி உரையாடல்களை என்.எஸ்.ஏ. அமைப்பு எவ்வாறு ரகசியமாக கண்காணித்தது என்ற விவரங்கள் அந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன என்று 'டெர் ஸ்பீகல்' தகவல் வெளியிட்டுள்ளது.

அத்துடன், பிரஸ்ஸல்ஸ் நகரில் லிப்ஸியஸ் கட்டடத்தில் உள்ள ஐரோப்பிய யூனியன் தலைமை அலுவலகத்திலிருந்தும் தொலைபேசி உரையாடல்கள், மின்னஞ்சல்கள் போன்ற ரகசிய தகவல்களை அமெரிக்க உளவு அமைப்பு திரட்டி உள்ளது என்றும் அந்த ஆவணங்கள் ஊடாகத் தெரிய வந்துள்ளது என்றும் அந்த நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஐரோப்பிய யூனியனின் தலைவர் மார்ட்டின் ஸ்கல்ஸ்,

''ஐரோப்பிய யூனியன் அலுவலகங்களை அமெரிக்கா உளவு பார்த்ததாக வெளியான தகவல் அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். இதுகுறித்து அமெரிக்கா விளக்கம் அளிக்க வேண்டும். இந்தத் தகவல் உண்மையாக இருக்குமானால், அமெரிக்கா ஐரோப்பிய யூனியன் இடையிலான உறவு கடுமையாகப் பாதிக்கும்'' என்று கடும் தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ற)

> **இந்தத் தகவல் உண்மையாக இருக்குமானால், அமெரிக்கா ஐரோப்பிய யூனியன் இடையிலான உறவு கடுமையாகப் பாதிக்கும்.**



## ஸ்நோடனின் தலைவிதி ரஷ்யாவிடமே

குயிற்றோ, ஜூலை 2

அமெரிக்காவின் இரகசிய உளவு நடவடிக்கைகள் குறித்த தகவல்களைக் கசிய விட்ட எட்வேர்ட் ஸ்நோடனின் தலைவிதியை ரஷ்ய அதிகாரிகளே தற்போது தீர்மானிக்க வேண்டும் என்று ஈக்குவடோர் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஈக்குவடோரில் அரசியல் புகலிடம் பெறும் நோக்குடன் ஸ்நோடன் தற்போது ரஷ்யாவில் தங்கியுள்ளார். அதனால் ஸ்நோடனின் புகலிடக் கோரிக்கையை தமது அரசு இதுவரை பரீசீலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கண்காணிப்புத் திட்டங்களை கசிய விட்ட குற்றச்சாட்டில் ஸ்நோடனுக்கு எதிராக, நாட்டை உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டு அமெரிக்காவால் சுமத்தப்பட்டுள்ளது. 30 வயதான அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனத்தின் முன்னாள் ஊழியரான எட்வேர்ட் ஸ்நோடன் தற்போது ரஷ்ய சர்வதேச விமான நிலையத்தில் தங்கியுள்ளார். (ற)

## மண்டேலாவை பின்பற்ற வேண்டும்




ஜொகன்னாஸ்பேர்க், ஜூலை 2

''நெல்சன் மண்டேலாவை உதாரணமாகக் கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டும்.

செழிப்பான மற்றும் அமைதி வழியில் ஆபிரிக்காவை முன்னோக்கிக் கொண்டு செல்ல அது உதவியாக இருக்கும்'' இவ்வாறு தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

ஆபிரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பராக் ஒபாமா, கேப்டவுனில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் உரையாற்றினார். அதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் நெல்சன் மண்டேலா 18 ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டிருந்த் ரொப்பின் தீவிலுள்ள சிறைச்சாலையும் பராக் ஒபாமா பார்வையிட்டார். (ற)



ஜேர்மனியில் முப்பரிமாண ஓவியக் கண்காட்சி நடத்தப்பட்டது. அதில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ஓவியம் ஒன்றுடன் விளையாடும் சிறுவன்

## அழகால் வந்த ஆபத்து

பீஜிங், ஜூலை 2

அழகான சீன மாணவியின் புகைப்படத்தை பார்ப்பதற்காக, ஒரே நேரத்தில் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், இணையதளம் ஸ்தம்பித்தது.

சீனாவில் உள்ள ரேன்மின் பல்கலைக்கழகத்தில் அண்மையில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இந்த பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற கெயிங் கெயிங் என்ற மாணவி பல்கலைக்கழக வளாகத்தின் பல்வேறு பகுதிகளிலும், பட்டமளிப்பு விழா அங்கியுடன் புகைப்படம் எடுத்துக் கொண்ட படங்கள், பல்கலைக்கழக இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன.

மாணவியின் அழகான முகத்தைக் கண்ட மாணவர்கள் ஒரே நேரத்தில் இணையத் தளத்தை பார்வையிட்டதால் பல்கலைக்கழக இணையத்தளம் சில மணி நேரங்களுக்கு ஸ்தம்பித்தது. அதிர்ச்சி அடைந்த பல்கலைக்கழக நிர்வாகிகள் மாணவியின் சில புகைப்படங்களை எடுத்துவிட்டனர். கெயிங் கெயிங்கின் படத்தை கண்ட ஏராளமான மாணவர்கள் இந்த ஆண்டு ரென்மின் பல்கலையில் சேர விண்ணப்பங்களை அனுப்பி உள்ளனராம். (ற)

## சிதறியது எரிவாயு வாகனம் உகண்டாவில் 29 பேர் சாவு

கம்பாலா, ஜூலை 2


எரிவாயு வாகனத்தின் மீது கார் மோதி விபத்துக்குள்ளானதில் எரிவாயு வாகனம் தீப்பற்றி வெடித்துச் சிதறியது. அதில் 29 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் உகாண்டா நாட்டில் கம்பாலா புறநகர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. வீதியில் பயணித்துக் கொண்டிருந்த எரிவாயு வாகனம் மீதே கார் மோதி விபத்துக்குள்ளானது. கார் மோதியதில் எரிவாயு வாகனம் தீப்பற்றிக் கொண்டது. அதையடுத்து அந்த வாகனம் வெடித்துச் சிதறியது. அதில் 29 பேர் உயிரிழந்ததுடன் ஏராளமானோர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் அந்த வீதியூடாக இருசக்கர வாகனங்களில் பயணித்தவர்களே என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற)



## அமெரிக்காவில் தீ விபத்து; தீயணைப்பு வீரர் 19 பேர் சாவு



அரிசோனா, ஜூலை 2

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த 19 தீயணைப்பு வீரர்கள் தீயில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் வடமேற்குப் பகுதியில் அரிசோனா மாநிலத்தில் பெரும் காட்டுத் தீ மூண்டுள்ளது. அந்தப் பகுதியில் தற்போது உள்ள காலநிலை காரணமாக காட்டுத் தீ வேகமாகப் பரவி வருகின்றது.

அதையடுத்து அங்கிருந்த பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றப்பட்டு, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. 200க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அந்த முயற்சிகளின்போதே 19 தீயணைப்பு வீரர்கள் தீயில் சிக்கி உயிரிழந்துள்ளனர். (ற)

## சீனாவில் கடும் மழை வீழ்ச்சி; 14 பேர் சாவு

பீஜிங், ஜூலை 2

சீனாவின் பல்வேறு பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக இதுவரை 14 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலரைக் காணவில்லை என்று கூறப்படுகிறது. கனமழை காரணமாக சீனாவின் பல்வேறு இடங்களில் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டுள்ளது. (ற)

# இன்று 14ஆம் அகவையில்

அழுத்தமான
காலடிகளை
எடுத்து வைக்கும்
நாம்,
இவ்வேளையில்
வடக்கின்
தனிப்பெரும்
அச்சகதாரர்களாக
எம்மை
வளர்த்தெடுக்க
உதவிய
பணியாளர்கள்,
வாடிக்கையாளர்கள்,
நலன்விரும்பிகள்
அனைவருக்கும்
எம்
நெஞ்சம் நிறைந்த
நன்றிகளைக்
காணிக்கை
ஆக்குகிறோம்.

# கடந்த 13 ஆண்டுகளில்

எமது
அச்சகப் பாசறையில்
அச்சு ஊடக வல்லுநர்களாகப்
பயிற்றுவிக்கப்பட்ட
நம் பணியாளர்களே
இன்று குடாநாட்டின்
அச்சு ஊடகங்கள் தோறும்
பணியாற்றுவதையிட்டுப்
பெருமகிழ்வு கொள்ளும்
நாம்,
தொடர்ந்தும்
அச்சகப் பணியாளர்களின்
தொழில்திறனை
சர்வதேசத் தரத்தில்
விருத்தி செய்து
அச்சுக் கலையை
மேன்மேலும்
வளர்த்தெடுப்போம் என
இந்நன்னாளில்
உறுதி கூறுகிறோம்.

நவீன அச்சுக் கலையின் முன்னோடி

# கரிகணன்

(சி/10174)(3.6)

# Harikanan (Pvt.) Ltd.

**Printers of the North**

#681, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
Phone : 0094-21-222 2717 / 21-739 7530, Fax : 0094-21-222 2891
www.harikanan.com e-mail: print@harikanan.com

## பாடசாலையின் கதவுகள் விஷமிகளால் உடைத்துச் சேதம்

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் வகுப்பறைக் கதவுகளை இனந்தெரியாத விஷமிகள் நேற்று முன்தினம் இரவு உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர்.
நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் பாடசாலை வளாகத்துக்குள் நுழைந்த விசமிகள் கணினி அறை, அதிபர் அறை மற்றும் வகுப்பறைகளின் கதவுகளை உடைத்துள்ளனர்.
சத்தம் கேட்டு உள்ளே சென்ற சிறுவர்கள் சிலர் சம்பவத்தைக் கண்டுகக்குரல் இட்டபோது அங்கு பலர் கூடியதால் விஷமிகள் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டதை அடுத்து பாடசாலை அதிபரிடம் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர்.
இதேவேளை இந்தப் பாடசாலையில் முன்னரும் பல தடவைகள் பூட்டு உடைக்கப்பட்டு, திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-100)

# கைத்தொழிலாளரை முன்னேற்ற அபிவிருத்தித் திட்டங்கள்

### கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு ஏற்பாடு



யாழ்ப்பாணம், ஜூலை 2
வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களை கிராமிய ரீதியாக ஒன்றிணைத்து அதற்கான அபிவிருத்தித் திட்டங்களை கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.
சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு உரிய சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் ஊடாக பெரியளவிலானதொழில்முயற்சியாளர்கள் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இதனால் தொழில் முயற்சியாளர்களை கிராமிய ரீதியாக ஒன்றிணைந்து அவர்களது தொழில்களில் ஏற்படும் பின்னடைவுக்கான காரணங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. இதன் மூலம் அதற்கான ஆலோசனைகளை வழங்குவதன் ஊடாக குறித்த தொழில் முயற்சியாளர்கள் தமது துறை சார்ந்த தொழிலில் அபிவிருத்தியை ஏற்படுத்த வாய்ப்பாக அமையும்.
இதற்கமைவாக கிராம ரீதியில் கைவினைக் கிராமங்களைத் தெரிவுசெய்துஅவர்களதுதொழில் முயற்சிகளை ஊக்குவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது தொழில் முயற்சிகளில் பல வருடங்களாக தேர்ச்சியுடையவர்களாக இருந்தாலும் அதற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியாமல் சோர்வடைந்தவர்களாக அன்றாட தேவைகளுக்கு மட்டும் வருமானம்பெற்றுக்கொண்டால்போதும் எனும் நிலையில் உள்ளனர்.
அத்துடன் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களைக் கொண்ட தொழில் நிறுவனங்களும் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பு இல்லாமல் முதலீடுகளுக்கு மேலான இலாபத்தை வருமானமாகப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாகவும் உள்ளனர்.
இதற்கமைவாக வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் ஊடாக தொழில் முயற்சியாளர்களை ஒன்றிணைத்து அவர்களுக்கான சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதன் முதற்கட்டமாக கைவினைக் கிராமங்கள் கிராம ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (வ-14)



சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் ஆக்கத்திறன் கண்காட்சி சனிக்கிழமை நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். (வ-9)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் இராணுவத்தினர் சிரமதானம்

அளவெட்டி, ஜூலை 2
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மகப்பேற்றுப் பிரிவு அமைந்துள்ள பகுதியில் காணப்பட்ட பற்றைகள், கற்குவியல்கள், மரங்கள் என்பன சிரமதானம் மூலம் அகற்றப்பட்டுள்ளன.
பலாலி கெமுனுவாச் பிரிவு இராணுவத்தினரும் வைத்தியசாலைப் பணியாளர்களும் இணைந்து கடந்த சனிக்கிழமை இந்தப் பணியை முன்னெடுத்தனர்.
இதேவேளை, பிரசவ விடுதியின் ஒரு பகுதி முழுமையாகத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு தொகுதிக் கட்டடம் இன்னும் திருத்தப்படாது உள்ளதால் மகப்பேற்று விடுதியை அதற்குரிய இடத்தில் முழுமையாகச் செயற்பட வைப்பதற்கு கால தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
திருத்தியமைக்கப்பட்ட புதிய பகுதியில் கூடிய விரைவில் மகப்பேற்று விடுதி முழுமையாகச் செயற்படவுள்ளது எனவும் வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது. (ஐ-36)

## விபத்தில் இருவர் காயம்

அளவெட்டி அலுக்கை சந்திக்கு அருகில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் – சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்து தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரான அளவெட்டி பத்துப்பளையைச் சேர்ந்த கந்தசாமி தர்சன் (வயது-22) என்பவர் படுகாயம் அடைந்தார். சைக்கிளில் சென்றவர் உட்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ஐ-36)

### நல்லூர் ஆலய சூழலில் உள்ளவருக்கு

## அவரவர் வீடுகளுக்குச் சென்று வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்

### மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2
நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவின் போது சுற்றாடலில் குடியிருப்பவர்களுக்கான வாகன அனுமதிப் பத்திரங்கள் இம்முறை மாநகர சபை உத்தியோகத்தர்களால் ஆலயச் சூழலில் உள்ள வீடுகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு வழங்கப்படும் என்றுமாநகரசபைஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்தார்.
யாழ்.நல்லூர் உற்சவ கால ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலில் மாநகர சபை ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தப் பகுதிகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் ஒரு வழிப்பாதையை மட்டுமே பயன்படுத்த தங்களுக்கு அனுமதிக்கப்படுவதால் தமது கடமைகளைச் செய்ய முடியாத நிலை இருப்பதாகச் சுட்டிக்காட்டினர்.

> **இந்தப் பகுதிகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் ஒரு வழிப்பாதையை மட்டுமே பயன்படுத்த தங்களுக்கு அனுமதிக்கப்படுவதால் தமது கடமைகளைச் செய்ய முடியாத நிலை இருப்பதாகச் சுட்டிக்காட்டினர்.**

உத்தியோகத்தர்கள் அவர்களின் தேவைக்கமைவாக வீதித் தடைகளைப் பயன்படுத்தக் கூடியதாக வீதித் தடைக்கான அனுமதிப்பத்திரம்வழங்கப்படும்.
கடந்த வருடம் வீதித் தடைகளில் சிங்கள மொழியில் கதைத்தவர்களை அனுமதிச் சீட்டு இல்லாத நிலையிலும் உள்செல்ல அனுமதி வழங்கப்பட்டதாகவும், தமிழில் பேசியவர்களை உள்செல்லவிடாது தடுத்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. இம்முறை அப்படி எதுவும் இடம்பெற மாட்டது.
கடந்த முறை வாகனத் தடை இருந்தும் சில வாகனங்கள் அனுமதிக்கப்பட்டது. எவரது வாகனமாக இருந்தாலும் தடைகளைத் தாண்டி ஆலய வீதிக்குள் செல்ல அனுமதிக்கக் கூடாது.
சுவாமி வீதிவலம் வரும் போது ஒலிபெருக்கிகளூடாக சில அறிவிப்புக்கள் வெளியிடுவது தடைசெய்யப்பட வேண்டும்.
குடிதண்ணீர், மலசல கூட வசதிகள் சீரானதாக அமைதல் வேண்டும். ஆயிரம் லீற்றர் நீர்கொள்ளக் கூடிய குடிதண்ணீர்த் தாங்கிகள் நான்கு யாழ் செயலகத்தில் பெற்றுக்கொள்தல்.
மின்வெளிச்சவசதிகளை மின்சாரசபையே செயற்படுத்தும். இதற்கென கொழும்பில் இருந்து மின் பிறப்பாக்கி எடுத்துவரப்படவுள்ளதாகவும் ஆலய சுற்றாடலில் இருந்து வீதிகளில் ஒரு மைல்தூரம் வரை வெளிச்ச வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதெனவும் கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது. (எ-7)

### மாற்று வலுவுடையோருக்கு

## தொழில் வாய்ப்பை வழங்குவதன்மூலம் அவர்களின் மனநிலையை மாற்ற முடியும்

### தொழில் உறவுகள் அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவிப்பு


யாழ்ப்பாணம், ஜூலை 2
சமூகத்தில் மாற்று வலுவுடையோரை இனங்கண்டு அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களின் மனநிலையை மாற்றிக்கொள்ள முடியும் என்று தொழில் உறவுகள் அமைச்சின் மேலதிக செயலாளர் கேரத்யாப்பா தெரிவித்தார்.
வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற மாற்று வலுவுடையோருக்கான தொழில் சந்தையை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இன்றைய காலத்தில் ஊனமுற்ற ஒருவர் இருக்கிறார், அவர் மாற்றுவலுவுடையவர், அவரால் ஒன்றும் செய்யமுடியாது என்று நாம் நினைப்பது மிக தவறானது.
மாற்றுவலுவுடையோர் உண்மையில் அவர்களின் சேவைகள் பணிகள் என்பது முக்கியமானவை.
அவர்களாலும் செற்பாடுகளை முன்னெடுக்க முடியும். அதற்காக அவர்களை நாம் ஒதுக்கி விட முடியாது. அவர்களை தொழில் நிறுவனங்களில் இணைத்து அவர்களுக்கு ஏற்ற தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதில் தொழில் அமைச்சும், சமூக சேவைகள் அமைச்சும் துரிதமாக செயற்பட்டு வருகின்றன்றன.
இம்மாற்று வலுவுடையோருக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் பெரும் நன்மையடைவார்கள் என்றார். (வ-17)

## பொதுக்கிணறு மக்களின் பாவனைக்கு



மட்டக்களப்பு,ஜூலை 2
மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஒல்லிக்குளம் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொதுக் கிணறு மக்களின் பாவனைக்கு ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்பட்டது.
இந்தக் கிணறு முஸ்லிம் பெண்கள் அமைப்பின் நிதியொதுக்கீட்டில் பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பினால் நிர்மாணிக்கப்பட்டது.
இந்தக் கிணற்றை காத்தான்குடி நகரசபை உறுப்பினர் சல்மா அமீர் ஹம்சா பொது மக்களின் பாவனைக்கு கையளித்தார். (ச)

## ஓட்டமாவடியில் புதிய பள்ளிவாசல்



மட்டக்களப்பு,ஜூலை 2
மட்டக்களப்பு, ஓட்டமாவடி வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட மஸ்ஜிதுல் இர்ஷாத் பள்ளிவாசல் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
மஸ்ஜிதுல் இர்ஷாத் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் மௌலவி எம்.எல்.எம். இப்றாஹிம் தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழாவில் தென்கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி அஷ்ஷேக் எம்.பி.எம்.அலியார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
இந்தப் பள்ளிவாசல் 30 இலட்சம் ரூபா செலவில் இரு மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பள்ளிவாசலின் மேல் தளத்தில் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காக நூலகம் ஒன்று அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# '13' திருத்தத்துக்கு ஆதரவு; மு.காவின் சுயநலம் அம்பலம்

### அப்துல் மஜீத் குற்றச்சாட்டு

கல்முனை,ஜூலை 2
13ஆவது திருத்தத்துக்கு முஸ்லிம் காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியிருப்பதன் மூலம் அந்தக் கட்சியின் தலை முதல் கால் நுனிவரை சுயநலமே உள்ளது என்ற குற்றச்சாட்டு மீண்டும் உறுதியாகியுள்ளது. இவ்வாறு முஸ்லிம் மக்கள் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் குறிப்பிட்டார்.
முஸ்லிம் மக்கள் கட்சியின் கல்முனை அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
13ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிப்பதில்லை என மு.காவின் உயர்பீடம் முடிவு செய்திருப்பதாக அக்கட்சியின் தலைவர் அண்மையில் பகிரங்கமாக தெரிவித்திருந்தார். அப்படியிருந்தும் மேற்படி மாகாணசபை உறுப்பினர்கள் திருத்தத்துக்கு ஆதரவளித்தமையானது அக்கட்சியினரின் சமூகம் பற்றிய அறியாமையையும், மு. காவின் வழமையான சுயநல அரசியலையுமே காட்டுகிறது. தலைவர் ஒன்றைச்சொல்ல அவர்கள் வேறு விதமாக நடந்து கொண்டுள்ளார்கள் என்றால் இதற்கு பிரதான காரணம் மு. கா தலைமையின் சுயநலத்தை அவர்கள் தெரிந்து வைத்திருப்பதாகும். வாழ்வின் எழுச்சி சட்டவரைவு கிழக்கு மாகாண சபைக்கு வந்தபோது மு. காவின் அனைத்து உறுப்பினர்களும் விழுந்தடித்துக் கொண்டு அதற்கு ஆதரவளித்து அரசுக்கு தமது விசுவாசத்தை காட்டினர். பின்னர் அதற்கெதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக கூறப்பட்டதோடு ஹக்கீம் தலைமையில் விசாரணை குழுவும் நியமிக்கப்பட்டது. இதனை திருடர்களை விசாரிக்க திருட்டுக்கூட்டம் நியமனம் என நாம் கூறியிருந்தோம். அதன்படி எந்த விசாரணையும் நடக்காததோடு நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டம் வந்த போது அதற்கு ஆதரவாக ஹக்கீமும் மற்றவர்களும் வாக்களித்து தமது சொந்த சுயநலன்களுக்காக சமூகத்தை விற்றனர்.

"13 ஆவது திருத்தத்தை திருத்தும் பிரேரணை நாடாளுமன்றத்துக்கு வந்தால் நிச்சயம் ஹக்கீமும், மற்ற உறுப்பினர்களும் ஆதரித்து வாக்களிப்பர்.



இப்போதும் 13 ஆவது திருத்தத்தை திருத்தும் பிரேரணை நாடாளுமன்றத்துக்கு வந்தால் நிச்சயம் ஹக்கீமும், மற்ற உறுப்பினர்களும் ஆதரித்து வாக்களிப்பர் என்ற உண்மையை புரிந்தே மாகாண சபை உறுப்பினர்கள் முன்கூட்டியே ஆதரவளித்துள்ளனர்.
எம்மை பொறுத்த வரை 13இல் கை வைப்பதை அனுமதிக்க முடியாது. ஏனென்றால் சிங்கள, தமிழ் பேரினவாதத்தின் முன்பு முஸ்லிம்களும் நிபந்தனையிடும் ஒரு நல்ல சரத்தாகவே வடக்கு, கிழக்கு இணைப்பு விடயம் உள்ளது. இதனை நீக்கிவிட்டால் கிழக்கு முஸ்லிம்கள் தொடர்ந்தும் இன்னல்களை அனுபவிக்க வேண்டிவரும். -என்றார். (ச)

# மக்களுக்கு நன்றி கூட செலுத்தமுடியவில்லை

### கிண்ணியாவில் அஸாத்



திருகோணமலை,ஜூலை 2
கிழக்கில் மக்களுக்கு நன்றி கூட செலுத்த முடியாத நிலை உள்ளது என்று கொழும்பு மாநகர முன்னாள் பிரதி முதல்வர் அஸாத் சாலி கவலை தெரிவித்தார்.
கிண்ணியாவில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கிழக்கு மாகாண மக்கள் எனக்காக நோன்பு நோற்றார்கள். அவர்களுக்கு நன்றி செலுத்துவதற்காகவே நான் இங்கு வந்தேன். எனினும் அதற்கு முடியாத நிலை உள்ளது.
இங்கு நன்றி செலுத்துவதற்கு கூட்டம் நடத்த இருந்த போது காணிச் சொந்தக்காரரை இராணுவத்தினர் அச்சுறுத்தியுள்ளனர். இன்று நாடாளுமன்றத்தில் 15 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அதில் யார் முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்தார்கள். இன்று இறைச்சிக் கடையை உடைக்கின்றார்கள், தீ வைக்கின்றார்கள், ஒருவரும் பேச முடியாது. ஆனால் பொதுபல சேனா அமைப்பு எல்லா இடங்களிலும் கூட்டம் நடத்துகின்றது. ஆனால் முஸ்லிம்களுக்கு ஒரு கூட்டம் நடத்த முடியாது.
முஸ்லிம்களுக்கு மாத்திரம் தான் இந்த அநீதியா? முஸ்லிம்களுக்கு எங்கே அநியாயம் நடந்தாலும் அங்கே எல்லாம் நான் குரல் கொடுப்பேன்.-என்றார். (ச)



அகில இலங்கை நல்லுறவு ஒன்றியம் ஊடகத்துறையில் சிறந்த சேவையாற்றி வருபவர்களை கௌரவிக்கும் முகமாக 'சாமஸ்ரீ' விருதை வருடந்தோறும் வழங்கி வருகின்றது. இந்த வருடத்துக்கான விருது சனிக்கிழமை இரத்தினபுரி மாநகர மண்டபத்தில் வழங்கப்பட்ட போது ஊடகவியலாளர் அ.அச்சுதனுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாறூக் வழங்கிக் கௌரவித்தார். (ச 40)

## மட்டக்களப்பில் திருமணப் பதிவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் திருமணத்தை சட்டரீதியாக பதிவு செய்யாதவர்களுக்கு சட்டரீதியான திருமணப் பதிவை மேற்கொள்ள சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
மட்டக்களப்பு மாவட்ட செயலரின் வேண்டுகோளுக்கமைய மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் தோறும் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
இந்த திட்டத்தின் கீழ் பிரதேச செயலக பிரிவுக்குள் சட்டரீதியாக திருமண பதிவினை மேற்கொள்ளாதவர்களின் விவரங்கள் அந்தந்த கிராமங்களில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களினால் திரட்டப்பட்டு வருகின்றன.
திருமணம் முடித்தமைக்கான ஏதாவது ஆவணங்களுடன் குடும்பமாக வாழ்ந்து கொண்டிருக்கும் சட்டரீதியாக திருமணத்தை பதிவு செய்யாதவர்கள், கிராம உத்தியோகத்தரிடமோ அல்லது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமோ பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(ச)

### மூதூர் தள வைத்தியசாலை

# குறைபாடுகளை நீக்கக் கோரி பேரணி

திருகோணமலை,ஜூலை 2
மூதூர் தள வைத்தியசாலையில் நிலவும் பௌதிக மற்றும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரி இன்று செவ்வாய்க்கிழமை பேரணி இடம்பெறவுள்ளது.
வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பேரணி, மூதூர் பெற்றோல் நிலையச் சந்தியிலிருந்து வைத்தியசாலை வரை இடம்பெறவுள்ளது என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.எம்.தௌபீக் தெரிவித்தார்.



மூதூர் தள வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதியர்கள், துணை மருத்துவச் சேவை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஆளணிப் பற்றாக்குறையாலும், பௌதிக வளப் பற்றாக்குறையாலும் சிகிச்சை பெறுவதற்கு வரும் நோயாளர்கள் தொடர்ந்து சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 12 வருடங்களின் பின் மீண்டும் சின்னமுத்து

## நாடெங்கும் எதிர்வரும் 5 ஆம் திகதி குழந்தைகளுக்குத் தடுப்பூசி; தவறவிடாதீர்கள்

கொழும்பு,ஜூலை 2
நாட்டில் கடந்த 12 வருடங்களின் பின்னர் சின்னமுத்து நோய், இந்த வருடம் மீண்டும் தலை தூக்கியுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பரவுதல் தடுப்புப் பிரிவு மருத்துவ நிபுணர் சுதத் பீரிஸ் தெரிவித்தார்.
அதனால் சுமார் இரண்டு லட்சம் குழந்தைகளுக்கு சின்னமுத்து நோய்க்கான தடுப்பு மருந்தை விசேட மாக வழங்க சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது என்று அவர் கூறினார்.
ஆறு மாதங்களுக்கும், பன்னிரெண்டு மாதங்களுக்கும் இடைப்பட்ட சகல குழந்தைகளுக்கும் எதிர்வரும் 5 ஆம் திகதி சின்னமுத்து நோய்க்கான தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
2000 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எவரும் சின்னமுத்து நோய்க்கு உள்ளாகவில்லை. இதற்கு நாம் முன்னெடுக்கின்ற தேசிய தடுப்பு மருந்தேற்றல் திட்டம் பெரிதும் பங்களிப்பு செய்து வருகின்றது.
கடந்த ஜனவரி மாதம் முதல் இந்தநோய் மீண்டும் தலைதூக்கி வருகின்றது. இதுவரைக்கும் சுமார் 600 பேர் இந்தநோய்க்கு உள்ளாகியுள்ளனர்.
இவர்களில் பெரும் பகுதியினர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.
இது ஆளுக்காள் தொற்றக்கூடிய நோய். இதனைக் கருத்தில் கொண்டு தற்போதைய மருந்தேற்றல் திட்டத்துக்கு மேலதிகமாக சின்னமுத்து நோய்க்கான தடுப்பு மருந்து எதிர்வரும் 5 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. அன்றைய தினம் நாடெங்கிலுமுள்ள சகல கிளினிக்கு களிலும், கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய



மாவட்டங்களிலுள்ள தனியார் மருத்துவமனைகளிலும் இந்தத் தடுப்பு மருந்து இலவசமாக வழங்கப் படும்.-என்றார். (ச)

# வருடாந்தம் ஒரு லட்சம் மாணவர் இழக்கின்றனர் உயர்கல்வி வாய்ப்பை

## பல்கலைக்கழகங்களில் வரையறுக்கப்பட்ட வளங்களே காரணம் என்கிறார் திஸாநாயக்க

கொழும்பு,ஜூலை 2
வருடாந்தம் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் உயர் கல்வியைத் தொடரும் சந்தர்ப்பத்தை இழக்கின்றனர் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.
இலங்கை அரச பல்கலைக் கழகங்களில் காணப்படும் வரையறுக்கப்பட்ட வளங்களினால் கூடுதலான மாணவர்களுக்கு உயர்கல்வியைத் தொடர சந்தர்ப்பம் அளிக்க முடியவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.
வருடாந்தம் 1, 40 000 மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர தகுதி பெற்றுக் கொள்கின்ற போதிலும், அவர்களில் 25,000 மாணவர்கள் மட்டுமே அரச பல் கலைக்கழகங்களில் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர் என்று அவர் கூறினார்.




இந்த பிரச்சினையை பொறுப்பு வாய்ந்த அரசு என்ற ரீதியில் உதாசீனம் செய்ய முடியாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.
உயர்தரத்தில் சித்தியெய்தும் சொற்பளவிலான மாணவர்கள் மட்டுமே தொழிற் கல்வியைத் தொடர்கின்றனர்.
இதன் காரணமாகவே தனியார் பல்கலைக்கழகங்கள் பட்டப் படிப்பை வழங்க பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சந்தர்ப்பம் அளித்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# நீதிமன்றத்தில் முன்னிலையாக ஜயசுந்தரவுக்கு உத்தரவு



**வற் வரி மோசடி வழக்கு தொடர்பில் சாட்சியம் பெறுவதற்கே நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவு.**

கொழும்பு,ஜூலை 2
நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பி. ஜயசுந்தரவை எதிர்வரும் 23ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்று திங்கட்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது.
வற் வரி மோசடி வழக்கு தொடர்பில் சாட்சியம் பெறுவதற்கே பி.பி. ஜயசுந்தரவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
400 கோடி ரூபா வற் வரி மோசடி வழக்கு தொடர்பில் தற்போது விளக்கமறியலில் உள்ள சந்தேகநபர் ஒருவர் திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விசாரணை நடத்தியபோதே நீதிவான் இந்த உத்தரவை விடுத்துள்ளார். (ச)



ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலைக்கான அடிக்கல்லை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர உட்பட பலர் கலந்துகொண்டு நட்டு வைத்தனர். அருகில், ஹம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ காணப்படுகிறார்.

# '13' ஆதரவு அணியுடன் இ.தொ.கா.இணையாது

## கட்சியின் நிலைப்பாட்டை அறிவித்தார் முத்துசிவலிங்கம்


கொழும்பு,ஜூலை 2
அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்வதற்கென நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எதிரான சிறுபான்மை அரசியல்கட்சிகளுடன் அணிசேர வாய்ப்பில்லை என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.
மாகாணசபைகளின் அதிகாரங்களைக் குறைக்கும் முயற்சிகளுக்கு எதிராக தமிழ், முஸ்லிம் சிறுபான்மைக் கட்சிகள் ஓரணியில் திரள வேண்டும் என்று அரசியல்கட்சிகள் சில கோரிக்கை விடுத்துள்ளமை தொடர்பில் கேட்டபோதே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் முத்துசிவலிங்கம் இதொ.காவின் நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தியுள்ளார்.
ஆளும் சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் முத்து சிவலிங்கம், அரசு அமைத்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலும் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கெடுப்பதன் மூலமே ஏனைய சிறுபான்மைக் கட்சிகள் தமது நிலைப்பாட்டை முன்வைக்க வாய்ப்பு ஏற்படும் என்று அமைச்சர் சிவலிங்கம் குறிப்பிட்டார்.



மலையகத் தமிழர்களின் வாழ்விடங்கள் பறிபோகும் அபாயங்கள் இருப்பதாகவும் அதற்காக தாம் அவதானமாகச் செயற்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.
அரசிலிருந்துவெளியேறி எதிரணியில் அமர்வதன் மூலம் மலையகத் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாது என்று அவர் மேலும் கூறினார். (ச)

# ரயில் கடவைகளின் விவரங்களை வழங்குக

கொழும்பு,ஜூலை 2
நாடளாவிய ரீதியில் காணப்படும் பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் குறித்த விவரங்களை உடனடியாக அறிவிக்குமாறு மனித உரிமை ஆணைக்குழு கோரியுள்ளது.
பாதுகாப்பற்ற ரயில் கடவைகளினால் நாட்டில் அதிகரித்துள்ள விபத்துக்களை தொடர்ந்து இந்த விடயம் தொடர்பில் தலையிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் தெரிவித்தார்.



அதனடிப்படையில், இலங்கையில் காணப்படும் பாதுகாப்பற்ற ரயில் கடவகைளின் விவரங்கள் அடங்கிய அறிக்கையை உடனடியாக சமர்பிக்குமாறு போக்குவரத்து அமைச்சிடமும் ரயில் திணைக்களத்திடமும் மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதீபா மஹானமவெவ கோரியுள்ளார்.(ச)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சட்டமும் ஒழுங்கும் நீதியும் சாய்ந்தால் சாயும் பக்கமாக மாறுமா...?

இலங்கையில், இந்த நாட்டில், இங்கு வாழும் இனங்களுக்கென வெவ்வேறு சட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன்வா? இனத்துக்கு ஒரு சட்டம் என்றவாறு கையாளப்படுகின்றதா என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் இப்போது பரவலாக நிலவி வருகிறது.

இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 'கிறீஸ் பூதம்' மக்களைத் தாக்கிய சம்பவங்கள் மாதக் கணக்காக நடைபெற்றன. அதனால் பாதிக்கப்பட்ட மக்கள், கிறீஸ் பூதத்தின் தாக்குதல்கள் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு விஸ்வரூபம் எடுத்ததும், கிளர்ந்து எழுந்தனர்; தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

கிறீஸ் மனிதன் என்று தாம் சந்தேகித்தவர்களை தாக்கியும், ஆர்ப்பாட்டங்களை நடத்தியும் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். பாதுகாப்புப் படையினர், அவர்களைத் தாக்கியும், கைது செய்தும், சிறைகளில் அடைத்தும் வைத்தனர். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் நடவடிக்கை என்று அரச சார்பில் வரவிலக்கணம் கூறப்பட்டது.

இப்போதெல்லாம், சில மதவாத அமைப்புகள் தேவாலயங்களையும், பள்ளிவாசல்களையும் மட்டுமன்றி மதகுருமார்களையும் தாக்கி வருகின்றன. அந்த அமைப்புகள் சட்டத்தை தமது கைகளில் எடுத்துள்ளன.

ஆனால் அவர்களில் எவரும் இதுவரை கைதுசெய்யப் படவுமில்லை; தண்டிக்கப்படவுமில்லை. இது ஜனநாயக முறைமைகளுக்கு ஒப்புடையவை அல்ல-என்று ஆணித்தரமாக எடுத்தியம்பி உள்ளார் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அவர்கள்.

சட்டமும் ஒழுங்கும், அவை நடைமுறைப்படுத்தப்படும் விதமும் இலங்கையில் கேள்விக்குறியாகி விட்டதாகவும் அவர் ஊன்றித் தொட்டுக்காட்டுகிறார். அதாவது பாதிப்புற்ற மக்கள் மனங்களில், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் அரசு காட்டும் பாகுபாட்டையும், பாராமுகத்தையும் அவர்கள் சார்பில் முன்வைத்துள்ளார், எழுப்பி உள்ளார்.

அரசின் இத்தகைய பாகுபாடும் பாரபட்சமும், நாட்டில் வாழும் மக்களுக்கும் சமநீதி வழங்கப்படுகிறதா என்ற பென்னம்பெரிய வினாவை எழுப்பி நிற்கிறது. இப்போது நிலவும் இனப் பாகுபாட்டுக்கு மேலதிகமாக மதப் பாகுபாட்டுக்கு தூபம் இடப்படுகிறது என்ற நிலையை வலிந்து தோற்றுவித்துள்ளது.

ஜனநாயக உரிமைகளை நாட்டு மக்கள் அனைவரும் சமமாக அனுபவிக்க வழிதுறை, வசதி செய்யப்படாவிட்டால், அது இன, மத ஒடுக்குதல்கள் மூலம் அவர்களிடையே குரோதங்களையும் பிளவுகளையும் இயல்பாகவும் சுலபமாகவும் உருவாக்கும், உண்டாக்கும். இதனை அரசு ஏனோ தானோ என்று கருதிச் செயற்படுமானால் அது நீண்டகால பாதக விளைவுகளை உருவாக்கும்.

ஐம்பதுகளில், நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததில் இருந்து, ஒரு தசாப்தத்தை எட்டுவதற்கு முன்னரே - எட்டு வருடங்களிலேயே - சிங்களம் மட்டும் சட்டம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டது. அதனால் உற்பவிக்கப்பட்ட சிங்களம் மட்டுமே உத்தியோக மொழி என்ற நெருப்பு மழை இன்னமும் தணிக்கப்பட்ட இல்லை. தமிழுக்கும் அரச கரும மொழி என்ற அந்தஸ்து வழங்கப்பட்ட போதிலும், தமிழ்ப் பிரதேசங்களில் இன்னமும் அது முழுமையாக நடைமுறையாக இல்லை என்பது, இப்போது பதவியில் உள்ள அரசினதும் முந்தியவையினதும் பொடுபோக்குத் தனத்தை வெளிச்சம் போட்டுக் காண்பித்துக் கொண்டிருக்கிறது.

அதன் வழியில் இப்போது, நாட்டின் பௌத்த மதம் தவிர்ந்த ஏனைய மத வழிபாட்டு ஸ்தலங்கள், நிலையங்கள் கொள்ளிக் கண்களால் பார்க்கப்படுகின்றன; அவை மீது தாக்குதல்களும் நடத்தப்படுகின்றன.

வெவ்வேறு இன மதங்களைச் சேர்ந்தவர்களில், குறிப்பிட்ட சாராருக்கு ஒரு சட்டமும், ஏனையோருக்கு வெவ்வேறு சட்டங்களும் நாட்டில் உள்ளனவா என்ற திருகோணமலை ஆயரின் வினா, ஆதங்கம் காலத்தின் கோலத்தால் எழுந்த ஒன்றே அன்றி வேறல்ல.

சட்டமும், ஒழுங்கும், நீதியும் அனைத்துப் பிரசைகளுக்கும் சமம் என்ற ஜனநாயகக் கோட்பாட்டுக்கும், கொள்கைகளுக்கும் ஊறு விளைவிக்கும் வகையிலேயே, அதிகாரங்கள் மாறுபடுத்தப்பட்டும், சாய்ந்தால் சாய்கிற பக்கம் என்ற நிலை பலதுறைகளிலும் பரவி வருகின்றன. இந்த நாடு எதனை நோக்கி நகர்த்திச் செல்லப்படுகிறது என்ற பென்னம் பெரிய வினாவையும் இந்த நிலை உயர்த்தி உள்ளது. பதில் இல்லாத வினாவாகவே இது தொடரும் என்று எதிர்பார்க்கலாம்;அவ்வளவு தான்.

# பொதுநலவாய தலைமைத்துவத்துக்கு அருகதை உள்ளதா இலங்கைக்கு?

இலங்கை அரசுதான் செய்த குற்றங்களைக் கணக் கெடுக்காதது மட்டுமல்ல, அதற்கு கைம்மாறு செய்கின்ற நிலையும் காணப்படுகிறது. அதாவது இவ்வாண்டு நவம்பரில், பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாட்டுக்கு தலைமை தாங்கவுள்ளது.

மியான்மாரில் ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்புவதில் தற்போது அனைத்துலகமும் மிக மும்முரமாக ஈடுபட்டுள்ள அதேவேளையில், பிறிதொரு ஆசிய நாடான இலங்கையில் ஜனநாயகம் அழிந்து போவது உலக நாடுகளின் கண்களுக்கு தெரியவில்லை என்பது ஆபத்தானது.

இந்த அடிப்படையில், இலங்கை அரசுதான் செய்த குற்றங்களைக் கணக் கெடுக்காதது மட்டுமல்ல, இதற்கு கைம்மாறு செய்கின்ற நிலையும் காணப்படுகிறது. அதாவது இவ்வாண்டு நவம்பரில், இலங்கையானது பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாட் டுக்கு தலைமை தாங்கவுள்ளது.

இதுவரை, இலங்கையில் இந்த உச்சி மாநாட்டை நடத்துவதை, பொதுநலவாய அமைப்பின் 54 உறுப்பு நாடுகளில் கனடா மட்டுமே தான் புறக்கணிக்கவுள்ளதாக அறிவித்திருந்தது. அதாவது பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாடு இலங்கையில் நடத்தப்பட்டால் தான் அதில் பங்கு கொள்ளப் போவதில்லை என கனேடியப் பிரதமர் அறிவித்திருந்தார்.

ஆனால் பிரித்தானியா, அவுஸ்திரேலியா, இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் பல்வேறு ஜனநாயக நாடுகள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள இலங்கையில் நடத்தப்படவுள்ள இந்த உச்சிமாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும். 2009இல் இலங்கைப் படைகள் நாட்டில் தொடர்ந்த உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்து வெற்றிவாகை சூடியிருந்தன. போர் ஆனால் இந்தப் படைகள் பல்வேறு மீறல்களைப் புரிந்திருந்தனர். இலங்கையின் தமிழ் மக்கள் வாழும் வடக்கில் முன்னெடுக்கப்பட்ட இறுதிக் கட்டப் போரில் 40,000 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போரின் இறுதிக்கட்டத்தில் காட்டுமிராண்டித்தனமான பல்வேறு அழிவுகள் மேற்கொள்ளப்பட்டு பல பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்ட போதிலும், நாட்டில்29 ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்த பயங்கரவாதப் போரை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசானது தனது ஆட்சிக்காலத்தில் முடிவுக்கு கொண்டு வந்ததாக புகழாரம் சூட்டப்படுகிறது. இவ்வாறான ஒரு கொடுமையான வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட போர்க் கால மீறல்கள் கவனத்திற் கொள்ளப்படா விட்டாலும், இந்தக் குற்றங்கள் மிகப் பயங்கரமானதாகும்.

இலங்கை அரசு மீது காணாமற் போதல் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதேபோன்று ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவதுடன், சிலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவ்வாண்டு, இலங்கையின் பிரதம நீதிபதி மீது குற்றப்பிரேரணை முன்வைக்கப்பட்டு, அவர் பலவந்தமாக பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இதேவேளையில், ராஜபக்சவின் குடும்பமானது வர்த்தகம் மற்றும்

> "இலங்கை அரசானது நீதித்துறை மற்றும் அரசியல் விமர்சகர்கள் மீது மேற்கொள்ளும் அடாவடிகள் அதிகரித்துள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் இலங்கையில் சர்வதிகாரம் தலை தூக்கியுள்ளது'' என அனைத்துலக நெருக்கடிகள் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசு மூலம் தனது செல்வாக்கை அதிகரித்து வருகிறது. இலங்கை ஜனாதிபதியின் சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷ அதிகாரம்மிக்க பதவியான நாட்டின் பாதுகாப்புச் செயலராகப் பணியாற்றுகிறார். பிறிதொரு சகோதரரான பஸில் ராஜபக்ஷ பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகப் பணியாற்றுகிறார்.

இதேவேளை இலங்கை ஜனாதிபதி தன்னைத் தானே புகழ்ந்து பாடுவதுடன், தனது பெயரை வரலாற்றில் பொறிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். இவ்வாண்டு இறுதியில் இலங்கை வரும் பொதுநலவாய அமைப்பைச் சேர்ந்த அரச தலைவர்கள் இலங்கையில் புதிதாகக் கட்டப்பட்ட ராஜபக்ஷ அனைத்துலக விமான நிலையத்தில் தரையிறங்குவதிலும் தொடர்ந்து அண்மையில் திறக்கப்பட்ட ராஜபக்ஷ தேசிய திரையரங்கில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் கலந்து கொள்வதிலும் மகிழ்ச்சி கொள்ள முடியும்.

இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் சூடான விவாதங்களை நடாத்திவருகின்றன. ''இலங்கை அரசானது நீதித்துறை மற்றும் அரசியல் விமர்சகர்கள் மீது மேற்கொள்ளும் அடாவடிகள் அதிகரித்துள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் இலங்கையில் சர்வதிகாரம் தலை தூக்கியுள்ளது'' என அனைத்துலக நெருக்கடிகள் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசானது கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்தில் தலையிடுவதுடன், தன்னை விமர்சிப்பவர்களைத் தொடர்ந்தும் அச்சுறுத்தி வருகிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. ''அரசாங்க அதிகாரிகள் அச்சுறுத்தப்படுகின்றனர். இனந்தெரியாதோர் ஊடகப் பணியாளர்கள் மீதும், பொது அமைப்புக்கள், அரசியல் எதிர்க்கட்சிகள் மீதும் தாக்குதல் நடத்துகின்றனர்'' என மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஊடக சுதந்திரம் தொடர்பான சுட்டி ஒன்றில் இலங்கையானது 179 நாடுகளில் 162வது இடத்தில் உள்ளதாக எல்லைகளற்ற பத்திரிகையாளர்கள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாண்டு இலங்கையில் புலனாய்வுத் தகவல்களை வெளியிடும் ஊடகவியலாளர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவி பிள்ளை இலங்கையில் மேற்கொள் ளப்படும்' படுகொலைகள் மற்றும் கடத்தல் சம்பவங்கள்' தொடர்பான தனது ஆழ்ந்த அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கையில் நீதித்துறை மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, ''இலங்கையில் பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாடு நடத்தப்பட்டால் அது இந்த அமைப்பின் பெறுமதி, நம்பகத்தன்மை மற்றும் எதிர்காலம் தொடர்பில் மிகப் பெரிய கேள்வியை எழுப்பும்'' என பொதுநலவாய அமைப்பின் சட்டவாளர் சங்கம் அறிவித்திருந்தது.

இலங்கையானது பொதுநல்வாய அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளான ஜனநாயகம், சுதந்திரம், சமாதானம், சட்ட ஆட்சி போன்றவற்றை மீறி நடப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், இங்கு பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டை நடத்துவது நிறுத்தப்படக் கூடாது என அழுத்தம் கொடுக்கப் படுகிறது. இந்த அமைப்பின் செயலாளர் நாயகமான கமலேஸ் சர்மா, இலங்கை விடயத்தில் எந்தவொரு தலைமைத்துவப் பண்பையும் பேணத் தவறிவிட்டார் எனக் கூறப்படுகிறது.

எதுஎவ்வாறிருப்பினும், கமலேஸ் சர்மா ஒரு சிவில் அதிகாரி ஆவார். இந்நிலையில் இலங்கை தொடர்பில் பொதுநலவாய அமைப்பு ஒன்று சேர்ந்து முடிவெடுக்க வேண்டும். கனடா தவிர வேறெந்த நாடும் இதனைச் செய்யவில்லை.

பிரித்தானியப் பேரரசிலிருந்து அமைக்கப்பட்ட பொதுநலவாய அமைப்பானது ஒரு பெறுமதி மிக்க வலைப்பின்னல் என நோக்கப்படுகிறது. பிரித்தானிய இராஜதந்திரிகள் வெளியுறவு மற்றும் பொதுநலவாய அமைப்பு செயலகம் போன்றவற்றில் பணியாற்றுகின்ற போதிலும், இலங்கை விடயத்தில் அமைப்பின் ஏனைய உறுப்பு நாடுகளின் துணையின்றி நடவடிக்கை எடுப்பதில் தயக்கம் காண்பிக்கின்றனர். ஆசியாவுடன் உறவைக் கட்டியெழுப்பும் ஆஸ்திரேலியாவானது இலங்கை விடயத்தைக் கவனத்திற் கொள்வது போல் தெரியவில்லை. இந்நிலையில், இதில் அங்கம் வகிக்கும் தென்னாபிரிக்கா மற்றும் இந்தியா ஆகியன தாம் ஜனநாயக நாடுகள் எனக் கூறுவதில் பெருமை கொள்கின்றன.

குறிப்பாக குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான தமிழ் மக்களைக் கொண்டுள்ள இந்தியாவானது இலங்கையில் பொதுநலவாய உச்சி மாநாடு நடத்தப்படுவதைப் புறக்கணிக்க வேண்டும். ஆனால் இந்திய அரசு இன்னமும் அது குறித்து முடிவு செய்ய முன்வரவில்லை. இவ்வாண்டு இறுதியில் பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாட்டுத் தலைவர்கள் உச்சி மாநாட்டில் பங்கு கொள்வதற்கு இலங்கை வரவுள்ளனர் என்பது கவலை தரும் உண்மையாகும். இதனுடன் பொதுநலவாய அமைப்பின் அழிவுகாலம் முடிவுக்கு வராது.

இதன்பின்னரும் இலங்கை அடுத்த இரு ஆண்டுகள் வரை பொதுநலவாய அமைப்பின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளும். அவ்விதம் நடந்தால் அதன் பின்னர் உலக விவகாரங்களில் தலையிடும் அதிகாரத்தை பொதுநலவாய அமைப்புக் கொண்டுள்ளது என்கின்ற கருத்து முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

*(நன்றி -புதினப்பலகை)*

# அழிக்கப்படும் இயற்கை வளங்கள்

கடந்த ஆண்டு கால போகத்தின் போது அறுவடைக்கு விவசாயிகள் தயாரான வேளையில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக நெற்பயிர்களுக்கு பெரும் அழிவுகள் ஏற்பட்டன. மாரி காலத்தைப் போன்று அடைமழை பெய்ததால் விவசாயிகள் முன்னெப்போதும் இல்லாதவாறு அழிவுகளை எதிர்கொண்டனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த விவசாயப் பணிப்பாளர் ஒருவர், வகைதொகையின்றிக் காடுகளை அழிப்பதால் மழை வீழ்ச்சி குறைவடைவதுடன் பருவம் தப்பிய மழையையும் மக்கள் எதிர்கொள்ள வேண்டி வரும் எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களே கடந்த வருடம் பருவம் தப்பிய மழைகாரணமாக பெரும் அழிவினை எதிர்கொண்டன. போர், இடப்பெயர்வுகள், நலன்புரி நிலைய வாழ்க்கை எனப் பல துன்பங்களை அனுபவித்த வன்னி மாவட்ட மக்கள் மீள்குடியமர்ந்த பின்னரும் நிம்மதியாக வாழ முடியவில்லை. காடுகள் அழிக்கப்படுவதுடன் மணல், கிரவல் என்பவற்றின் அகழ்வு காரணமாகவும் பெரும் நெருக்கடியை இவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி உதிரவேங்கை ஆலயத்துக்கருகில் பெருமளவு கிரவல் மண் அகழப்பட்டதால் அந்தக் பகுதி வித்தியாசமான தரைத் தோற்றத்தை தற்போது கொண்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பகுதியில் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டதால் அந்தப் பகுதி பாலைவனம் போன்று காட்சியளிக்கின்றது. இது அமைதிபுரக் கிராமத்துக்கு ஒரு சாபக் கேடாகவே அமைவதாகக் கொள்ளலாம்.

தற்போது துணுக்காய்ப் பகுதியின் பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக இடம்பெறும் மண் அகழ்வு காரணமாக இங்குள்ள பெருமளவு காடுகள் அழிவடைந்துள்ளன. இதனால் இந்தக் கிராமங்களின் இயற்கை வளங்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

துணுக்காய்ப் பிரதேச செயலர் மற்றும் முல்லைத்தீவு அரச அதிபர் ஆகியோரிடம் புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி கிராம மக்கள் நேரடியாகவும், மனுக்கள் மூலமாகவும் கிரவல் மண் அகழ்வு, காடழிப்பு ஆகியவை தொடர்பாக தெரிவித்து அவற்றைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும் இதுவரை பயன் எதுவும் கிடைக்கவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

துணுக்காய் கோட்டைகட்டிய குளத்திலும் பெரும் அளவிலான கிரவல் மண் அகழ்வு தற்போதும் இடம்பெற்று வருகின்றது. மேலும் அக்கராயனில் இருந்து துணுக்காய் செல்லும் வீதியிலிருந்து அரைக் கிலோமீற்றர் தூரத்தில் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டுள்ளதுடன் கிரவல் மண் அகழ்ந்து எடுத்துச் செல்லப்பட்டதற்கான தடயங்கள் காணப்படுகின்றன.

அரச செயலங்களில் இடம்பெறும் கூட்டங்களில் இது தொடர்பாக குரல் எழுப்பப்பட்ட போதிலும் பயன்கள் ஏதவும் கிடைக்கவில்லையென அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அனுராதபுரம் மற்றும் ஏனைய மாவட்டங்களில் மணல் மற்றும் கிரவல் அகழ்வுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குச் சென்று அங்கு தங்கியுள்ளதுடன் நூற்றுக்கணக்கான டிப்பர்களையும் கனரக இயந்திரங்களையும் பயன்படுத்தி காடுகளை அழித்தும் கிரவல் மண்ணை அகழ்ந்தும் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களிலுள்ள வீதிகளின் புனரமைப்புக்கும் கட்டட வேலைகளுக்கும் விநியோகித்து வருகின்றனர். மேலும் யாழ்ப்பாணம் நோக்கிய புகையிரத பாதையின் புனரமைப்புக்கும் கிரவல் மண்கொண்டு செல்லப்படுவதால் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் கடும் பாதிப்புக்களை எதிர்நோக்கியதாக இயற்கை வளம் காணப்படுகின்றது. மேலும் கிராமங்களைப் பாதுகாக்க வேண்டிய கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கூட தமது கிராமங்களில் நடைபெறும் கிரவல் மண் அகழ்வுகள் காடழித்தல் போன்ற செயற்பாடுகள், தொடர்பாக ஓங்கிக் குரல் கொடுப்பதுடன் இவற்றைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுடன் செயற்படுதல் வேண்டும்.

மன்னார் தொடக்கம் பூநகரி வரையான கரையோரப் பகுதிகள் உவரடைந்து வருகின்றன. பல்லவராயன் கட்டு போன்ற தொன்மையான கிராமங்களின் நிலப் பகுதிகள் முழுமையாக உவரடைந்துள்ளன. ஜெயபுரத்திலும் முக்கொம்பனியிலும் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டு வரும் நிலையில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமது கிராமங்களின் இயற்கை வளம் அழிவுறாது காப்பதற்கு முன்வர வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கோணாவில் கிராம அலுவலர் பிரிவில் உள்ள யூனியன் குளம் கிராமத்தின் கிழக்குப் பகுதியில் தினமும் காடுகள் அழிக்கப்படுவதுடன், பெருமளவு கிரவல் மண் பூநகரியின் வீதி புனரமைப்புக்கெனக் கொண்டு செல்லப்படுகின்றது. ஆனால் இது தொடர்பாக மக்கள் அக்கறையின்றி இருப்பது வேதனைக்குரியது.

அரச அதிகாரிகளும், கிராமங்களைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இயற்கை தந்த வரமான காடுகளை அழிப்பதன் மூலமாக பருவம் தப்பிய மழையும், வெள்ள அபாயமும் ஏற்பட்டு விவசாய முயற்சிகள் எதிர்காலத்தில் அழிவடையக் கூடிய அபாய நிலை உருவாகும் என்பதால் தத்தமது பிரதேசங்களின் சூழலைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை அப் பகுதிகளில் வாழும் பொது மக்களே ஏற்க வேண்டும் என்பதே யதார்த்தமான உண்மையாகும். இதனைக் கருத்தில் கொண்டு இவ் விடயத்தில் சகல தரப்பினரும் அக்கறை காட்டிச் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாக ஆகியுள்ளது.


கி.பிருதவி






# பவள விழாக் காணும் கற்சிலைமடு பாடசாலை

இ.தனபாலசிங்கம்

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட கற்சிலைமடு ஒரு விவசாயக் கிராமமாகும். இங்கு வாழ்பவர்கள் பரம்பரை பரம்பரையாக கால் நடை வளர்த்தல் உட்பட விவசாயத்தையே நம்பியுள்ளனர். இங்கு வாழ்ந்த மூதாதையர்களின் குழந்தைகளுக்கென பாடசாலைகள் அமைக்கப்படாததால் ஓலைக் குடிசைகளிலேயே கல்வி புகட்டப்பட்டது. ஆனால் கல்வியில் அதிகளவு நாட்டமின்மையால் மாணவர்களால் பெரியளவில் அறிவைப் பெறமுடியவில்லை.

இந்த நிலையில் 1934 ஆம் ஆண்டு கற்சிலைமடுவில் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு சிறந்த கல்வியை புகட்ட வேண்டுமென்ற நோக்கில் பாடசாலை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்றைய தலைமை ஆசிரியராக எஸ்.அந்தோனிப்பிள்ளை என்பவர் நியமிக்கப்பட்டார்.

தொடர்ந்து கல்வி நட்வடிக்கைகள் இடம்பெற்றபோது கரவெட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை என்பவர் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் வடமராட்சி வதிரியைச் சேர்ந்த வே.முத்துலிங்கம் என்பவர் நியமிக்கப்பட்டார். அப்போது இந்தப் பாடசாலையில் 5 ஆம் வகுப்பு வரை 55 மாணவர்கள் கல்வி பயின்றனர். உடுப்பிட்டியைச் சேர்ந்த என். நாகரத்தினம் என்பவர் தலைமையாசிரியரர்கப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு அவர் அயராது பாடுபட்டார். இவர் பொறுப்பேற்றதன் பின்னர் மேலும் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டதுடன் 110 மாணவர்களுடன் க.பொ.த. சாதாரணதர வகுப்பு வரை பாடசாலை இயங்கியது. இந்தக் காலத்தில் சில மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற போதிலும் பல்கலைக் கழகம் செல்வதற்கான தகுதியைப் பெற முடியவில்லை. இதனையடுத்து முள்ளியவளையைச் சேர்ந்த ச.தில்லையம்பலம் என்பவர் பாடசாலை முதல்வராக நியமனம் பெற்றார். இவரைத் தொடர்ந்து உடுப்பிட்டியைச் சேர்ந்த பொ.அருமைச்சந்திரன் என்பவர் பாடசாலையின் தலைமைப் பொறுப்பை ஏற்று பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார். மாணவர்களின் தொகை படிப்படியாக அதிகரித்து 400 மாணவர்கள் வரை கல்வி கற்றனர். இதனால் தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டதுடன் உதவி ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர்.

இந்தப் பாடசாலை க.பொ.த. உயர் தரம் வரையில் உயர வேண்டும் என அப்போதிருந்த அதிபர் உழைத்து அதில் வெற்றிகண்டவர் ஆவார். மேலும் இந்தப் பாடசாலை மகாவித்தியாலயமாக உயருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் பாடசாலை அதிபர் இடமாற்றப்பட்டார். இவரது பிரிவு அன்றைய மாணவர்களின் மனதைப் பெரிதும் புண்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து இந்தப் பாடசாலையின் பழைய மாணவரும், இந்த மாவட்டத்தில் கல்வி பயின்றவருமான சி.நாகேந்திரராசா பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் பாடசாலை வளர்ச்சிக்கும் முன்னாள் அதிபரின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கும் பாடுபட்டார். மேலும் சக ஆசிரியர்களின் உதவியுடனும், துணுக்காய் கல்வி வலயத்தினர், ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அலுவலகத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் விளையாட்டுத் துறைகளிலும் மாணவர்களை மேம்பட வைத்துள்ளார். 2011 ஆம் ஆண்டு 13 மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்லக்கூடிய வகையில் பெறுபேறுகளைப் பெற்றனர்.

அதுமட்டுமல்லாமல் கோட்ட, வலய, மாகாண மட்டங்களில் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட இந்தப் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குப் பெருமை தரும் வகையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முன்னணியில் திகழ்கின்றனர்.

இந்தப் பாடசாலையின் அடிப்படை வசதிகள் இல்லாத நிலை, விஞ்ஞான ஆய்வு கூட வசதிகள் இல்லாமை, போதிய இட வசதியின்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரின் முயற்சியினால் மாடிக் கட்டடங்கள் , ஆசிரியர் விடுதி , நவீன மலசலகூடம் , அதிபருக்கான விடுதி என்பன கட்டப்பட்டுள்ளன. அத்துடன் இந்தப் பாடசாலையில் கற்பித்து வந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதால் ஆசிரியர் பற்றாக்குறையும் நீங்கியுள்ளது.

55 மாணவர்களுடன் சிறிய கட்டடம் ஒன்றில் இயங்கி வந்த இந்தப் பாடசாலையானது தற்போது 400 இற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ளதுடன் ஜீ.சி.ஈ. உயர்தர வகுப்பு வரை சகல வசதிகளுடனும் உயர்ந்து நிற்பதற்கு மாணவர்களின் சிறந்த பெறுபேறுகளே காரணம் எனக் கூறலாம்.

பாடசாலையின் புதிய கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து திறந்து வைக்கப்படும் நிலையில் பாடசாலையின் பவள விழாவினை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 'லோட் ஒப் த றிலோட்' திட்டத்தில் டயலொக் வாடிக்கையாளருக்குப் பதிவு




யாழ்ப்பாணம், ஜூலை2

டயலொக் நிறுவனத்தால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ''லோட் ஒப் த றிலோட்'' பரிசுத்திட்டத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள் இருவருக்கு தலா ஒரு லட்சம் ரூபா பரிசு வழங்கப்பட்டது.

கடந்த மே மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ''லோட் ஒப் த றிலோட்'' பரிசுத்திட்டம் நாடளாவிய ரீதியில் டயலொக் நிறுவனத்தால் நடை முறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பரிசுத் திட்டத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாடிக்கையாளர்கள் ஒரு லட்சம் ரூபா பரிசுக்குரிய வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இதன் அடிப்படையில் ''லோட் ஒப் த றிலோட்'' பரிசுத்திட்டத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர் ஒருவர் அண்மையில் பரிசுக்குரிய வெற்றியாள ராக முதல் முறையாகத் தெரிவு செய்யப்பட்டார்.

தற்போது அடுத்த வெற்றியாளர்களாக அல்வாய் கிழக்கு தம்பசிட்டியைச் சேர்ந்த தங்கவேல் ஜெயக்குமரான், யாழ்ப்பா ணம் 4 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த சங்கர் ஆகிய இருவரும் தலா ஒரு லட்சம் ரூபா பரிசுக்குரிய வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பரிசினை டயலொக் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட முகாமையாளர் மு.இளையராஜா வழங்கி வைத்தார்.

குலுக்கல் முறையில் ஒவ்வொரு நாளும் தெரீவு செய்யப்படும் இந்தப் பரிசுத்திட்டம் தொடர்ந்து 3 மாதங்களுக்கு நடைமுறையில் இருப்பதுடன் 50 ரூபாவுக்கு றிலோட் செய்யும் வாடிக்கையாளருக்கு 3 போனஸ் எனும் அடிப்படையில் றிலோட் பெறு மதிக்கு ஏற்ப குலுக்கல் முறையில் பரிசுக் குரியவர் தெரிவு செய்யப்படுகின்றனர். (த-14)

> 'லோட் ஒப் த றிலோட்'' பரிசுத்திட்டம் நாடாளாவிய ரீதியில் டய லொக் நிறுவனத்தால் நடை முறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பரிசுத் திட்டத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாடிக்கையாளர் கள் ஒரு லட்சம் ரூபா பரிசுக்குரிய வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

# றிச்சர்ட் பீரிஸ் ரயர் கம்பனியின் சிறந்த விநியோகத்தர் ஒன்றுகூடல்

றிச்சர்ட் பீரிஸ் ரயர் கம்பனி நிறுவனத்தின் வருடாந்த விநியோகத்தர் ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் தம்புளை அமாயா லேக் ஹோட்டலில் கோலாகலமாக இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக குழுமத்தின் பணிப்பாளர் பேராசிரியர் லக்ஷ்மன் ஆர்.வட்டவல கலந்து கொண்டார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளடங்கலாக நாடு பூராகவும் பரந்து காணப்படும் 1300 விநி யோகத்தர்களிலிருந்து, சிறப்பாக தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்த 60 விநியோகத்தர்கள் தமது குடும்பத்தாருடன் இந் நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர். இந்த விருது வழங்கும் வைபவம் ரயர் விநியோ கத்தர்களின் குடும்பத்தினர் வருடாந்தம் ஒன்றுகூடும் நிகழ்வாக அமைந்துள்ளதுடன் பெருமளவு எதிர்பார்க்கும் வைபவமாகவும் அமைந்துள்ளது. நாவின்ன, குருணா கல், கண்டி, வெலிகம மற்றும் கம்பஹா தொழிற்சாலை களில் தயாரிக்கப்படும் ஆர்பிடெக், ஆர்பிகோ மற்றும் ஆர்பி ரேடியல் ரயர்களை விநியோகிக்கும் சிறந்த 50 விநியோகத்தர்கள் தெரிவு செய்யப் பட்டிருந்ததுடன், இறக்குமதி செய்யப்படும் பிர்லா ரயர்கள் மற்றும் ரியுப் வகைகளை (இந்தியா) விநியோகிக்கும் சிறந்த 10 விநியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இந்த விருது வழங்கும் நிகழ்வில், றிச்சர்ட் பீரிஸ் டயர் கம்பனி பல புதிய விருது வழங்கும் பிரிவுகளை அறிமுகம் செய்தி ருந்தது. இதில், ரிடிரெட்டிங் துறையில் மாகாண மட்ட விருதுகள், ஆர்பிகோ ரயர், ஆர்பிடெக், ஆர்பிரேடியல், பிர்லா ரயர் மற்றும் ஒடோமடிவ் பற்றரி வர்த்தக நாம சிறப்பு விருதுகள் மற்றும் சிறந்த விற்பனை பிரதிநிதி விருதுகள் போன்றன வழங்கப்பட்டிருந்தன. விற்பனை துறையில் சிறப்பாக தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்த விநியோகத்தர்களுக்கு வெளிநாட்டு சுற்றுலா வாய்ப்புகளும் வழங்கப்பட்டிருந்தன.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் ரிடிரெடிங் பிரிவில், திக்வெல்ல - சாந்த ரயர் மார்ட் நிறுவனத்தின் எம்.எச். ரி.ஜே.சாந்திரத்ன, நீர்கொழும்பு ஆசிரி ரயர் ரேடர்ஸ் உரிமையாளர் எச்.எம்.வசந்த குமார மற்றும் ரம்புக்கன சிசிர ரயர் ஹவுஸை சேர்ந்த டபிள்யு.ஏ.டபிள்யு.டபிள்யு. சிசிர குமார ஆகியோர் முறையே வெற்றியாளர், இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களை பெற்றிருந்தனர். டிரெடிங் பிரிவில் அநுராதபுரத்தைச் சேர்ந்த ஒடோ ரயர் வேய்ஸ் நிறுவனத்தின் பி.ஏ.சுனில் பிரேமரத்ன மற்றும் ஹிருணி ரயர் ஹவுஸ் நிறுவனத்தை சேர்ந்த ஐ.ஏ.கரு ணாதிலக ஆகியோர் இணை வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், இரண்டாமிடத்தை ரி.நந்தகுமாரன் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)



தேசிய சேமிப்பு வங்கி மானிப்பாய்க் கிளையினால் 2012 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா நவாலி வீதி துரைஐயா மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.
விழாவில் பிரதம விருந்தினராக கொழும்பிலிருந்து வந்த சிறப்பித்த வங்கியின் உதவி பொது முகாமையாளர் (செயற்பாடுகள்) ஈ.எம்.எம்.ஜி.எக்கநாயக்க பரிசில் வழங்குகிறார். (த)



காரைநகர் தேசிய சேமிப்பு வங்கி கிளையினால் நடத்தப்பட்ட 5 ஆம் தரப் புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் வட வலய பொது முகாமையாளர் வி.அருளானந்தம் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (த-250)



ஹற்றன் நஷனல் வங்கி மல்லாவிக் கிளையின் சூழல் தினத்தை முன்னிட்டு ''சிங்கித்தி'' சேமிப்பாளர்களுக்கு மரக் கன்றுகள் வழங்கும் வைபவம் கடந்த 5 ஆம் திகதி கிளை முன்றிலில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு பாடசாலை மற்றும் முன்பள்ளி மாணவர்கள் அழைக்கப்பட்டு அவர்களுக்கு பயன்தரு மரக் கன்றுகள் வழங்கப்பட்டன. (த-415)




இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளை வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த ஒருவருக்கு நான்கு மில்லியன் ரூபா பெறுமதியான கூலர் வாகனத்தை கடனடிப்படையில் கொள்வனவு செய்து வழங்கியுள்ளது. வாகனம் கையளிப்பு நிகழ்வு அண்மையில் வங்கிக்கு முன்னால் இடம்பெற்றது. வங்கிக் கிளை முகாமையாளர் கோ.சேதுகாவலர் பயனாளியிடம் வாகனத்துக்குரிய ஆவணங்களைக் கையளித்தார். (த-9)

# மனுக் கையளிக்கச் சென்ற போது தடுக்கப்பட்ட சிலாவத்துறை மக்கள்

## கண்டிக்கிறார் முசலி பிரஜைகள் குழுத் தலைவர்

மன்னார், ஜூலை 2

முசலிப் பிரதேச சபைத் தலைவரிடம் மனுவொன்றைக் கையளிக்கச் சென்ற சிலாவத்துறை மக்களை சிலர் வழி மறித்து வீட்டுக்கு அனுப்பிய சம்பவத்தை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக முசலிப் பிரதேச பிரஜைகள் குழுவின் தலைவர் எஸ்.சுனேஸ் சோசை தெரிவித்துள்ளார்.

முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை முசலி பிரதேச சபைத் தலைவருக்கு மகஜர் கையளிக்கச் சென்ற போது குறித்த மக்களில் பலரை கிராம மட்ட தலைவர்கள் வழி மறித்து மீண்டும் வீட்டுக்கு அனுப்பிய சம்பவத்தை தான் வன்மையாகக் கண்டிப்பதாக முசலி பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளர் எஸ்.சுனேஸ் சோசை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் ;

முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை கிராமத்தில் மீள் குடியமர்ந்த மக்களுக்கு எவ்வித அடிப்படை வசதிகளும் இது வரை ஏற்படுத்திக் கொடுக்காத நிலையில் மக்கள் முசலி பிரதேச சபையின் தலைவருக்குத் தமது கோரிக்கை அடங்கிய மனுவொன்றைக் கையளிப்பதற்கு முடிவு செய்தனர்.

கடந்த புதன் கிழமை இந்த மக்கள் முசலிப் பிரதேச சபையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

இதன்போது முசலிப் பிரதேச செயலகத்துக்கு முன்பாகவும், சிலாவத்துறை சந்திப் பகுதியிலும் வைத்து கிராம மட்டத் தலைவர்கள் எனக் கூறப்படுபவர்களால் இவர்கள் இடைமறிக்கப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாக உள்ளது.

இதனை முசலி பிரதேச பிரஜைகள் குழு வன்மையாகக் கண்டிப்பதோடு இனி வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் எமது முசலி பிரதேசத்தில் இடம்பெறக் கூடாது எனவும், மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக உரியவர்களிடம் தெரிவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

# பனங்காமம் சிவாலயத்தின் புனரமைப்பு துரிதகதியில்

முல்லைத்தீவு, ஜூலை 2

முல்லைத்தீவு பனங்காமம் சிவாலயத்தின் புனரமைப்புப் பணிகள் மிகதுரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பனங்காமம் சிவாலயம் வன்னி மன்னராட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட மிகவும் பழைமை வாய்ந்த ஓர் ஆலயமாகும். இந்த ஆலயம் கடந்த 1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜெயசிக்குறு படை நடவடிக்கை, அதன் பின்னர் 2006 ஆம் ஆண்டில் நிகழ்ந்த போர் என்பவற்றால் கடுமையாகச் சேதமடைந்தது.

தற்போது இந்த ஆலயம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. ஆண்டு தோறும் ஆடி ஆமாவாசை தினத்தில் பறங்கியாற்றில் தீர்த்தம் இடம் பெற்று பிதிர்க்கடன் தீர்க்கும் ஒரு ஆலயமாக இது விளங்கியது. பண்டாரவன்னியனின் வரலாற்றில் சிறப்பித்துக் கூறப்படும் சிவாலயமாக இந்த ஆலயம் விளங்கியமை குறிப்பிடத்தக்கது. (க-6)

> “ ஆலயம் கடந்த 1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜெயசிக்குறு படை நடவடிக்கை, அதன் பின்னர் 2006 ஆம் ஆண்டில் நிகழ்ந்த போர் என்பவற்றால் கடுமையாகச் சேதமடைந்தது.

# பரப்புக்கடந்தான் காணி அபகரிப்பு; உடன் தடுத்து நிறுத்துமாறு மனு

மன்னார், ஜூலை 2

மாந்தை மேற்கு பரப்புக்கடந்தான் மேற்கு கிராமத்தில் இடம்பெறும் காணி அபகரிப்பை தடுத்து நிறுத்துமாறு கோரும் மனுவொன்று மன்னார் அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை பரப்புக் கடந்தான் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் சி.பிரான்சிஸ் அனுப்பி வைத்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுமார் 750 குடும்பங்களை உள்ளடக்கியதாக பரப்புக் கடந்தான் மேற்கு கிராமம் காணப்பட்டது.

இதில் 110 குடும்பங்கள் மட்டுமே போர் முடிவடைந்த பின்னர் மீள்குடியமர்ந்துள்ளனர். 640 குடும்பங்களும் இந்தியாவிலுள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ளன.

இவர்கள் தற்போது திரும்பி வருவதற்கு எண்ணியுள்ளனர். இவர்களுக்கு 1988 ஆம்,1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பரப்புக்கடந்தான்-மடு வீதியின் இரண்டாம் கட்டைப் பகுதியின் வடக்கு, தெற்கு ஆகிய பகுதிகளில் யு.என்.எச்.சி.ஆர் அமைப்பின் மூலமாக காணி வழங்கப்பட்டு வீடுகளும் அமைக்கப்பட்டன.

அதற்கான ஆதாரம் அந்த இடங்களில் காணப்படுகின்றன. இந்த நிலையில் தற்போது மன்னார் வங்காலையைச் சேர்ந்த தனியார் ஒருவர் மேற்படி இடத்தில் 500 ஏக்கருக்கும் அதிகமான காணிக்கான அனுமதிப்பத்திரம் உள்ளதாகக் கூறிக் கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இதனை நன்கு ஆராய்ந்து தடுத்து நிறுத்துவதுடன் இங்கு ஏற்கனவே வசித்த மக்களுக்குரிய காணிகளை வழங்குமாறும், தனியாரின் சட்ட விரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

# யானைகளின் அட்டகாசத்தினால் பொதுமக்கள் அச்சம்

விசுவமடு, ஜூலை 2

விசுவமடு தொட்டிலடிப் பகுதியில் இரவு வேளைகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் இரவு நேரத்தை பயத்துடன் கழித்து வருகின்றார்கள்.

தினமும் பத்துக்கும் மேற்பட்ட யானைகள் பொது மக்களின் தென்னை மரங்கள் உட்பட ஏனைய பயிர் வகைகளையும் அழித்து துவம்சம் செய்கின்றன.

மேலும் இரவு வேளைகளில் கூட்டமாக வரும் இந்த யானைகள் பயிர்களுக்கு மோசமான அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

இது தொடர்பாக அதிகாரிகளுக்கு முறையிட்டுள்ள போதிலும் யாரும் இதில் கவனம் செலுத்தாமையால் பொது மக்கள் தமது இரவு நேரத்தை பயத்துடன் போக்குவதாக பொது அமைப்புக்களும் பொது மக்களும் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். (க-86)

# அதிபர்களுக்கான கல்விச் சுற்றுலா

மன்னார், ஜூலை 2

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான நான்கு நாள்கள் கல்விச் சுற்றுலா கடந்த வாரம் இடம்பெற்றது.

கிழக்கு, ஊவா, மத்தி ஆகிய மாகாணங்களில் உள்ள மாதிரிப் பாடசாலைகளுக்கு இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதிபர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றுலாவில் கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 30 அதிபர்கள் பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-9)



பளைப் பிரதேசத்தில் இடம்பெற்ற மாற்று ஆற்றல் உள்ளோருக்கான நலநோம்பு அடையாள அட்டை வழங்குவது தொடர்பான சேவையில் பதிவுகள் இடம்பெற்ற வேளை... (வ-9)

# நகரப்புறங்களை நாடும் ஆசிரியர்களால் பாதிக்கப்படும் கிராமப் பாடசாலைகள்

அக்கராயன், ஜூலை 2

நகரப்புறப் பாடசாலைகளை ஆசிரியர்கள் அதிகளவில் நாடுவதால் கிராமங்களில் அமைந்துள்ள பாடசாலைகள் பாதிப்புக்களை எதிர்கொள்வதாக கிளிநொச்சி மக்கள் தெரிவிக்கின்றனர்.

புதிதாக நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு வலயக் கல்விப் பணிமனையினரால் பாடசாலைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றபோதிலும் ஆசிரியர்கள் தமக்கு நகரை அண்டிய பாடசாலைகளில் நியமனத்தை வழங்குமாறு வேண்டுகோள் விடுப்பதாகத் தெரிய வருகின்றது.

அக்கராயன் மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள விடுதியில் தற்போது 20 ஆசிரியர் வரையில் தங்கியுள்ளனர்.

மேலும் ஆசிரியர்கள் இங்கு தங்கக் கூடிய வசதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அக்கராயன் வரும் ஆசிரியர்கள் குடிதண்ணீரைக் காரணம் காட்டி இடமாற்றம் கோருகின்ற நிலையும் காணப்படுகின்றது. பூநகரியிலுள்ள பாடசாலைகளிலும் இதே நிலைதான் காணப்படுகின்றது.

மன்னாரின் மடுக் கல்வி வலயத்தில் காணப்படும் போக்குவரத்து நெருக்கடியினால் டிப்பர்களில் பயணிக்கக் கூடிய ஆண் ஆசிரியர்களை நியமியுங்கள் என்று வடமாகாணக் கல்வி அதிகாரிகளிடம் கோரும் நிலையில் மடுக் கல்வி வலயத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள் உள்ளனர். (க-18)

# கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த துரித நடவடிக்கைகள்

## வவுனியா நகர சபை உப தலைவர் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 2

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வவுனியா நகரசபையின் பதில் தலைவர் எம்.எம். ரதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

அண்மைக் காலமாக வவுனியாவில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகள் ,நாய்கள் என்பனவற்றால் வாகன விபத்துக்கள் ஏற்பட்டுப் பலர் காயமடைந்ததோடு வேறு பலர் அசௌகரியங்களை எதிர் கொண்டனர்.

இதற்கமைவாக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும் நகரசபைக்கும் இடையில் இடம்பெற்ற அவசர சந்திப்பை அடுத்து கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் உடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக வீதிகளிலும் பொது இடங்களிலும் காணப்படும் மாடுகளைப் பிடிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு நகர சபையின் சுகாதாரப் பிரிவின் விசேட ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்குப் பொறுப்பாக நகரசபையின் சிரேஸ்ட உறுப்பினரும், சுகாதாரக் குழுத்தலைவருமான சு.குமாரசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் பிரகாரம் மாடுகள் பிடிக்கப்பட்டு நகரசபையில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள இடத்தில் வைத்துப் பராமரிக்கப்படவுள்ளன. மாடுகளை உரியவர்கள் பெறவிரும்பினால் பிடி கூலியாக 400 ரூபாவும், கட்டணமாகக் நாளொன்றுக்கு பராமரிப்பு 250 ரூபாவும் செலுத்தவேண்டும்.

பிடிக்கப்படும் கட்டாக்காலி மாடுகள் 72 மணித்தியாலங்களுக்குள் மீட்கப்படாத பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வைரவபுளியங்குளம், ஏ-9 வீதி, வேப்பங்குளம், பூந்தோட்டம் ஆகிய பகுதிகளில் தான் அதிகளவு கட்டாக்காலி மாடுகள் காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்குப் பொது மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



இதைப் போன்று வவுனியா நகரில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்களையும் கட்டுப்படுத்துவதற்காக பம்பைமடுப் பிரதேசத்தில் விசேட பண்ணையொன்று அமைக்கப்பட இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)


## பளை மத்தியஸ்தர் சபைக்கு பெருமளவு முறைப்பாடுகள்

"சபை உறுப்பினர்கள் 19 பேரின் பங்களிப்புடன் பிணக்குகள் சுலபமாகத் தீர்த்து வைக்கப்படுகின்றன.

பளை, ஜூலை 2

பளைப் பிரதேச மத்தியஸ்தர் சபைக்கு பெருமளவு முறைப்பாடுகள் வந்து குவிவதாக சபைத் தவிசாளர் ந.ஜீவானந்தம் தெரிவித்தார்.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பளைப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் மத்தியஸ்தர் சபைக்கு 60 இற்கும் மேற்பட்ட மனுக்கள் கிடைக்கின்றன. சபை உறுப்பினர்கள் 19 பேரின் பங்களிப்புடன் பிணக்குகள் சுலபமாகத் தீர்த்து வைக்கப்படுகின்றன. சபையின் கோரிக்கைகளை இரு பகுதியினரும் ஏற்றுக் கொள்ளாத பிணக்குகள் நீதி மன்றுக்குச் செல்லுமாறு தெரிவிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-9)



யாழ்ப்பாணம் சுண்டிக்குளி திருமுழுக்கு யோவான் ஆலயத்தின் 125ஆவது ஆண்டு நிறைவின் யூபிலி விழாவை முன்னிட்டு அரங்கேற்றம் செய்யப்பட்ட சஞ்சுவாம் நாட்டுக்கூத்தின் இயக்குநர் ஜோண்சன் இராஜ்குமாருக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசெவ் ஆண்டகை நாட்டுக்கூத்து அண்ணாவியார் என்னும் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். (வ)

## கைத்தொழில் வளர்ச்சியில் முன் நிற்கின்ற மலேசியாவைப்போன்று நாமும் வளர வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 2

இன்று மலேசியாவின் பிரதமர் மஹதீர் மொகமட்டின் முயற்சியினால் கைத்தொழில் வளர்ச்சியில் முன் நிற்கின்ற ஒரு நாடாக மலேசியா காணப்படுகின்றது. இதேபோல் நாமும் நிற்க வேண்டும் என்று பாரம்பரிய சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி தெரிவித்தார்.

கைத்தொழில் முதலீட்டாளர்கள், வங்கியாளர்கள் மற்றும் அரச பிரதிநிதிகளுக்கான விசேட கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எம்மிடம் உள்ள 19 கைத்தொழில் பேட்டைகளையும் முன்கொண்டு வருவதற்கு பாரம்பரிய சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் ஊடாக கருத்திட்டங்களை முன் வைக்கின்றோம்.

இதன் ஓர் அங்கமே அச்சுவேலி கைத்தொழில் பேட்டையாகும். இதன் ஊடாக முதல் கட்டமாக 25 ஏக்கரில் அபி விருத்திகளை முன்னெடுத்து 50 முதலீட்டாளர்களுக்கு அடுத்த மாதத்தில் காணித்துண்டங்களை பகிர்ந்து வழங்கவுள்ளோம்

அடுத்த ஆண்டின் 45 ஏக்கர் நிலப்பரப்பில் முதலீட்டு திட்டங்களை முன்னிறுத்துவதற்கான வரவு - செலவு திட்டங்களை தயாரித்து வருகின்றோம்.

இந்த விடயத்தில் நீதிய மைச்சு கூட எமக்கு கூடுதல் நிதிகளை வழங்க முன்வருகின்றது- என்றார். (எ-50)

## நினைவுப் பேருரையும் பிறந்தநாள் நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜூலை 2

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்து போர்ட் சு.இராசரத்தினம் பிறந்த நாள் நிகழ்வும் நினைவுப் பேருரையும் சைவ வித்தியா விருத்திச் சங்க ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும் .

நினைவுப் பேருரையை பேராசிரியர் நா.ஞானக்குமாரன் '' சமூக மேம்பாடும் சமயக் கல்வியும்'' எனும் தலைப்பில் நிகழ்த்துவர். (ந)

## ஆன்மிக சொற்பொழிவு

வடமராட்சி, ஜூலை 2

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 5 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது. திருத்தொண்டின் நெறி என்னும் தலைப்பில் இடம்பெறும் இச்சிறப்புச் சொற்பொழிவை பல்கலைக்கழக இளைப்பாறிய சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ.விநாயகமூர்த்தி நிகழ்த்துவார். (வ-8)

## வர்த்தகர்கள், பொதுமக்கள் நன்மை கருதி விசேட யாகம்

தென்மராட்சி, ஜூலை 2

குடாநாட்டில் அண்மைக்காலமாக வர்த்தகர்கள், பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் சாவகச்சேரி வாரிவனநாத சிவன் ஆலயத்தில் விசேட யாகம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மாத இறுதிப் பகுதியில் யாகம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு ஏற்பட்டு வரும் வியாபார நெருக்கடிகள் , பொருளாதார நெருக்கடிகள் போன்றவற்றால் அநியாய உயிரிழப்புக்கள் ஏற்பட்டு வருகிறது. பல குடும்பங்கள் நெருக்கடிகளால் தலை தூக்க முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றினைக் கருத்தில் கொண்டு விசேட யாகம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

நாளை

ஆனி-19 புதன்கிழமை 03.07.2013
திதி: ஏகாதசி பி.இ. 05.53 வரை
நட்சத்திரம்: பரணி மு.இ. 11.33 வரை
சுபநேரம்: 04.27 - 05.57 வரை
இராகுகாலம்: 11.57 - 01.27 வரை



**மேஷர்:** யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உறவினர், நண்பர்களுடன் வீண் விவாதம் வந்துப் போகும். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிக்க வேண்டி வரும்.



**இடபர்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைசுமை குறையும். உடன் பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டாரம் விரிவடையும்.



**மிதுனர்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.



**கடகர்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**சிங்கர்:** சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. யாரையும் நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சி வசப்படாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.



**கன்னி:** எண்ணம்போல் செயற்பட வேண்டும்மென எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும்.



**துலாமர்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பண உதவி கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.



**விருச்சிகர்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.



**தனுசு:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்திப்பார். பணவரவு சீராக இருக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.



**மகரர்:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு.



**கும்பர்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.



**மீனர்:** நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப்பாக முடியும். நண்பர்கள், உறவினர்களுடன் உரிமையில் வரம்பு மீறிப் பேச வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 1 | | | 5 | 6 | | |
| 2 | 6 | | | 7 | | | | 4 |
| | | | 4 | | 6 | | 3 | |
| 5 | | 2 | | 8 | | | | |
| 7 | | 6 | | 5 | | 8 | | 3 |
| | | | | 2 | | 9 | | 7 |
| | 2 | | 7 | | 9 | | | |
| 9 | | | | 3 | | | 4 | 6 |
| | | 8 | 5 | | | 7 | | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 4 | 6 | 8 | 9 | 2 | 7 | 5 |
| 8 | 2 | 5 | 4 | 7 | 3 | 1 | 6 | 9 |
| 7 | 9 | 6 | 2 | 1 | 5 | 8 | 4 | 3 |
| 4 | 5 | 1 | 8 | 6 | 7 | 9 | 3 | 2 |
| 6 | 8 | 2 | 3 | 9 | 4 | 7 | 5 | 1 |
| 9 | 3 | 7 | 5 | 2 | 1 | 4 | 8 | 6 |
| 2 | 6 | 9 | 7 | 3 | 8 | 5 | 1 | 4 |
| 5 | 7 | 3 | 1 | 4 | 2 | 6 | 9 | 8 |
| 1 | 4 | 8 | 9 | 5 | 6 | 3 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை . 1 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள் ). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# பீற்றூட் அறுவடை முடிவுற்றதுடன் வெங்காயச் செய்கையில் மும்முரம்

அளவெட்டி, ஜூலை 2

அளவெட்டி, அம்பனை, கந்தரோடை, மல்லாகம் பகுதி விவசாயிகள் பீற்றூட் அறுவடை முடிந்து வரும் நிலையில் வெங்காயச் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக வெங்காயத்தின் விலை அதிகரித்துக் காணப் படுகின்றது. ஒரு அந்தர் விதை வெங்காயம் 6500-7000 ரூபா வரை விற்கப்படுகின்றது.

கடந்த முறை வெங்காயச் செய்கையால் நல்ல இலாபத்தை ஈட்ட முடிந்தது. அதனாலே விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஆர்வம் செலுத்தி வருவதாக விவசாயி ஒருவர் குறிப்பிட்டார்.

அதேநேரம் விளைச்சல் செய்யப்படும் பீற்றூட், வெங்காயம், பூசணி போன்றவற்றுக்கு நல்ல சந்தை வாய்ப்பு கிடைப்பதுடன் தேடிவந்து அந்தந்த இடங்களில் வியாபாரிகள் கொள் வனவு செய்து வருகின்றனர். அதனால் அதிகளவு விவசாயிகள் இம்முறை வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என அளவெட்டி விவாய சம்மேளனத்தின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ந-36)

## தொழிற்பூங்காவுக்கு உதவி



யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற்பூங்காவுக்கு அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக புலம்பெயர் வாழ் உறவுகள் நிதியுதவிகளை வழங்கியுள்ளன என யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் வி.கனகசபை தெரிவித்துள்ளார்.

கனடா நாட்டில் வசிக்கும் மட்டுவில் வளர்மதி வாழ் உறவுகள் ஐம்பதினாயிரம் ரூபாவினையும், [illegible]ணை நாட்டில் வசிக்கும் அ.சகானன் பத்தாயிரம் ரூபாவினையும் வழங்கியுள்ளனர்.

இவ்வாறு ஏனையோரும் மனமுவந்து உதவும் பட்சத்தில் தொழிற்பூங்காவில் தங்கியுள்ளோரின் உணவு மற்றும் கற்றல் செயற்பாடுகளுக்கான தேவைகளையும் பூர்த்தி செய்யலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-288)

## தமிழ்த் தினப்போட்டி; தம்பசிட்டி மாணவன் முதலாம் இடம்



தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையில் தரம் 5 இல் கற்கும் மாணவன் இராசசேகர் விதுஷன் மாகாண மட்ட தமிழ்த் தினப் போட்டியில் முதலாம் பிரிவில் நடைபெற்ற ஆக்கத்திறன் வெளிப்பாடு, கதை கூறல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற இம் மாணவன் எதிர்வரும் 6 ஆம் திகதி கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறவுள்ள அகில இலங்கை தேசிய தமிழ்த் தினப் போட்டியில் பங்குபற்றவுள்ளார். (ஒ-8)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் கண்ணியசீலன்



புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கண்ணியசீலன் நேற்றுமுன்தினம் (30.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் பாசமிகு கணவரும், பகிதரன் (பிரான்ஸ்), பகிரதி, பகிரஜா, அனுசன், விதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவலெட் சுமி, சசிகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான சபாரெத் தினம், சற்குணம், கிஸ்ண பிள்ளை, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் சின்னக்கிளி, லோகேஸ்வரி, மலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிறோஜன், வினோதன், டிலைக்ஸன், பிரவீன் ஆகியோரின் அன்பு ப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மணற்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல்:
க. செல்லம்மா (மனைவி),
மகன் (பகி).

(38841)(6.3.45)

## தீவுப் பகுதி மாணவர்கள் 280 பேருக்கு புலமைப்பரிசில்

தீவுப் பகுதியில் வறுமை நிலை காரணமாக திறமை இருந்தும் தமது கல்வியைக் கற்க வசதியற்ற நிலையில் உள்ள இருநூற்று எண்பது மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

கல்வியில் ஆர்வம் இருந்தும் கற்க முடியாத சூழ்நிலையில் உள்ள வறுமையான மாணவர்கள் குறித்த தரவுகள் தற்சமயம் எடுக்கப்பட்டு வருவதாக தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார். (ஒ-7)

## சமய சந்நிதிகளில்

குருநகர், ஜூலை 02

புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் எதிர்வரும் ஜூலை 4 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. செபமாலை வழிபாடுகளைத் தொடர்ந்து 6 ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை நாதர் வழிபாடும் நற்கருணைப் பவனியும் இடம்பெறும். மறுநாள் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழாத் திருப்பலியும் புனிதரின் திருச்சொரூபப் பவனியும் நடைபெறும். (ந-51-8)

★ ★ ★

மடுமாதா திருவிழாவை ஒட்டி நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் இன்று காலை 7 மணிக்கு இடம்பெறும் திருப்பலிப் பூசையைத் தொடர்ந்து 9 மணிக்கு பெண்கள் மட்டும் இழுக்கும் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். (ந-100)

## வெளிவந்துவிட்டது 'காந்தீயம்' ஜூலை மாத இதழ்

யாழ்ப்பாணம், ஜூலை 2

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான 'காந்தீயம்' பத்திரிகையின் ஜூலை மாத இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழின் பிரதியொன்றை இலவசமாகப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் ரூபா 5 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரி இடப்பட்ட நீண்ட தபாலுறை ஒன்றை ஆசிரியர் 'காந்தீயம்', காந்திநிலையம், 8 ஆம் வாய்க்கால் உருத்திரபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம் என இதழாசிரியர் அறிவித்துள்ளார். (ந)

## மரண அறிவித்தல்

### இராசலிங்கம் கந்தசாமி



கைதடி நாவற்குழி தெற்கைப் பிறப்பிடமாகவும், வேலணை கிழக்கு 4ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் கந்தசாமி நேற்று (01.07.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதியரின் மருமகனும், அலர்மேல் மங்கையின் (மங்கை) அன்புக் கணவரும், கமலதாஸ், விஜயதாஸ், உதயதாஸ், மோகனதாஸ் (லண்டன்), ஜீவனா, பிலோமினா, தனுஜா ஆகியோரின் தந்தையும், சிலோஜனா, தயாளினி, பிரதீப் ஆகியோரின் மாமனும், பிருத்திகன், பவிசாந் ஆகியோரின் பேரனும், புஸ்பராணி, வன்னியசிங்கம், யோகேஸ்வரன், தர்மராசா, சந்திரலோகன், செல்வரெத்தினம், யோகரெத்தினம் ஆகியோரின் சகோதரனும், யோகராசா, கௌரிஅம்மா, கேதாரகௌரி, செல்வராணி, ஈஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், துரைராசா, தணிகாசலம் (ஹொலண்ட்), பாலச்சந்திரன், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் கமலாதேவி, தவராசா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், சரஸ்வதி, இளையபிள்ளை, அன்னபூரணம், யோகேஸ்வரி, சிவகுமார், கனகா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாளையங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை கிழக்கு,
4ஆம் வட்டாரம்,
துறையூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி இராஜேஸ்வரி

(குஞ்சு ரீச்சர்)



அளவெட்டி வடக்கு தம்பயப்புலத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி இராஜேஸ்வரி நேற்றுமுன்தினம் (30.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், ராணி (பிரான்ஸ்), அசோக், கோதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2013) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்த ரோட்,
தம்பயப்புலம், அளவெட்டி வடக்கு. (38836)(6.3.45)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கை ஆக்குகின்றோம்

### சிவதாசன் பிரகாஸ்



ஜேர்மனியை வசிப்பிடமாகக் கொண்ட *சிவதாசன் புஸ்பமலர்* தம்பதியரின் புதல்வன் பிரகாஸ் 29.06.2013 ஜேர்மனியில் அகால மரணம் அடைந்ததை இட்டு அவர் தம் குடும்பத்தாருடன் இணைந்து நாமும் துயர் அடைகின்றோம்.

அன்பு, பண்பு, பணிவு, ஒழுக்கம் முதலிய நற்பண்புகளைக் கொண்ட சிவதாசன் பிரகாஸ் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி மீனாட்சிப்பிள்ளை
தம்பிப்பிள்ளை
கைதடி தெற்கு, கைதடி.
021 205 7042

திரு.திருமதி இ.குழந்தை வடிவேலு
T.P-075 040 2302
திரு.திருமதி த.புஸ்பராஜா
T.P-075 673 6874
திரு.திருமதி பொ.கந்தசாமி
T.P-075 040 2825

# மலசலகூட குழியில் மனித எச்சங்கள்

மிஹிந்தலை, மஹகனந்தராவ பகுதியிலுள்ள வீடொன்றில் தோண்டப்பட்ட மலசலகூட குழியிலிருந்து மனித எச்சங்கள் என்று சந்தேகிக்கப்படும் எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று மிஹிந்தலை பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

மிஹிந்தலை, மஹகனந்தராவ பகுதியிலுள்ள வீடொன்றில் மலசலகூட குழியொன்றை தோண்டிக் கொண்டிருக்கும் போதே நான்கரை அடி ஆழத்தில் அவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனினும் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் மனித எச்சங்கள் என்று இதுவரையில் உறுதிப் படுத்தப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## விற்பனைக்கு

முன்னணி நிறுவனமொன்று நவீன மயப்படுத்தப்பட்டதால் அதன் சில காலம் பாவித்த தளபாடங்கள் நியாய விலையில் விற்பனைக்குண்டு.

(38844)(5.6.3)

தொடர்பு: 021 790 4941

## வீடு வாடகைக்கு உண்டு

கணேஷ்வரம், அளவெட்டியில் (தெல்லிப்பழை கிழக்கில்) சகல வசதிகளுடன் கூடிய வீடு பகுதியாக வாடகைக்குண்டு.

தொடர்பு: 021 320 1282

(38835 (45.6.3)

## TV கள் மலிவு விற்பனை

மலிவு விலையில் Sony Wega Flat TV கள் 21" - 12,000/= முதல், 25" 13,000/=, 29" - 16,000/=, பனசோனிக் (Panasonic) 29" 15,000/=, DTS அம்பிளிபயர், Box வகைகள், DVD - 3,000/=.

தொடர்பு: 077 044 0570

சோனி ரேட்ற் சென்றர் (கொமர்சல் வங்கிக்கு முன்பாக) 56, K.K.S. றோட், சுன்னாகம்.

(38834)(45.6.3)

## சந்திரகாந்தன் திருமண சேவை

இயக்குநர்: ஆனந்தி

துரிதமாக செயற்படும் எமது ஸ்தா பனத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு மற்றும் டாக்டர், எஞ்சினியர் உட்பட அனைத்து வரன்களும் உண்டு. தொடர்பு: ஆனந்தி (38842)(5.6.3)

077 508 1756/021 720 1502

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திரு நாமம் அர்ச்சிக்கப்படுவீதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப் படுத்தி எனக்குத் தீங்குசெய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வின்.

எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி

அடியாள்

(38820) (45.6.3)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## Vacancies - Faculty of Arts

University of Jaffna will entertain applications up to 15th July 2013 from suitably qualified persons for the under mentioned posts.

**Temporary Lecturer / Temporary Tutor**

Archaeology / Christian Civilization / Drama & Theatre Arts / Economics / Education / English Literature / Fine Arts / Geography / Hindu Civilization/ Hindu Philosophy / History / Law / Linguistics/Media Studies/ Planning / Philosophy / Political Science / Sociology / Tamil / Sanskrit/Psychology

**Temporary Lecturer**

Art & Design / Dance (Bharathanatiyam / Kathakali) / Music (*Vocal / Violin*)

**Temporary Lecturer / Instructor**

*English Language Teaching* / Home Economics

- **Note:** Candidates awaiting the results of the final degree examinations may also apply for Tutor/Instructor

**Visiting Lecturer/Instructor**

Art & Design /Archaeology/ Basic French / English Literature/ English Language Teaching/ Geography/ Home Economics/Hindu Philosophy /Law / Media Studies / Planning /Political Science/Sociology/ Sanskrit/ Translation Studies

**Salary:**

| | |
|---|---|
| Temporary Lecturer | Rs.26, 020/- per month fixed |
| Temporary Tutor/Instructor | Rs. 21,370/- per month fixed |
| Visiting Lecturer | Rs.1500/- per hour for lecture |
| | Rs. 600/- per hour for practical |
| Visiting Instructor in Englis | Rs.750/- per hour |
| Visiting Instructor (Other than Aesthetic studies) | Rs.600/- per hour |
| Visiting Instructor (Aesthetic studies) | Rs.350/- per hour |

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications for the above posts should be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

Registrar

(c/10171) (45.6.3)

## பொது பல சேனாவின் கருத்து:
# ஆன்மிகத் தலைவர்களை கொச்சைப்படுத்தும் செயல்
## மீனவ ஒத்துழைப்பு பேரவை கண்டனம்

மன்னார், ஜூலை 2

பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசாரதேரர், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகைக்கு எதிராக பழி சுமத்தியமைக்கு மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு பேரவை கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு பேரவையின் இணைப்பாளர் அ.சுனேஸ் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாட்டில் போர் நிறைவடைந்ததை அடுத்து பாதிக்கப்பட்ட அனைத்து மக்களினதும் மீள் குடியேற்றம். அடிப்படை வசதிகள் ஆகியவற்றை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதன் நோக்கமாக செயற்பட்டுவரும் ஆயரின் பணி மக்கள் மத்தியில் போற்றக்கூடிய விடயம்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிமை பெற்றுக்கொடுக்கும் தூய பணியில் முன்னின்று செயற்பட்டு வரும் ஆயரை அரசியல் கட்சிகளோடு இணைத்து அவர் அடுத்த பிரபாகரன் என்று பொது பல சேனா அமைப்பு கூறியுள்ளது.

இந்த அமைப்பு இவ்வாறான கருத்துக்களை வெளியிடும் போது சிந்தித்துக் கருத்துக்களை வெளியிட வேண்டும்.

பொதுபல சேனா அமைப்பு உருவாக்கப்பட்டு முஸ்லிம் மக்களுக்கு எதிராக செயற்பட்டு வந்தது. தற்போது கத்தோலிக்க திருச் சபையின் ஆயர்கள் மற்றும் மக்கள் மீது வீண் பழி சுமத்துகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

பொதுபலசேனாவின் இவ்வாறான செயற்பாடுகள் ஆன்மிக தலைவர்களை கொச்சைப்படுத்தும் செயல்கள்.

எந்த மதத் தலைவர்களாக இருந்தாலும் இவ்வாறான பழி சுமத்துக்கின்ற அபாண்டமான செய்திகளை வெளியிடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

எனவே இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த நடிவடிக்கை எடுக்க வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-12)

> ❝ கத்தோலிக்க திருச் சபையின் ஆயர்கள் மற்றும் மக்கள் மீது வீண் பழி சுமத்துகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

## தேவை



### கிராபிக் டிசைனர்
(Graphic Designer)
(போட்டோ சொப்)

மேற்படி பதவிக்கு ஆண் வேலையாள்கள் தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். சுய விவரத்துடன் விண்ணப்பங்களை தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதியுடன் நேரிலோ அன்றி தபால் மூலமாகவோ 10.07.2013 இக்கு முன்பாக அனுப்பவும்.

'விஸ்டா விஷன் கலர் லப்' 52, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 5187

(38843)(5.6.3)

Japan இன் தயாரிப்பில் உலகின் முதற்தரம் வாய்ந்த

Koyo

Value & Technology — MADE IN JAPAN



(சி/10060)(3.6)

KOYO என்றால் BEARING
BEARING என்றால் KOYO

எப்பொழுதும் நாம் உங்களுடன்

ZERENDIB MOTOR ENTERPRISE (PVT) LTD
60 - B ,SRI SANGARAJA MAWATHA,COLOMBO - 10
TEL:011-4378307 , 011-2341580 - 81 FAX:011-2454608 E-mail:zme@slt.lk

## நீலக்கடல் சுற்றுலா விடுதி
## BLUE OCEN RESORT
(அல்லைப்பிட்டி)



வியாபாரப் பங்குதாரர் அல்லது ஹோட்டல் முழுவதையும் வாடகை அடிப்படையில் பொறுப்பேற்று நடத்தக்கூடிய பொருத்தமான ஒருவர் தேவை

★ வெண்மணல் கடலோரத்தில் கவர்ச்சிகரமான அமைவிடம்
★ 8 நிமிட நேர பயணம்... யாழ்.பண்ணைப் பாலத்தில் இருந்து..
★ திருமண மண்டபம், வியாபார நிலையம், நீச்சல் தடாகம், கரப்பந்தாட்ட, பூப்பந்தாட்ட மைதானங்கள் மற்றும் மனதை மயக்கும் இசைக்குழு என்பன ஒருங்கே அமையப்பெற்ற இடம்.

(38833)(2.6.3)

மேலும் இந்த Hotel இல் இளம் ஆண்/ பெண்களுக்கான வேலை வாய்ப்புக்களும் உள்ளன.

மேலதிக தொடர்புகளுக்கு: சபின்ஸ் (உரிமையாளர்)
077 835 0478 jj@legendtrading.com

## வீடுகள், அலுவலகம், காட்சியறை மற்றும் தொழிற்சாலைகள்

CCTV
Security Camera Solutions



Catch Them!

உங்கள் பாதுகாப்பே ....
எங்கள் சேவை..
நாம் 16 வருட சேவையில்

ஒரே கூரையின் கீழ் எமது சேவைகள்.
* Computer Network & Maintenance, Internet, Router, ADSL Setup
* Computer, Printer, Laptop, UPS, LED & LCD Monitor Repairs.

1 YEAR WARRANTY

(சி / 10159)(3.6)

MICRO PC SYSTEMS

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | :- 021 2225893 | நெல்லியடி | :- 021 2262929 |
| வவுனியா | :- 024 2221969 | கிளிநொச்சி | :- 021 2285593 |
| திருகோணமலை | :- 026 2226977 | கொழும்பு | :- 077 3963285 |

DEALER & WHOLESALE INQUIRIES- 077 778 8929 PROJECT & CORPORATE INQUIRIES- 077 548 7146 HOME & SMALL BUSINESS INQUIRIES- 077 396 3284




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## பாடசாலைகளில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை

நெல்லியடி,ஜூலை2
நேற்று முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரையான காலப் பகுதி டெங்குக் கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கரவெட்டிக் கோட்ட பாடசாலைகள் ஒவ்வொன்றும் பாடசாலைச் சுற்றாடலிலுள்ள கழிவுகள் பிரதேச சபையினால் அகற்றப் படுவதை இலகுபடுத்தும் முகமாக இரும்பு, பிளாஸ் ரிக், போத்தல், ரின், பொலித்தீன் என தரம் பிரிக் கப்பட்டு பொதி செய்யப்படு வதுடன் பாடசாலையிலிருந்து 200 மீற்றர் தூரத்துக்குள் அமைந்த சுற்றாடல் துப்புரவு செய்யப்படல் வேண்டும் எனவும் கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-ரி)

# வடக்கின் வசந்தத்தில் நிதி ஒதுக்கீடு நெடுந்தீவின் அபிவிருத்திப் பணிகளுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 02
வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நெடுந்தீவில் துறைமுக ஆழமாக்கல், ஆலயங்கள், சன சமூக நிலையம், பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், மீன்பிடித் துறை என்பவற்றின் அபிவிருத் திப் பணிகளுக்காக நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
பலநோ.கூ.சங்க கட்டடப் புனரமைப்புக்கென ரூபா நான்கு லட்சத்து 95 ஆயிரமும், புனித மாதா தேவாலய புனரமைப்புக்கு 4 லட்சத்து 99 ஆயிரத்து 950 ரூபாவும், துறைமுகம் ஆழமாக்க ஒரு கோடி 41 லட்சத்து 7 ஆயிரத்து 500 ரூபாவும், காட்டுப் பிள்ளையார் கோயில் புனர மைப்புக்கு 4 லட்சத்து 99 ஆயிரத்து 950 ரூபாவும், குழந்தையேசு சன சமூக நிலைய திருத்த வேலைகளுக்கு 99 ஆயிரத்து 990 ரூபாவும், புனித சேவியர் தேவா லய புனரமைப்புக்கு 4 லட் சத்து 99 ஆயிரத்து 950 ரூபாவும், செல்வநாயகபுரம் மீன் பிடித்துறைக்கு 19 லட் சத்து 99 ஆயிரத்து 800 ரூபா வும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (ந-7)

## சிறுவர் ஓவியப்போட்டி 2 ஆம் சுற்று ஜூலை 8

யாழ்ப்பாணம், ஜூலை 2
யாழ். மாவட்டத்தின் பிரதேச ரீதியாக நடத்தப்பட்ட அரச சிறுவர் ஓவியப் போட்டிகளின் முதல் சுற்றில் தெரிவு செய்யப்பட்ட நூற்று ஐம்பது மாணவர்களுக்கான இரண்டாவது சுற்றுப்போட்டிகள் நடைபெறவுள்ளன.
இந்தப் போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளன.
முதல் சுற்றில் தெரிவான மாணவர்களுக்கு இரண்டாவது சுற்றில் கலந்துகொள்வதற்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

### ஸ்கந்தவரோதயக் கல்லூரியின்
# முத்தமிழ் விழா போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 02
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முத்தமிழ் விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கவிதை, சிறுகதைப் போட்டிகளில் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கவிதைப் போட்டி- ஆரம்பப் பிரிவு
முதலாம் இடம்- சஞ்சிகாஜினி பாலச்சந்திரன் (யூனியன்கல்லூரி), இரண்டாம் இடம்-கிருஷிகா நகுலேஸ்வரன் (இராமநாதன் கல்லூரி), மூன்றாம் இடம்-பாஸ்கரன் கஜீபன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

மத்திய பிரிவு
முதலாம் இடம்-வர்ணிகா சிவபாலன் (மகாஜனக் கல்லூரி), இரண்டாம் இடம்- மயூரிகா ஸ்ரீகங்காதராஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம்-நவரத்தினம் உமாசுதன் (ஹாட்லிக் கல்லூரி).

மேல் பிரிவு
முதலாம் இடம்-ஜெகநாதன் துவாரகன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம்-விதுஷா வாமதேவன் (மகாஜனக் கல்லூரி), மூன்றாம் இடம்-துஷாரா கதிரமலை (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

சிறுகதைப் போட்டி- ஆரம்பப் பிரிவு
முதலாம் இடம்-தேனுகா விஜயகுமார் (ஏழாலை ஸ்ரீமுருகன் மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம்-பவித்திரா ஞானகாந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி). மூன்றாம் இடம்-நிருபா சிவகுமார் (இந்து மகளிர் கல்லூரி).

மத்திய பிரிவு
முதலாம் இடம்-விதுஷியா பத்மநாதன் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாம் இடம்-அபித்திரா சிவசுப்பிரமணியம் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி). மூன்றாம் இடம்-கார்த்திகா இரத்தினம் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

மேல் பிரிவு
முதலாம் இடம்-யதர்சிகா சிவராஜா (ஏழாலை ஸ்ரீமுருகன் மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம்-சண்முகராஜா அனுசாந் (யூனியன் கல்லூரி), மூன்றாம் இடம்-வைஷ்ணவி தர்மகுலசிங்கம் (இராமநாதன் கல்லூரி). (ந-14)

## மரத்தில் இருந்து வீழ்ந்தவர் படுகாயம்

அளவெட்டி, ஜூலை 2
தென்னை மரத்தில் தேங்காய் பறிக்கும் போது தவறி கீழே விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்தார். சண்டிலிப்பாய் கொம்பளிப்புலத்தைச் சேர்ந்த கணபதி குமாரசாமி (வயது-60) என்பவரே கழுத்துப் பகுதியில் காயமடைந்து தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. (ஐ-36)

# விபத்தில் குடும்பஸ்தர் காயம்

அளவெட்டி, ஜூலை 2
சுன்னாகம் பொது நூலகத் துக்கு முன்பாக 'பிக்கப்' வாகனமும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது. இதில் அச்சுவேலியைச் சேர்ந்த மார்க்கண்டு குணச்செல்வன் (வயது-37) என்ற குடும்பஸ்தரே காய மடைந்து தெல்லிப்பழை வைத் திய சாலையில் சேர்க்கப் பட்டார். இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (ஐ-36)

## பயிற்சிப் பட்டறை

தெல்லிப்பழை,ஜூலை2
வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கான பாடசாலை தொகை மதிப்பீடு தொடர்பான பயிற்சிப்பட்டறை நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடை பெறவுள்ளது. அதிபர்கள் தவறாது பங்கு பற்றுவதுடன் பாடசாலை தொகை மதிப்பீட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர் ஒருவரையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந-ரி)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இருவருக்கு மகளாய்
06.05.1920

இறைவனுக்கு மகளாய்
20.06.2008



அமரர் மனோன்மணி இராசரெத்தினம்

நீதி: அபரபக்க நசமி

அம்மையே நீயளைந்த அன்புடல் இன்று மட்டும்
உன்னையே எண்ணியெண்ணி உருக்குதே கண் நீராக---
பொய்மையே வாழ்வு என்றார் நாம் போவதும் உண்மை என்றார்
பின்ன ஏன் ஆறுதில்லை பித்தென இன்னும் இன்னும் -எம்
வண்ணமே, வடிவே அம்மா வாட்டுதுன் நினைவு நின்று---
ஊட்டிய பாலோ இன்னும் உதிரமாய் நின்று ஓடி
காட்டுதுன் உருவை முன்னால் கதறிட வைக்குதம்மா---
மீட்டிட முடியுமாம்மா----? மீள நாம் கூடும் காலம்
ஆக்கிட முடியுமாம்மா---? அன்னையே ஐந்து ஆண்டுகள்
போக்கினோம் கண்ணீரோடே போகலை நினைவு இன்னும்---
வீற்றிரு இதயத்துள்ளே விளங்குவாய் கோயிலாக - நாம்
தூக்கினோம் இருகையுச்சி துலங்கிறான் ஐயனாரும்
ஆத்தையே--- அம்மா அங்கு அடியிருந்தாறுவாயே--
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

81 A, சீனியர் லேன்,
கலட்டிப் பிள்ளையார் வீதி, கலட்டி.
யாழ்ப்பாணம்.

(38838) (3.6.11) இ.பரந்ருபசிங்கம் (மகன்)

## நீங்கா நினைவில் ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 13 |
| 03 | 07 |
| 1950 | 2012 |



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் பிரான்சில் வசித்தவருமாகிய
திருமதி. உமாபதி சிவம் ஜெயலெட்சுமி
(சின்னக்கிளி)

உறவுகளோடு சேர்ந்து வாழ
உறுதுணையாயிருந்த - நீயின்று
உருவப்படமாயிருந்து
உருக வைக்கின்றாயே!
உத்தமியே உன் ஆத்மா
உருண்டோடிய ஓராண்டில்
உருகி நிற்கும் உன்னுறவுகள்
உனதாத்ம சாந்திக்காக உளமார
பிரார்த்திக்கின்றோம்

(C-10059)

தகவல் : கணவர், பிள்ளைகள் (பிரான்ஸ்)
சகோதர, சகோதரிகள் (சி/ 10059)(6.3)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



கடந்த 03.06.2013 அன்று இறைபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்
அமரர்
சங்கரப்பிள்ளை ஸ்ரீகாந்தன் (ராஜா)
அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் நேற்று (01.07.2013)திங்கட்கிழமை கீரிமலையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (03.07.2013) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.1019, திருநகர்,
கிளிநொச்சி.
(37472)(3.6) குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்லும்



அன்னை மடியில்
17.07.1925

ஆண்டவன் அடியில்
02.06.2013

அமரர் கந்தையா திருஞானசம்பந்தர் (அம்பிகாபதி)
(ஓய்வு பெற்ற பரிசாரகர்)

*கை பிடித்து நடை பழக்கி எம்மை வழிப்படுத்தி*
*ஒளி பொருந்திய நம் வாழ்வுக்கு திரியாகிய –உம்*
*சிதை தீக்கு இரையாகி முப்பத்தொருநாள்--ஆகியும்*
*ஆறவில்லை எம் மனதில் அந்தத் துயரவடு*
*உம்மோடான கடந்த இனிய நிகழ்வுகள்*
*என்றும் எம்மோடு பசுமையான நினைவுகளாய்.......*

எமது அன்புத் தந்தையாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் வழங்கியவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் இன்று (02.07.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அப்பிலானை லேன்,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
(38782)(3.6.11) குடும்பத்தினர்.

பொலிஸ் அதிகாரத்தை நீக்க

# தெரிவுக்குழு இணங்கினால் நாம் எதிர்க்கமாட்டோம்

## அமைச்சர்கள் வாசு, டியூ திடீர் 'பல்டி'

கொழும்பு, ஜூலை 2

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரங்களை அகற்றிவிடுவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அனுமதியுடன் மேற்கொள்வோமானால் எதிர்ப்பைத் தெரிவிக்கமாட்டோம். இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் அமைச்சருமான டியூ குண சேகர, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார ஆகியோர் அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

கொழும்பில் இடம்பெற்ற அரச பாதுகாப்பு பிரிவுகளின் விசேட கூட்டம் ஒன்றில் வைத்தே இந்த இரு அமைச்சர்களும் தமது இணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் மாகாண சபைகளுக்குப் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்கள் குறித்து நீண்ட விளக்கங்களை முன்வைத்துள்ளார்.

அந்த விளக்கங்களைஅடுத்து அமைச்சர்கள், பொலிஸ்சேவை அரசின் கீழேயே இருக்க வேண்டியது என்பதை ஏற்றுக் கொண்டனர். எனினும் இந்த அதிகாரங்கள் தான்தோன்றித்தனமாக நீக்கிவிடக் கூடாது. தெரிவுக் குழுவில் ஆராயப்பட்டு அங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானத்தின் மீது நீக்கிவிடப்படுமானால் அதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கப்போவதில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.


இந்தக் கூட்டத்தில் மாகாண சபைகளில் இருந்து காணி அதிகாரங்கள் நீக்கிவிடப்படுமா என்பது குறித்து எதுவும் ஆராயப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-22)

**வீடு வாடகைக்கு**

யாழ். மாநகரசபை எல்லைக்குள் யாழ். இந்துக் கல்லூரியிலிருந்து 1km தொலைவில் K.K.S வீதிக்கு மிக அருகில் 5அறைகள், வாகனத்தரிப்பிடத்துடனும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு (1400 சதுர அடி பரப்பளவு)வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் (அலுவலகப் பாவனைக்கு) விரும்பத்தக்கது. வாடகை பேசித்தீர்மானிக்களாம்.
தொடர்பு: 077 0832227

# பல்கலை மாணவருக்கு மனநிலை பரிசோதிப்பா?

## ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்பு



கொழும்பு,ஜூலை 2

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்க முன்னர் அந்த மாணவர்களை மனநிலை தொடர்பான பரிசோதனைக்கு உட்படுத்த அரசு முன்வைத்துள்ள யோசனைக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

மனரீதியாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவதன் காரணமாகவே பல்கலைக்கழகங்களுக்குள் மோதல்கள் ஏற்படுகின்றன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவி ஷானிக்கா ஹிரும்புரேகம தெரிவித்தார்.

அரசு மாணவர்களின் சுதந்திரத்தை முடக்க முயற்சிப்பதன் காரணமாகவே பல்கலைக்கழகங்களுக்குள் மோதல்கள் இடம்பெறுகின்றன என்று ஆசிரியர் சங்கத்தின் செயலர் ஜோசப் ஸ்டாலின் கூறினார்.

மாணவர்களின் சுதந்திரத்தை பறிக்கும் நோக்குடனேயே அரசு இவ்வகையான திட்டங்களைக் கொண்டுவருகிறது என்று அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களில் வசதிகளும் வளங்களும் குறைவாக இருக்கும் நிலையில், அவற்றுக்கு எதிராக மாணவர்கள் போராட முன்வரும்போது அந்தப் போராட்ட உணர்வுகளை நசுக்குவதற்காகவே அரசு முயற்சிக்கிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான யோசனைகளை முன்வைக்கும் அதிகாரிகளின் மனநிலையையே சோதிக்க வேண்டும். மாணவர்களின் மனநிலையை பரிசோதிக்கும் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ச)

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்ட செயலரால் கீழ்குறிப்பிடப்படும் நிர்மாண வேலைகளுக்கான தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 05.07.2013 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல.0212222771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 05.07.2013 முதல் 24.07.2013 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/ கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 25.07.2013 திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 25.07.2013 திகதி பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும்.

6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாள்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும், கேள்விப் பிணைப் பொறுப்பு இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்தகாலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்வி பிணைத் தொகை(ரு) | மீளளிக்கப்படாத தொகை(ரு) |
|---|---|---|---|---|---|---|
| JK/ADM/03/ CONS.WORK/ 2013 (I) | யாழ்ப்பாண பிரதேச செயலக நிர்மாண வேலை - பகுதி III | 10.98 | 05 மாதம் | C5/C6 | 110,000.00 | 1000.00 |
| JK/ADM/03/ CONS.WORK/ 2013 (II). | சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்மாண வேலை - பகுதி VII | 02.03 | 05 மாதம் | C5/C6 | 20,300.00 | 1000.00 |
| JK/ADM/03/ CONS.WORK/ 2013 (III) | யாழ்ப்பாண மாவட்ட செயலக நான்கு மாடிக் கட்டட - பகுதி III | 11.77 | 05 மாதம் | C5/C6 | 118,000.00 | 1000.00 |

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(C/10177) (10,16,14)

**மணமகள் தேவை**

யாழ் - நல்லூரைச் சேர்ந்த இங்கிலாந்தில் (Msc. in Computer Eng.)படித்து, இங்கிலாந்திலேயே நிரந்தர உயர் வேலைபார்க்கும், கௌரவ குடும்ப, அழகிய, குணமான, செவ்வாய் தோஷமற்ற, ரேவதி நட்சத்திரமுடைய 31 வயதுடைய, 5அடி 8அங்குல உயர மணமகனுக்கு அவரது பெற்றோர் அழகிய, குணமான, பட்டப்படிப்பு படித்து வேலை செய்யும், இந்து மத பொருத்தமான மணமகளை தேடுகிறார்கள். வெளிநாடுகளில் வாழ்வோரும் விண்ணப்பிக்கலாம். (செவ்வாய் கிரகநிலை வீடு 3,5,6,9,10,11 ஆக உள்ள மணமகள் நன்று) விரும்புவோர் கீழ் கண்ட மின் அஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும் .rasalingam99@gmail.com
Mobile Phone:0061402387809,
T.P:021 222 7752
(இரவு 6 மணிக்கு பின்)

**வான் விற்பனைக்கு**

WP HK - xxxx தொடர் இலக்கமுடைய JAPAN HONDA சிறியரக வான் விற்பனைக்கு அல்லது மாத வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0777 903919
(37828) (10,16,14)

**காணி விற்பனை**

கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள 2 பரப்பு 16குளி வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.
மேலதிக விவரங்களுக்கு
0777551431

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரிததபால்கள் பொதிகள் DHL சேவை

**விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!**

11 kg இக்கு மேற்பட்ட பொதிகளுக்கும் மிக குறைந்த கட்டணம் அறவிடப்படும்.
தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள், புடைவைகள் CD, VCDகள் என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.

**திருமுருகன் கொம் நெற்**

இல. 208A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி




உங்கள் இல்லங்களில் இருந்தவண்ணமே சகல நாடுகளுக்குமான பொதிகள் பெறுபேற்றுகட்டு குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும். (Pickup Service) உங்கள் உறவுகளின் 3-5 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்.

TCN Express
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6

# அமெரிக்கத் தூதரிடம் விளக்கம்

கொழும்பு, ஜூலை 2

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்செல் ஜே சிசன், இலங்கை வெளியுறவு அமைச்சினால் விளக்கம் கோரலுக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்கா சுற்றுலா பயணிகளுக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விடுத்துள்ள பயண எச்சரிக்கை தொடர்பில் விளக்கம் கோரலுக்காகவே சிசன் அழைக்கப்பட்டுள்ளார்.

இதன்போது மிச்செல் சிசனிடம், குறித்த எச்சரிக்கை விடுத்தமை தொடர்பில் விளக்கம் கோரப்படும் என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சைக் கோடிட்டு இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்குப் பயணம் செய்யும் அமெரிக்கர்கள் உட்பட்ட வெளிநாட்டவர்கள், வாய்மூலமாக, உடல் ரீதியாக பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

எனவே வெளிநாட்டவர்கள் குறிப்பாக பெண்கள், இலங்கையின் ஏனைய பயணிகளுடன் பஸ்களில் பயணம் செய்யும் போது கவனமாக பயணிக்க வேண்டும்.

இலங்கையில் இனவன்முறைகள் தொடர்கின்றன. அத்துடன் வெளிநாட்டு பயணிகள் கண்காணிக்கப்படுகின்றனர் போன்ற விடயங்கள் அமெரிக்க எச்சரிக்கையில் அடங்கியிருந்தன. (த)

# கச்சாய் குடும்பஸ்தர் கொலை சந்தேகநபர்களுக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜூலை, 02

கொடிகாமம் கச்சாயில் குடும்பஸ்தர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் 6 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஐந்து பேர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்றுப் திங்கட்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களின் பிணை விண்ணப்பம் யாழ். மேல் நீதிமன்றில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதனைப் பரிசீலித்த மேல் நீதிமன்ற ஆணையாளர் எஸ்.பரமராஜா பிணை அனுமதி வழங்கினார்.

கச்சாயைச் சேர்ந்த வைத்திலிங்கம் அமிர்தலிங்கம் என்பவரே மர்மமான முறையில் உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் அராலி மத்தி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தங்கேஸ்வரன் சரசாந்தன், கச்சாய் தெற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்தவர்களான கிருஸ்ணமூர்த்தி சஞ்சீவன், அருளானந்தம் கஜன், இராமநாதன் மோகன்ராஜ் மற்றும் கச்சாய் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த கதிரவேலு சிவரூபன் ஆகியோர் கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் அனைவரும் தலா 25.000 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும், தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். (த-4)

வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை. (மல்லாகம்)
வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2013

சபை நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வீதிகளின் திருத்த / புனரமைப்பு வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக்கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரத்தை / கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 02.07.2013 - 15.07.2013 பி.ப 03.00 மணி வரை.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 16.07.2013 ந.ப 12.00 மணி வரை.

கேள்விகள் திறக்கப்படும் திகதி 16.07.2013 பி.ப 02.00 மணிக்கு.

கேள்விகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் கிடைக்கக்கூடியவாறு இணைப்பிரதிகளில் (Original, Duplicate) தயாரிக்கப்பட்டு இரண்டு பிரதிகளையும் தனித்தனிக் கடித உறையிலிட்டு **தவிசாளர், வலிகாமம் வடக்குப் பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)** என்ற விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்குமான கேள்விப்பத்திரத்தையும் தனித்தனிக் கடித உறையிலிட்டு பெட்டியிலிடப்படல் வேண்டும். அத்துடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

1. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
2. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கணியளவியலாற்றலையும் (SLS:573:1982) நியம அளவீட்டு முறைமையையும் அறிந்திருத்தல் வேண்டும்.
3. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. மேலதிக விபரங்களை வலிகாமம் வடக்குப் பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த (ICTAD) தரம் | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | பங்களா வீதி திருத்தம் மல்லாகம் | 0.30 | C9 அல்லது அதற்கு மேல் | இரண்டு மாதங்கள் | 7,000.00 | 1000.00 |
| 02 | கோணாவளை வீதி திருத்தம் - குட்டியப்புலம் | 0.48 | | இரண்டு மாதங்கள் | 10,000.00 | 1000.00 |
| 03 | கல்லாரையல் வீதி புனரமைப்பு - மல்லாகம் | 0.83 | | இரண்டு மாதங்கள் | 17,000.00 | 1000.00 |

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
மல்லாகம்.
02.07.2013.

(C/10178)(30.36.14)

திரு.சோமசுந்தரம் சுகிர்தன்,
தவிசாளர்.
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# எமக்கு இன்னும் நேரம் தேவை

ளுக்குப் பின்னர் எங்களுக்குச் சவால்கள் இல்லாமல் இல்லை. ஆகையினால் எங்களுக்கு இன்னும் நேரம் தேவைப்படுகின்றது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வதேச சமூகமானது தமது ஒருமைப்பாட்டு செயன்முறைகளை இந்த நேரத்தில் இலங்கைக்கு கொடுக்கமுடியும். அவ்வாறு செய்தால் அதுவே சிறந்த உதவியாக இருக்கும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இரண்டு நாள் உத்தியோக பூர்வ பயணமொன்றை மேற்கொண்டு சீசெல்ஸுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ அங்கு இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.(த)

# மீற்றர் வட்டி, சீட்டுகளில் யாழ்.மக்களே அவதானம்

வேண்டுகோளுக்கு அமைவாக இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளையினால் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைவாக சங்கானைப் பிரதேச வர்த்தகர்களுடன் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே குறிஞ்சிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை ஈடுசெய்வதற்கு மீற்றர் (அதி கூடிய) வட்டிக்குப் பணம் பெறுவதாகவும், அதனை திருப்பிச் செலுத்த முடியாத நிலைமை ஏற்படுகின்றபோது பலர் தலைமறைவாவதாகவும் வர்த்தகப் பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

மீற்றர்வட்டி, பெருந்தொகைப் பணச்சீட்டு என்பன பாதுகாப்பற்ற நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் இந்த நடவடிக்கைகளால் யாழ்.மாவட்டத்தில் பலர் பாதிப்புக்குள்ளனதை மத்திய வங்கி அவதானித்துள்ளது.

இவ்வாறான பாதுகாப்பற்ற கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று ச்ண்.குறிஞ்சிதரன் வலியுறுத்தினார். (த-5)

# மயிலிட்டி ஆலயங்களில் வழிபட ஒரு நாள் அனுமதி

பெயர்வுக்கு பின்னர் மயிலிட்டி மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமர இராணுவத்தினர் இதுவரை அனுமதிக்கவில்லை. மயிலிட்டியிலுள்ள ஆலயங்களில் பூசை வழிபாடுகள் மேற்கொள்வதற்கு இராணுவத்தினர் கடந்த 2010 ஆம், 2011 ஆம் ஆண்டுகளில் அனுமதி வழங்கிய போதும் பின்னர் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்த ஆண்டு ஆலயங்களில் மீண்டும் வழிபாடு நடத்துவதற்குரிய அனுமதிகள் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக மயிலிட்டி முருகன் கோயில், பிள்ளையார் கோயில், அம்மன் கோயில் என்பவற்றில் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழிபாடு நடத்தப்படவுள்ளது.

இதற்கு முன்னர் இன்று செவ்வாய்க்கிழமை 40 இளைஞர்கள் வரை ஆலயங்களை துப்புரவு செய்வதற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

அத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை மேற்டி மூன்று ஆலயங்களையும் தரிசிக்க விரும்பும் பொதுமக்கள் அன்றைய தினம் காலை 6 மணிக்கு பருத்தித்துறையிலுள்ள மயிலிட்டித் துறை கடற்தொழிலாளர் சங்கத்துக்கு வருமாறும், வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைக்கு வர முடியாதவர்கள் வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு அருகிலுள்ள இராணுவ முகாமுக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# கூட்டமைப்பின் முதல்வர் வேட்பாளர் இன்னும் தெரிவாகவில்லை: சம்பந்தன்

அதன் பின்பே முதலமைச்சர் வேட்பாளர் யார் என்று ஆராயப்படும்'' என்றார் சம்பந்தன்.

முன்னதாக, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் யாழ். கிளைக் கூட்டத்தில் மாவை சேனாதிராசாவை முதன்மை வேட்பாளராக நிறுத்துவது என எடுக்கப்பட்ட முடிவு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் பொதுச் செயலாளர் ஆகியோருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டதாக வெளியான செய்திகள் தெரிவித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கு உழைத்தவர் என்ற ரீதியிலும் அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்து செயலாற்றக்கூடியவர் என்ற ரீதியிலும் மாவையின் தெரிவு மேற்கொள்ளப்பட்டதாக அந்தச் செய்திகள் கூறின. (உ-5)

# படையினர் பறிக்கும் ஆதனங்களின் விவரங்கள் திரட்டுகிறது நகர சபை

குடியமர்வுக்கும் இயல்பு வாழ்க்கைக்கும் வழி சமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வல்வெட்டித்துறை நகர சபையின் மூலம் கடந்த வருடம் விடுக்கப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பான கடிதங்கள் அரச அதிபர் இராணுவக் கட்டளைத் தளபதி மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த விவரங்கள் நகரசபையின் பதிவேடுகளிலிருந்தே பெறப்பட்டுள்ளதால், அவை உறுதிப்படுத்தப்படாத பெயர்ப் பட்டியலாகவே உள்ளன. பெயர் மாற்றங்கள் செய்யப்பட்ட பின்னர் தற்போதைய சரியான விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதால் முழுமையானதும் சரியானதுமான தகவல்களையும் ஆதனம் தொடர்பான விவரங்களையும் உடனடியாக நகர சபைக்கு அனுப்பி வைக்குமாறு இடம்பெயர்ந்து வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் வாழும் மக்களிடம் நகர சபைத் தலைவர் கேட்டுள்ளார்.

மிக விரைவில் வல்வெட்டித் துறைச் சந்தியில் இருந்து இராணுவம் வெளியேறவுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ள நிலையில், அப்பகுதியில் உள்ள வீடுகளின் உரிமையாளர்கள் இராணுவத்தினர் வெளியேறும் வேளையில் தமது வீடுகளைப் பெற்றுக்கொள்ள யாரையாவது நியமித்து அதனைப் பொறுப்பேற்கத் தயாராக இருக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (த-5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பிரதம குரு

''பண்டிதர்'' ''கலாநிதி''

து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் (ஜே.பி)

அவர்களுக்கு அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் ''தேசமான்ய'' கௌரவப் பட்டம் கடந்த 29.06.2013 ஆம் திகதி வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

இவர் புன்னாலைக்கட்டுவன் ஆயர்கடவை விநாயகர் ஆலயத்திலும் எமது ஆலயத்திலும் ஆலய குருவாக சேவையாற்றிவருகிறார். இவர் இன்னும் பல ஆலயங்களில் பிரதம குருவாகவும் சைவ சித்தாந்த பண்டிதராகவும் சமயச் சொற்பொழிவாளராகவும் நல்லை திருஞானசம்பந்த ஆதீன தர்மகர்த்தாவாகவும் உள்ளார்.

இவர் மேலும் பட்டங்கள் பல பெற்று பெருவாழ்வு வாழவேண்டுமென மருதடி விநாயகரை வேண்டுகின்றோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

ஆலய பரிபாலன சபை
விளைவேலி மருதடி விநாயகர் தேவஸ்தானம்.

## 'ஸ்ரார் ஒவ் யவ்னா' வெற்றிக் கிண்ணம்

# வாகை சூடியது வதிரி டைமன்ஸ்



யாழ்ப்பாணம், ஜூலை 2
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குஞ்சர் கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 'ஸ்ரார் ஒவ் யவ்னா' வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மின்னொளியில் இடம் பெற்ற தொடரின் இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும், வதிரி டைமன்ஸ் விளை யாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்டம் ஆரம்பமானது முதலே இரு அணிகளும் அனல் பறக்கும் ஆட்டத்தை வெளிப்படுத்தின. ஆட்டம் தொடங்கி முதல் 5 நிமிடங்களும் ஞானமுருகன் அணியினரிடம் இருந்து பந்தைக் கைப்பற்றுவதற்கு டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் படாதபாடுபட்டனர். 7 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் தசரதன் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு நூலிழையில்தவறிப் போனது. அதன்பின்னர் டைமன்ஸ் அணியினர் சுதாரித்துக் கொண்டனர். அவர்களின் ஆட்டத்தில் வேகம் கூடியது. ஆட்டத்தின் போக்கும் மாறத் தொடங்கியது. இரு அணிகளும் ஆக்ரோஷமாக மோதத் தொடங்கின. அதன் பலன் ஞானமுருகன் விளையாட்டுக் கழக வீரர் கணேஸ்வரனுக்கு முறைதவறிய ஆட்டத்தை வெளிப்படுத்தியமைக்காக நடுவரால் மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது.

ஆட்டத்தின் 29ஆவது நிமிடத்தில் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை கோலாக மாற்றினார் டைமன்ஸ் அணி வீரர் பிறேம்குமார் (பீமா). 1:0 என்ற கோல் முன்னிலை வகித்தது வதிரி டைமன்ஸ். அவர்களின் மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. 30 ஆவது நிமிடத்தில் பேற்றுப் பிரதேசத்தில் டைமன்ஸ் அணி வீரர் எதிரணி வீரரின் முகத்துக்கு நேரே காலை உயர்த்தியமையால் ஞானமுருகன் அணிக்கு தண்டனை உதை ஒன்று கிடைத்தது. சந்தர்ப்பம் கிடைத்தால் கேட்கவும் வேண்டுமா? ஞானமுருகன் அணி வீரர் தசரதன் அதைக் கோலாக மாற்றினார். முதற்பாதி ஆட்டம் 1:1 என்று சமனிலையில் இருந்தபோது இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகியது. முதற்பாதி ஆட்டம் போல் இல்லாது இப்போது இரு அணிகளும் கடும் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டன. 8 ஆவது நிமிடத்தில் முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்திய ஞானமுருகன் அணி வீரர் பவி, டைமன்ஸ் அணி வீரர் பிறேம்குமார், ஆகியோருக்கு நடுவர் மஞ்சள் அட்டையைக் காண்பித்தார்.

9ஆவது நிமிடத்தில் பேற்றுப் பிரதேசத்துக்கு அருகில் டைமன்ஸ் அணிக்கு நேர் உதை ஒன்று கிடைத்தது. பிறேம்குமார் உதைக்க மதுசூதனன் தலையால் தட்டிக் கோலாக மாற்றினார். 2:1 என்ற கோல் கணக்கில் மீண்டும் முன்னிலை வகித்தது டைமன்ஸ். ஆதரவாளர்களின் ஆரவாரத்துடன் ஆட்டம் அனல் பறந்தது.

அனல் பறந்த ஆட்டத்தால் 15ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் பார்த்தீபன், 16ஆவது நிமிடத்தில் டைமன்ஸ் அணி வீரர் சுஜீவன் ஆகியோருக்கு முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்தியமையால் மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது.

ஆட்டத்தை சமனிலைப் படுத்த ஞானமுருகன் அணியினர் பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்ட வண்ணமிருந்தனர். அவர்கள் காத்திருந்த சந்தர்ப்பம் 17 ஆவது நிமிடத்தில் கிட்டியது. ஞானமுருகன் அணி வீரர் உதைத்த பந்து, டைமன்ஸ் கோல் காப்பாளர் பிடியில் இருந்து நழுவி விழ, பறந்து வந்த ஞானமுருகன் அணி வீரர் பெஸ்ரின் அதைக் கோலாக்கினார். ஞானமுருகன் அணியினர் ஆர்ப்பரிக்க, டைமன்ஸ் அணியினர் செய்வதறியாது திகைத்து நின்றனர். 2:2 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையானது.

அதன்பின் இரு அணிகளும் அனல்பறக்க மோதத் தொடங்கின. இரசிகர்களின் ஆரவாரமும், அனல்பறக்கும் ஆட்டத்துக்கு சூடேற்றியது. 20 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் பவிக்கு சிவப்பு அட்டையும், 31 ஆவது நிமிடத்தில் டைமன்ஸ் அணி வீரர் துஷிகரனுக்கு மஞ்சள் அட்டையும் காண்பிக்கப்பட்டது.

அதனால் இறுதி 15 நிமிடங்களும் 10 வீரர்களுடன் போராட்டத்தில் இறங்கியது ஞானமுருகன் அணி. இரு அணிகளும் உத்வேகத்துடன் மோதிக்கொண்ட போதும், அவர்களின் கோல் பெறும் முயற்சிகள் பயனளிக்கவில்லை. ஆட்டநேர முடிவின் போது இரு அணிகளும் 2:2 என்ற கோல் கணக்கில் சமனிலை பெற்றிருந்தன.

அதையடுத்து வெற்றி, தோல்வியை நிர்ணயிப்பதற்காக இரு அணிகளுக்கும் தலா 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் டைமன்ஸ் அணி சாதித்தது. 3:2 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணியை வீழ்த்தி 'ஸ்ரார் ஒப் யவ்னா' வாகத்தெரிவாகியது டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி.

தொடர் ஆட்டநாயகனாக ஞானமுருகன் விளையாட்டுக் கழத்தைச் சேர்ந்த ஜெகனும், ஆட்டநாயகனாக டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பிறேம்குமாரும் (பீமா), நன்னடத்தை வீரராக ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கஜகோபனும், மூத்த விளையாட்டு வீரராக ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தர்மகுலநாதனும், வளர்ந்து வரும் வீரராக நவஜீவன்ஸ் அணியைச் சேர்ந்த பிரியந்தனும், சிறந்த கோல் அடித்த வீரராக ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுபாஸும், சிறந்த கோல் காப்பாளராக டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மதனும், சிறந்த பின்கள வீரராக டைமன்ஸ் அணியைச் சேர்ந்த உஷானந்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் றோயல் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. அதில் ஊரெழு றோயல் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று 3ஆம் இடத்தைத் தட்டிச் சென்றது.

(ற-23-422)

## ஆசியப் பிராந்திய கரப்பந்தாட்ட அணித் தெரிவில் யாழ். நடுவர்



யாழ்ப்பாணம், ஜூலை 2
2014ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடருக்கான ஆசியப் பிராந்திய அணிகளைத் தெரிவு செய்வதற்கான போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அந்தப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுரேஸ்குமார் நடுவராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இவர் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளரும், யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட நடுவர் சங்க உறுப்பினரும் ஆவார். (ற-23)

## ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் தொடர்

### ஏஞ்சல் (நீலம்), சென்.ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 2
மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை நடத்தும் கார்ட்டி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக 15 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம் பெற்ற ஆட்டங்களில் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை (நீலம்) அணி மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை (நீலம்) அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதியது.

அதில் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை (நீலம்) அணி 49:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மற்றைய ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது.

அதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றன. (ற-23)



### கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி வீழ்த்தியது கொக்குவில் இந்துவை

யாழ்ப்பாணம், ஜூலை 2
மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை நடத்தும் 'கார்ட்டி' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான, 17 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி 22:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ற-23)



### இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 2
மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை நடத்தும் கார்ட்டி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண கூடைப்பந்தாட்டத் தொடரில் இன்று மோதவுள்ள அணிகளின் விவரம்:


15 வயதுப் பிரிவு
(யாழ்.வேம்படி மைதானம்)
பி.ப.2 மணி
ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை 'பி' அணி எதிர் யாழ்.இந்துக் கல்லூரி.
பி.ப. 3 மணி
ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை (மரூன்) அணி எதிர் சென்.ஜோன்ஸ்கல்லூரி அணி.

17 வயதுப் பிரிவு
(யாழ்.மத்திய கல்லூரி மைதானம்)
பி.ப. 2 மணி
ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி எதிர் யாழ்.மத்திய கல்லூரி.
பி.ப. 3 மணி
றிபேக் கல்லூரி எதிர் ஏஞ்சல் சர்வதேசப் பாடசலை அணி
(ற-23)

# ஸ்பெயினை வீழ்த்தியது பிரேஸில்





கூட்டமைப்பு கிண்ண உதைபந்துத் தொடரின் சம்பியன் பட்டத்தை போட்டியை நடத்திய நாடான பிரேஸில் சுவீகரித்துக் கொண்டது.
றியோ டி ஜெனைரோவில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் உலகச் சம்பியனும், ஐரோப்பிய சம்பியனுமான ஸ்பெயின் அணியை, 3:0 என்ற கோல்கள் கணக்கில் பிரேஸில் வெற்றிகொண்டது.
ஆட்டத்தின் முதல் பாதியில் 2:0 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை பெற்றிருந்த பிரேஸில், இரண்டாம் பாதியிலும் கோலை ஒன்றைப் பெற்றுக் கொண்டது.
ஆட்டத்தின் 55 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை தவற விட்ட ஸ்பெயின் அணியால், ஆட்டம் நிறைவடையும் வரை எந்தவொரு கோலையும் போடமுடியவில்லை.
கடந்த மூன்று வருடங்களில் எந்வொரு போட்டியிலும் தோல்வியடையாத அணியென்ற ஸ்பெயினின் சாதனை இந்த தோல்வி மூலம் முடிவுக்கு வந்துள்ளது.
இந்த வெற்றி மூலம் அடுத்த ஆண்டு தமது நாட்டில் நடைபெறவுள்ள உலக கிண்ணத்தை வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிகை பிரேஸில் அணிக்கு ஏற்பட்டுள்ளது
தொடர்ந்தும் மூன்றாவது தடவையாகவும் கிண்ணத்தை கைப்பற்றிய வரலாற்று சாதனையை பிரேசில் படைத்துள்ளமை சிறப்பம்சம் ஆகும். (ற)

## ஆர்தரின் நீக்கம் எதிர்பார்த்த ஒன்றுதான்

ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டமை எதிர்பார்க்கப்படாத ஒன்று அல்ல என்று இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவர் தெரிவித்துள்ளார்.
மிக்கி ஆர்தரின் பதவி விலக்கல் குறித்து தான் ஆச்சரியமடையவில்லை எனவும் அன்டி பிளவர் மேலும் தெரிவித்தார்.
ஆஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆஷஷ் தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில், அதற்கு 2 வாரங்களுக்கு முன்னராக ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.
அது தொடர்பாக முதன் முறையாகக் கருத்துத் தெரிவித்துள்ள அன்டி பிளவர்.
ஆஸ்திரேலிய அணி அண்மைக்காலமாக சில சிக்கல்களைச் சந்தித்து வந்ததாகவும், மிக்கி ஆர்தரைப் பதவி விலக்கும் நடவடிக்கை ஒரு முன்னேற்பாடான நடவடிக்கை எனவும் அவர் குறிப்பிட்டார்.
ஆனால், ஆஸ்திரேலிய அணியின் வீரர்களுக்கான அறைக்குள் நடப்பவை குறித்துத் தனக்குத் தெரியாது எனக் குறிப்பிட்ட அன்டி பிளவர், அவற்றைக் கட்டுப்படுத்தவும் தன்னால் முடியாது என்பதால் அங்கு என்ன நடக்கிறது என்பது குறித்து கற்பனை செய்துகொள்ள விரும்பவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். (ற)

## வென்றது ஆஸ்திரேலியா




சர்வதேச ஹொக்கி லீக் தொடரின் சம்பியன் பட்டத்தை ஆஸ்திரேலிய மகளிர் அணி சுவீகரித்துள்ளது.
லண்டனில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் இங்கிலாந்து மகளிர் அணியை, 3:0 என்ற கோல்கள் கணக்கில் ஆஸ்திரேலியா அணி வெற்றிகொண்டது.
ஆட்டத்தின் முதல் பாதியில் 3:0 என்ற கோல்கள் கணக்கில் ஆஸ்திரேலிய அணி முன்னிலை பெற்றிருந்தது.
இரண்டாவது பாதியிலும் திறமையை வெளிப்படுத்திய ஆஸ்திரேலிய மகளிர் அணி மேலுமொரு கோலைப் போட்டது.
அரையிறுதி ஆட்டத்தில் உலக சம்பியனான ஆர்ஜென்ரீனா மகளிர் அணியைத் தோற்கடித்து, இங்கிலாந்து அணி இறுதியாட்டத்துக்கு முன்னேறியிருந்தது.
இரண்டு அணிகளும் அடுத்த ஆண்டு ஹேக்கில் நடைபெறவுள்ள உலக கிண்ண ஹொக்கி தொடருக்கு தகுதி பெற்றுள்ளன. (ற)

## தோல்விகளில் இருந்து மீண்டெழ முடியும்

சம்பியன்ஸ் கிண்ண ஆட்டங்களில் ஏற்பட்ட தோல்விகளிலிருந்து மீளெழ முடியும் என பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார். அத்தோடு, சம்பியன்ஸ் கிண்ணத்தில் ஏற்பட்ட தோல்விகள் தங்கள் அணியின் முடிவாக அமையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி மோசமான திறமை வெளிப்பாடுகளை வெளிப்படுத்திய தன் விளைவாக அவ்வணி மீதான விமர்சனங்கள் அதிகரித்துள்ளன.
இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக், பாகிஸ்தான் அணி இத்தோல்விகளிலிருந்து மீண்டு கொள்ளும் எனத் தெரிவித்தார்.
சம்பியன்ஸ் கிண்ண ஆட்டங்களில் தோற்றமை பாகிஸ்தான் அணியின் இறுதி முடிவாக அமையாது எனத் தெரிவித்த மிஸ்பா உல் ஹக், இத்தோல்விகளிலிருந்து மீண்டு, புதிய அணியொன்றை உருவாக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார்.
உலகக்கிண்ண ஆட்டங்களுக்கு 2 வருடங்கள் காணப்படுகின்ற நிலையில், திறமையான வீரர்களுக்கு மேலதிக பயிற்சிகளை வழங்குவதன் மூலம் உலகக் கிண்ணத்திற்கான சிறந்த அணியொன்றைக் கட்டியெழுப்ப முடியும் என மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.
இதில் முதற்கட்டமாக, மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## டோனியின் இன்மையை உணர்ந்தோம்

### விராத் ஹோக்லி மனம் திறக்கிறார்



அழுத்தங்கள் நிறைந்த சந்தர்ப்பங்களின் போது இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனியின் இன்மையை உணர்வதாக இந்திய அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் விராத் ஹோக்லி தெரிவித்துள்ளார்.
அழுத்தமான தருணங்களில் அமைதியாக இருக்கும் டோனியின் பண்பு தேவைப்படுவதாகவும் விராத் ஹோக்லி தெரிவித்தார்.
இந்திய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் துடுப்பாட்டத்தின்போது காலில் உபாதைக்குள்ளான மகேந்திரசிங் டோனி, அதன் பின்னர் களத்தடுப்பில் ஈடுபட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இந்திய அணியின் தலைவராக ஹோக்லி செயற்பட்டார்.
ஆட்டத்தில் இந்திய அணி 229 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொள்ள, மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 இலக்குகளை இழந்து இவ்வெற்றி இலக்கை அடைந்திருந்தது.
மிகவும் இறுக்கமான போட்டியாக இப்போட்டி அமைந்திருந்தது.
இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள விராத் ஹோக்லி, இவ்வாறான அழுத்தமான நேரங்களில் மகேந்திரசிங் டோனியின் இன்மை உணரப்படுவதாகத் தெரிவித்தார்.
இதற்கு முன்னர் இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் அணித் தலைவராகச் செயற்பட்டிருந்த போதிலும், அது '20/20' ஆட்டம் எனத் தெரிவித்த அவர், இந்த ஆட்டத்தில் அணித் தலைவராகச் செயற்படுவது வித்தியாசமானதாகக் காணப்பட்டதாகக் குறிப்பிட்டதோடு, இது தனக்கு மிகச்சிறப்பான அனுபவமாகக் காணப்பட்டது என்றும் தெரிவித்தார். (ற)

## கிரிக்கெட்டுக்கு நான் உண்மையாக இருந்தேன்

### ஸ்ரீசாந்த் கூறுகின்றார்

கிரிக்கெட்டிற்கு எப்போதும் உண்மையாகவே இருந்தேன் என்று இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் தெரிவித்துள்ளார்.
இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பணத்தைப் பெற்றுக் கொண்டு முறையற்ற பந்துகளை வீசியமைக்காக கைது செய்யப்பட்ட ஸ்ரீசாந்த், தற்போது பிணையில் வெளிவந்துள்ளார்.
தனது கைது தொடர்பாக கருத்தெதனையும் தெரிவிக்க விரும்பவில்லை எனக் குறிப்பிட்ட ஸ்ரீசாந்த், நீதித்துறையைத் தான் நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.
திஹார் சிறையில் சிறை வைக்கப்பட்டிருந்த போது பல்வேறு நபர்களைச் சந்தித்திருந்ததாகத் தெரிவித்த அவர், அவர்கள் விடுதலைக்காக நீண்ட காலம் காத்திருப்பதாகத் தெரிவித்தார். அவர்களில் செய்யாத குற்றத்திற்காகவும் தண்டனை அனுபவிக்கும் பலர் உள்ளனர். தானும் நீதிக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது என்று தெரிவித்தார். (ற)

# மேற்கிந்தியத் தீவுகளிடம் சிக்கியது இந்திய அணி



இந்தியாவுக்கு எதிரான முத்தரப்பு தொடரின் லீக் ஆட்டத்தில், மேற்கிந்தியத் தீவுகள் அணி ஓர் இலக்கு வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றுவரும் முத்தரப்புத் தொடரில் நேற்றுமுன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில் இந்தியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின.மேற்கிந்தியத் தீவுகள் அணியில் டுவைன் பிராவோ (தொடை பிடிப்பு), ரவி ராம்போல் (கணுக்கால் சுளுக்கு) இடம் பெறவில்லை. இவர்களுக்கு பதிலாக டினோ பெஸ்ட், டேவன் ஸ்மித் வாய்ப்பு பெற்றனர். தற்காலிகமாக அணியைப் பொறுப்பேற்ற பொலார்ட், நாணயச்சுழற்சியில் வென்று களத் தடுப்பைத் தேர்வு செய்தார்.

### தவான் ஏமாற்றம்

இந்திய அணியின் ஆரம்பம் அதிரடியாக இருந்தது. பெஸ்ட், ரோச் பந்துகளை பவுண்டரிக்கு அனுப்பினார் ஷிகர் தவான். மறுபக்கம் பெஸ்ட் பந்தில் ஒரு இமாலய சிக்சர் அடித்தார் ரோகித். இந்த நேரத்தில் கீமர் ரோச் வேகத்தில் தவான் (11) ஆட்டமிழக்க, தளம்பல் ஏற்படத் தொடங்கியது. பெஸ்ட் பந்தில் ஒரு சிக்ஸர் அடித்த விராத் கோஹ்லி (11) நிலைக்கவில்லை. பின் ரோகித் சர்மா, தினேஷ் கார்த்திக் சேர்ந்து பொறுப்பாக ஆடினர். கார்த்திக் 23 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அசத்தல் ஆட்டத்தை தொடர்ந்த ரோகித் சர்மா அரைசதம் கடந்தார். சமியின் பந்துப்பரிமாற்றத்தில் வரிசையாக இரண்டு பவுண்டரி அடித்த அவர், 60 ஓட்டங்களுடன் (4 பவுண்டரி, 1 சிக்சர்) ஆட்டமிழந்தார்.

### டோனி காயம்

கடைசிகட்டத்தில் அணித்தலைவர் டோனியும், ரெய்னாவும் சேர்ந்து மந்தமாக ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ரோச் வெளியே வீசிய பந்தை வீணாக அடித்த ரெய்னா (44) பரிதாபமாக வெளியேறினார். தொடைப்பகுதியில் ஏற்பட்ட பிடிப்பு காரணமாக அவதிப்பட்ட டோனி, ஓட்டங்களைச் சேர்க்க முடியாமல் திணறினார். பெஸ்ட் பந்துவீச்சில் டோனி (27), ரவிந்திர ஜடேஜா (15) "போல்டாக", ஓட்டங்கள் உயர வாய்ப்பு இல்லாமல் போனது. நரைன் வீசிய கடைசி பந்துப்பரிமாற்றத்தில் புவனேஷ் வர் குமார் ஒரு சிக்ஸர், பவுண்டரி அடித்து நம்பிக்கை தந்தார். இந்திய அணி 50 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 229 ஓட்டங்களை எடுத்தது. புவனேஷ்வர் (11), அஷ்வின் (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### ஜோன்சன் அசத்தல்

எட்டக்கூடிய இலக்கை துரத்திய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆரம்ப வீரர் கெய்ல் (11) ஏமாற்றினார். அடுத்து வந்த டேவன் ஸ்மித் (0), சாமுவேல்ஸ் (1) நிலைக்கவில்லை. பின் இணைந்த ஜோன்சன் சார்லஸ், டேரன் பிராவோ ஆட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டனர்.

முதலில் புவனேஷ்வர் வேகத்தில் 'ஹெட்ரிக்' பவுண்டரி அடித்த சார்லஸ், ஜடேஜா பந்தில் இரண்டு சிக்ஸர் பறக்கவிட்டார். எதிர்முனையில் டேரன் பிராவோ ஜடேஜா பந்தில் தலா ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடித்தார்.

நான்காவது இலக்குக்கு இந்த ஜோடி 116 ஓட்டங்கள் சேர்த்த போது டேரன் பிராவோ (55) அஷ்வின் 'சுழலில்' சிக்கினார். பின் வந்த அணித்தலைவர் பொலார்ட் (4), ராம்டின் (4) ஆகியோர் நீண்ட நேரம் தாக்குப்பிடிக்கவில்லை. ஒருபுறம் இலக்குகள் சரிந்தாலும் மறுபுறம் அஷ்வின், உமேஷ் பந்துகளை சிக்ஸருக்கு அனுப்பிக் கொண்டிருந்த சார்லஸ் அரைச்சதம் கடந்தார். அவர் 97 ஓட்டங்களை எடுத்திருந்த போது உமேஷ் யாதவ் வேகத்தில் வீழ்ந்தார்.

சமி (29) ஓரளவு கைகொடுத்தார். அடுத்து வந்த நரைன் (5) ஆட்டமிழக்க, மேற்கிந்தியத் தீவுகள் அணி 220 ஓட்டங்களுக்கு 9 இலக்குகளை இழந்து தடுமாறியது. பின் வந்த பெஸ்ட் கை கொடுக்க, எதிர்புறம் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரோச், அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

47.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 இலக்குகளை இழந்து 230 ஓட்டங்கள் எடுத்து 'திரில்' வெற்றி பெற்றது. பங்கேற்ற இரண்டு போட்டியிலும் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்திய அணியும் இலங்கை அணியும் மோதவுள்ளன.

(ற)

# ஆசியத் தடகள சம்மேளனத்தில் சுசந்திகா



ஆசிய தடகளப் போட்டிச் சங்கத் தலைவர் தேர்தல் நேற்றுத் திங்கட்கிழமை இந்தியா, பூனே பிரதேசத்தில் இடம்பெற்றது.

ஆசியத் தடகளச் சம்மேளனத்தின் தலைவராக கட்டார் நாட்டைச் சேர்ந்த தல்ஹான் ஹமாத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை பெண்கள் சிறுவர் சம்மேளனத்தின் உப தலைவராக சுசந்திகா ஜயசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆசியத் தடகளப் போட்டிகள் இந்தியாவின் புனே நகரில் இம்மாதம் மூன்றாம் திகதி தொடங்கி ஏழாம் திகதி வரை நடைபெறவுள்ளன.

**மாபெரும் ஆடித் தள்ளுபடி**

வீட்டுத் தளபாடங்களை மிகவும்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள இன்றே
நாடுங்கள்.
இலுப்பையடிச் சந்திக்கும்
ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்
0778314201,
0773583879 (410184)

எடிசன் அக்கடமி
**காசாளர்கள் தேவை (பெண் காசாளர்கள்)**

நல்லூரிலும் கொக்குவிலிலும் இயங்கும் எடிசன் அக்கடமியின் 2 கிளை நிறுவனத்திற்கும் நிறுவனத்தை மேற்பார்வை செய்து நடத்தப் பெண் காசாளர்கள் இருவர் உடனடியாகத் தேவை.
ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு:- 0750414979
அல்லது யாழ். எடிசனிற்கு பி.ப. 3 மணிமுதல் 6 மணிவரை நேரில் வரவும்.
நிர்வாகி. எடிசன் அக்கடமி. (சி/10179)

வியப்பு, விந்தை, ஆரவாரமாக
திசைகாட்டி அறிமுகப்படுத்தும்

**இத்தாலி
விசா ஆலோசனை
(6 பேருக்கு மட்டும்)**

*100% சட்ட ரீதியாக செல்ல
மிகக் குறைந்த கட்டணத்துடன்
சட்ட ஆலோசனை*

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016, 0215689090

**கார் விற்பனைக்கு**

18 - XXXX
தொடரிலக்கமுடைய
NISSAN Palsure
கார் உடன் விற்பனைக்குண்டு
தொ.பே: 0771169182 (சி-10163)

**Sky Computers (Pvt) Ltd**
**இல. 89, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**(கச்சேரிக்கு அருகாமையில்)**
அனைத்துப் பாடத்திற்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்.
Ms office, DTP, Video Mixing, Web Design, Graphic Design, Hardware, Computer Type Setting, Internet & E-mail, Kids Programme
**சிங்கள வகுப்பு**
By:A.K.Moorthy(யாழ் பிரபல ஆசிரியர்)
பிரிவு 1 – திங், வெள் – 4:30 pm
பிரிவு 2 – செவ், வியா – 4:30 pm
குறிப்பு: அரச ஊழியர்களிற்கான Level I, Level II, Level III ற்கான வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
தொ.பே - 021 222 1417, 0779672038

**வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்**
வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள தகவல்தொழில்நுட்ப டிகிரி
G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்க முடியும்.
மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)
புலமைப்பரிசிலிற்கு: Type <BIT><your name> & send to 772 395 895

உங்கள் கிணற்றுநீரில் எண்ணெய் படலம், நைத்திரேற் என்பன காணப்படுகிறதா என்று அறிந்து தீர்வு காண்பதற்கு ஆசையா
uv water solution
277, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே.: 0717273686
(38755)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.